556
41598

மத்தளங் கற்கும் முறையும் அதன் சிறப்பு வகையும்

556/1-49
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 MAR 1949
MADRAS

WITH COURAGE AND FAITH

41598
NR21;44
N48
101,258

1948

மத்தளங் கற்கும் முறையும் அதன் சிறப்பு வகையும்

பன்னிரண்டாந் தொகுதி

(இரண்டாம் பகுதி)

ஆக்கியோர்
சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள்

தொகுத்தவர்
பண்டித வித்துவான்
லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOO
15 MAR 1949
MADRAS

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால்
தருமபுர ஆதீனம் ஞானசம்பந்தம் அச்சகத்திலும்
திருச்சி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட்டிலும்
பதிப்பிக்கப்பெற்றது.

[ப்புரிமை] 1948 [விலை ரூ. 1-6-0

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து இசைத்தமிழ் வெளியீடு 12 பகுதி - 2

மத்தளங் கற்கும் முறையும் அதன் சிறப்பு வகையும்

பன்னிரண்டாந் தொகுதி

(இரண்டாம் பகுதி)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 MAR 1949
MADRAS

WITH COURAGE AND FAITH

A1598
58

1948

41598

OFFICE OF THE REGISTRAR OF BOO[KS]
15 MAR 1949
MADRAS

பொருளடக்கம்

1. கடவுள் வாழ்த்தும் பல்கலைக்கழக வாழ்த்தும்.

2. செட்டிநாட்டரசரின் நிழற்படம்.

3. செட்டிநாட்டரசர் வாழ்த்து.

4. இசைக்கல்லூரியின் நிழற்படம்.

		பக்கம்
5.	முகவுரை. (பிடில் ஆசிரியர் திரு. K. S. சிவவடிவேல் பிள்ளை அவர்கள்.)	I
6.	உள்ளுறை.	IV
7.	நூல்.	1

மகாமகோபாத்தியாய பண்டிதமணி

திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்

இயற்றியவை.

கடவுள் வாழ்த்து

ஆசிரிய விருத்தம்

பூவார் மணம்போல் உலகமெலாம்
பொருந்தி யியங்கும் பெரும்பொருளே
புனிதம் நிறைந்த வுணர்வுடையோர்
புகழிற் கிடக்கும் புண்ணியனே

நாவார் கலைகள் துணிபொருளா
நவில்நா யகனே மெய்யுணர்வின்
நலமார் வடிவே யகவிருளை
நவிந்து விளங்கி நல்லன்பர்

தூவார் உளத்திற் சுடர்விளக்கே
துகளற் றொடுங்கித் தமைமறந்து
துய்ப்பார்க் கினிய செழுந்தேனே
தோன்றாத் துணையே அறுவரெனும்

மேவார் தமைச்செற் றுளந்தெளிந்தோர்
வினைமா சறுக்கும் மெய்ப்பொருளே
விரும்பிப் பணியும் எம்மையருள்
வெள்ளத் தியைத்துக் காத்தருளே.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வாழ்த்து

கட்டளைக் கலித்துறை

கண்ணார் மணியிற் புரப்போ ரெனும்பொருட் கார்பொழிந்த
தண்ணார் நிதிநீர்ச் செழிப்பிற் கலைப்பயிர் தான்வளர்க்கும்
அண்ணா மலைப்பல் கலைக்கழ கப்பே ரணிநிலையம்
விண்ணார் புகழொடு நாளு மோங்கி விளங்குகவே.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவிய

செட்டி நாட்டரசர்

டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்

மகாமகோபாத்தியாய பண்டிதமணி

திரு. மு கதிரேசச் செட்டியாரவர்கள்

கூறியவை

செட்டிநாட்டு அரசர் அவர்களின் உருவச் சிறப்பு

ஊக்கம் உறுதி உணர்ச்சி யருஞ்செயலின்
ஆக்கம் அறம்புகழன் பாண்மைமுதல்—நீக்கமறக்
காண்டற் கமைந்த கவினுருஅண் ணாமலைமன்
ஆண்டகையின் நல்லுருவ மாம்.

பாராட்டு

சீர்மலி கொடையால் அறிவினல் ஆற்றுஞ்
 செயற்கருஞ் செயலினல் உலகிற்
பேர்மலி புகழாற் பல்கலைக் கழகம்
 நிறுவிய பெருமையாற் சிறந்தோன்
ஏர்மலி தருநல் இசைத்தமிழ் வளர்த்த
 ஏந்தல்நம் செட்டிநாட் டரசாம்
நார்மலி யுளத்தண் ணாமலை வள்ளல்
 நலமுறு சீர்த்திவா ழியவே.



இசைக்கல்லூரி (அண்ணுமலைப் பல்கலைக் கழகம்)

முகவுரை

பிடில் ஆசிரியர் திரு. K. S. சிவவடிவேல் பிள்ளை அவர்கள் எழுதியது.

இசை யென்பது எல்லா வுயிர்களையும் தன் வசப் படுத்த வல்லது. ஆடு, மாடு முதலிய விலங்குகளும் புல் லாங்குழல் முதலியவற்றின் இசையைக் கேட்டுத் தம்மை மறந்து அவ்விசையின் இனிமையில் ஈடுபடுகின்றன. நஞ்சுடைய பாம்புகளும் மகுடியின் ஓசையைக் கேட்டு அவ்வின்னோசையிற் பிணிப்புற்று அடங்கிவிடுகின்றன. ஏதுமறியாத இளங்குழந்தைகளும் தம் அன்னையர் பாடும் இன்னிசையைக் கேட்டுத் தம் அழுகை தணிந்து அயர்ந்து தூங்குகின்றனர். எல்லாம் வல்ல இறைவனும் இசையில் விருப்புற்று நாளும் இன்னிசையால் தன்னைப் பாடும் அடி யார்க்கு இன்னருள் பாலிக்கின்றான்.

எல்லா வுயிர்களையும் அமைதியுடன் வாழச்செய்யும் ஆற்றல்பெற்ற இசையினை முதன்முதல் வரையறை செய்து வளர்த்தவர்கள் பழங்காலத்துத் தமிழர்களே. நம் முன்னோர்கள் தமிழை இயல், இசை, நாடகம் என மூன்று கப் பிரித்துச் சிறப்புப்பற்றி இசையினை நடுநாயகமாக வைத்துப் பெரிதும் போற்றி வந்தனர். கண்டத்தாற் பாடும் இசைக்கு உடனியைந்து சிறப்பளிப்பன யாழும் குழலும் முதலிய நரம்புக் கருவிகளும், தாளம் முதலிய கஞ்சக் கருவிகளும், மத்தளம் முதலிய தோற்கருவிகளும் ஆகும். இக்கருவிகளின் இயல்பும், இவற்றை அமைக்கும் முறையும், இயக்கும் முறையும் ஆகிய எல்லா விதிகளும் சிலப்பதிகாரம் முதலிய பழைய தமிழ் நூல்களில் அங் கங்கே குறிக்கப்பட்டுள்ளன. இக்கருவிகளுள் இசை நாடகங்களுக்கு மிகவும் இன்றியமையாத தோற்கருவி

யாய் விளங்குவது மத்தளம் அல்லது மிருதங்கம் என்பதாகும். இது சிவபெருமானுடைய தமருகம் என்ற வாத்தியத்திலிருந்து தோன்றிய தெய்வத்தன்மையுடையதாகக் கருதப்பெறுகின்றது. இசைக்கு இன்றியமையாத கருவியாகிய மத்தளத்தைப்பற்றியும், பிற இசைக்கருவிகளைப் பற்றியும் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் விருப்பம் நம் நாட்டு மக்கள் மனத்தில் வரவர வளர்ந்து வருகின்றது. இந்நிலையில் கோயமுத்தூர்த் தமிழ்ப் புலவர் சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள் தம் இயலிசைப் புலமையாற் பெரிதும் ஆராய்ந்து எழுதிய 'மத்தளங் கற்கும் முறை' என்னும் இந்நூல் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழிசை வெளியீடு பன்னிரண்டாந் தொகுதியின் இரண்டாம் பகுதியாக வெளிவருவது பெரிதும் பொருத்தமுடையதேயாகும்.

இந்நூலினை எழுதியுதவிய தமிழ்ப்புலவர் சி.கு. நாராயணசாமி முதலியாரவர்கள் அண்மையில் காலஞ்சென்றமை யறிந்து வருந்துகின்றோம். இந்நூலில் மிருதங்கத்தின் சிறப்பு, அதனைச் செய்யும் முறை, செய்தற்கேற்ற மரம் முதலிய சாதனங்கள், மிருதங்கத்தை வாசிப்பவர்கள் பெற்றிருக்கவேண்டிய தகுதிகள், கேட்பவர்கள் இன்புறும்படி மிருதங்கத்தை வாசிக்கும் முறை, அதன்கண் வாசித்தற்குரிய தாளச்சொற்கள் முதலிய பல அரிய கருத்துக்களை இந்நூலாசிரியர் மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார். இந்நூல், மிருதங்கத்தை வாசிக்கும் மாணவர்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும். சரித்திரப் பெருமை வாய்ந்ததும், தமிழ் நூல்களில் விரிவாகப் பாராட்டப் பெறுவதுமாகிய மத்தளத்தைப்பற்றி முதலியாரவர்கள் ஆராய்ந்து எழுதியிருப்பது பெரிதும் பாராட்டுதற்குரிய தொன்றும்.

இசை பயிலும் மாணவர் எல்லோர்க்கும் தெரிய வேண்டிய இன்றியமையாத பல கருத்துக்களும் இந் நூலில் விளக்கப்பெற்றுள்ளன. ஆதலால் இந்நூல் இசையில் ஆர்வமுடைய எல்லாரும் படித்துப் பயன்பெறு தற்குரியதாகும்.

தமிழிசை யியக்கத்தைத் தோற்றுவித்து இவ்வாறு இசைபற்றிய தமிழ் நூல்கள் வெளிவரப் பெருந் தொண்டாற்றிய பெருமை, செட்டிநாட்டரசர், சர் அண்ணாமலை வள்ளலார்க்கே உரியதாகும். தம் தந்தையார் அறிவுறுத்திய வழியினைப் பின்பற்றிக் கல்விப்பணி புரிந்து வரும் உயர்திரு. ராஜா சர் முத்தையா செட்டியாரவர்களும், அவர்களின் தம்பிமார்களும் தம் தந்தையாரவர்களைப்போலவே தமிழிசை வளர்ச்சியிற் பேரார்வமுடையவர்களாய் இசைத்தமிழ் நூல் வெளியீட்டிற்கு வேண்டும் ஆதரவளித்து வருகின்றார்கள். அவர்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகும்.

இசைத்தமிழ் நூல் வெளியீட்டில் ஊக்கம் கொண்டுழைக்கும் நம் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளரும், தமிழிசை ஆலோசனைக் குழுவின் அமைச்சரும் ஆகிய பண்டித வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்கள் இந்நூல் விரைவில் வெளிவருதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். இந்நூலை அச்சிடுங்கால் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள், பிழை நேராவண்ணம் திருத்தினார்கள். இவர்களிருவருக்கும் பல்கலைக்கழகத்தின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அண்ணாமலை நகர்
13—12—48.

உள்ளுறை

எண்	பெயர்		பக்கம்
1	அநுமபரத சுலோகக் கருத்து	...	6
2	ஆனந்தம்	...	9
3	இசைக்கருவிகளும் அவற்றின் வகைதொகைகளும்	...	7
4	இரண்டாம் பகுதி	...	51
5	எழுவகைத் தோற்கருவிகள்	...	12
6	எழு கவுத்துவங்கள்	...	101
7	ஒலிகள்	...	42
8	ஒலியின் தத்துவம்	...	43
9	ஒலியின் மாறுபாட்டுக் காரணம்	...	37
10	ஒலியும் இசையும்	...	42
11	கட்டையின் கனமும் விறைப்பும்	...	39
12	கணபதி கவுத்துவம்	...	101
13	கண்களும்—அளவும்	...	33
14	கரணை, சாந்துவைத்து நாதங்கிளம்பச்செய்யும் விதம்	...	34
15	கனம்	...	11
16	சங்கீத ஷடாங்கத்திலும் மத்தளம் ஓர் அங்கமென்பது	...	93
17	சதுரஜ்ர ஜதி பேதங்கள்	...	79
18	சமபாணி ஹஸ்த பாடங்கள்	...	72
19	சிதம்பரம் நடேசர் கவுத்துவம்	...	103
20	சீர்காழி சம்பந்தர் கவுத்துவம்	...	102
21	சுத்த மத்தளம் சிவாலயங்களில் வாசிக்கும் வழக்கம்	...	93
22	சுஷிரம்	...	11
23	'டேகா' என்ற சொல்லை உபயோகிக்கும் விதம்	...	61
24	தண்ணுமைக் கருவியைச் செய்யும் விதம்	...	30
25	தாளத்தொனி வகை	...	80
26	தாள முறை	...	77

எண்	பெயர்		பக்கம்
27	திருச்செங்கோடு விஷ்ணு கவுத்துவம்	...	104
28	திருமுருகன் கவுத்துவம்	...	101
29	திருவாலங்காடு காளி கவுத்துவம்	...	104
30	தொப்பி	...	36
31	தோலின் திண்மை	...	39
32	தோலின் பரப்பு	...	38
33	தோல் வகையும் வாரும்	...	32
34	தோற்றுவாய்	...	1
35	நாகபந்தாதி கிருதிஹஸ்த பாடங்கள்	...	65
36	பயிற்சி	...	63
37	பரன் (Fern) என்னும் மத்தளச்சொல்லைப் பயிலும் விதம்	...	58
38	பாணர்	...	24
39	மதுராபுரிச் சொக்கர் கவுத்துவம்	...	106
40	மத்தளக்காரர்கள் கைக்கொள்ளவேண்டிய கட்டாய விதிகளும் விலக்குகளும்	...	95
41	மத்தளக்காரனின் குண லட்சணங்கள்	...	92
42	மத்தளக்காரன் கற்றிருக்கவேண்டுவதும், கைக்கொள்ள வேண்டுவதுமான சில கடமைகள்	...	89
43	மத்தள சம்பந்தமான, பொது—சிறப்புக் காரணக் குறிப்புகள். தண்ணுமை (மத்தளம்) ஆசிரியன்	...	87
44	மத்தளத் தியான சுலோகம்	...	91
45	மத்தளத்தில் உண்டாகும் கார்வை	...	38
46	மத்தளத்தில் ஒலிக்கின்ற ஸ்தாயிகள்	...	45
47	மத்தளத்திற்கு உறையிடும் முறையும், தியானம் முதலியவைகளும்	...	98
48	மத்தளத்தின் அளவு முதலியன	...	31
49	மத்தளத்தின் சிறப்பைப்பற்றி ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் கூறியது	...	26

எண்	பெயர்		பக்கம்
50	மத்தள பாடத்திற்குரிய தாளச்சொற்கள்	...	66
51	மத்தளப் பெயர்க்காரணமும்—அப்பெயர் பயிலும் நூல்களும்	...	17
52	மத்தளமும் அதன் வரலாறும்	...	2
53	மத்தளம் கற்கும் மாணவர்கள் மத்தளத்தில் பயிலும் சில தாளச்சொற்களைத் தெளிவாக உணர்தற்குரிய விளக்கங்கள்	...	57
54	மத்தளம் கற்பதற்குரிய சொற்களும்—அவை தோன்றிய விதங்களும்	...	53
55	மத்தளம் கற்பதற்குரிய தாளச்சொற்கள் முதலியன	...	49
56	மத்தளம் செய்யப்படும் மரவகை	...	31
57	மத்தளம் செய்யும் மரத்தின் வயது	...	100
58	மத்தள வாத்தியமும்—அது இக்காலத்தில் பண்பட்டு உயர்ந்து விளங்கும் சிறப்பும்	...	27
59	மரப்புள்ளுகள்	...	41
60	மிருதங்கம் கோடரி என்ற சொற்கட்டு	...	107
61	மூட்டிடுதல்	...	32
62	மோரா அல்லது தீர்மானம் என்பதன் விளக்கம்	...	60
63	ரூபகதாள ஜதி, திரிபுடதாள ஜதி	...	80
64	வலந்தரையும்—தட்டுகளும்	...	34
65	வில்லிபுத்தூர் நாச்சியார் கவுத்துவம்	...	105
66	வெட்டுத்தட்டு	...	40
67	ஹஸ்தகிருத்திய பாடங்கள்	...	69
68	ஜதி, இலக்ஷணம்	...	78

தோற்றுவாய்

மிகப் பழமையுடையதும், தோற்கருவிகளில் தலை சிறந்ததும், இசை, கூத்து இவைகட்கு இன்றியமையாததும், இயம்புதற்கரிய சிறப்புமிக்கதும், தன்னுள் எழும் இன்னோசையால் கேட்போர் செவிகளுக்கும், சிந்தைக்கும் பேரானந்தத்தை அளிப்பதும், செஞ்சடை வானவனாகிய சிவபெருமானது "தமருகம்" என்ற வாத்தியத்தினின்று தோன்றியதும் காத்தற் கடவுளாகிய திருமாலும் சிவ கணத்தலைவராகிய நந்திதேவரும் ஆடவல்ல பெருமானுடைய திருக்கூத்துக்கு ஏற்புடைய சதிகளைத் தகுதிபெற முழக்குவதற்கு இன்னிசைக் கருவியாக இலங்கும் ஏற்றமுடையதும், பண்ணிசைக்கும் பாடலாளர்க்குப் பக்க வாத்தியமாகப் பரிமளிப்பதும், தேவர் முனிவர் வேத பாடகர், வித்துவான்கள், அரசர்கள், செல்வம்பெற்ற திருவாளர்கள், இசையுணர்ந்தின்புறும் கலாவிற்பன்னர்கள் முதலானோர் விரும்பிக்கேட்கும் சிறப்புடையதும், சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை முதலிய தமிழ்ப் பெருங்காப்பியங்களிலும்; அகநானூறு, புறநானூறு, மலைபடுகடாம், நற்றிணை, பெரும்பாணாற்றுப்படை முதலிய சங்க நூல்களிலும், பஞ்சபரதம், உமாபரதம், தமருகப் பிரகாசிகை, சங்கீதரத்நாகரம், நந்திமரபு, சுத்தானந்தப் பிரகாசம், அகத்தியபரதம், அநுமபரதம், சங்கீத சமயசாரம், சங்கீத கல்பலதாமஞ்சரி முதலிய வடமொழி தென்மொழி இசைநூல்களிலும் தண்ணுமை – மத்தளம் – மிருதங்கம் என்ற பெயர்களைப் பெற்றுப் பெரிதும் சிறப்பித்துப் புகழ்ந்தோதப் படுவதுமான மத்தளத்தையும், அதனைப் பயின்று தேர்ச்சி பெறும் முறைகளையும்; உருவம்,

அமைப்பு, ஒலிவகை, தாளவகை, ஜதிமுறை, மத்தள பாடங்கள், அவை பயிலும்வகை, தாளச் சொற்கள், அவைகளை மத்தளத்தில் உபயோகிக்கும் விதம், மத்தள ஆசிரியன் இலக்கணம், மத்தளத்தின் சிறப்பு முதலிய மற்றும் சில விஷயங்களையும் எளிய முறையில் சுருங்கியவகையில் முறையாகக்கோத்து நிரல்படத் தக்க சான்றுகளுடன் நான்முறையில் தொகுத்து இக்கட்டுரை வரையப் பெற்றிருக்கிறது. அவை அடியில் வருமாறு.

1. தண்ணுமை என்னும் மத்தளமும், வரலாறும்.

தொன்மை மிக்கதொரு காலத்தில் சர்வலோக நாயகனாகிய சதாசிவன், ஆன்மாக்களின் நன்மையின் பொருட்டுத் தமது கயிலாய மலையினின்றும் இன்பம் பயக்கவல்ல இனியதொரு திருவிளையாடல் கருதி, தமது திருக் கரத்தில் விளங்கும் உடுக்கை அல்லது தமருகம் என்ற வாத்தியத்தை ஓசையுண்டாகும்படி ஆட்டியவண்ணம் திருநடனஞ் செய்தருளினர். அப்பொழுது அத் தமருகத் தின்கண் எழுந்த ஒலியினின்றும் வேதங்களும், வேத மொழிகளும், தாளங்களும், ஜதிச்சொற்களும் தோன்றின. மூல எழுத்துக்களான அப் பீசாட்சரங்கள் அதிர்ச்சியும், அதிசயமும், அச்சமும் தரக்கூடியனவாயிருந்தன. அத் தொனிகளைக் கேட்டுத் தேவர்களும், முனிவர்களும் மிகவும் அஞ்சி அப்பால் அகன்றோடினர். அவர்கள் அங்ஙனம் அஞ்சி அகன்று ஒடுவதைக்கண்ட ஆதிமூர்த்தியாகிய அம்பிகைபாகன், அத்தமருகத்தை இடைமுறித்து மற்றோர் ஆயுதமாகச் செய்தனர். அது-தண்ணுமை, மத்தளம் முதலிய பெயர்களுடன் புதியதோர் உருவத்தில் பூரித்து விளங்கியது. அதனைத் தாமே தமது திருக்கரங்களால்

இனிய நாதம் எழும்படி இன்னிசை தவழ இன்புற முழக்கினர். இசை மயமும் இன்னிசைத் தொனியும், இதயக் களிப்பும் மிக்க பிரணவ வடிவாகிய அவ்வோசைக்கு உளமிக மகிழ்ந்த தேவரும் முனிவரும் அம்பலத்தாடும் அண்ணலின் அருகணைந்தனர். அங்ஙனம் அணைந்த அவர்களை அமலன் ஆசிர்வதித்து மீண்டும் தமது திரு நடனத்தைச் செய்தருளினர். அந்நடனத்திற்குச் செங்கண்மாலாகிய பெருமான், அம் மத்தளத்தை இன்னோசை யெழ எடுத்து முழக்கினர். படைப்புக் கடவுளாகிய நான்முகன் மாலினது மத்தளக் கொட்டுக்குப் பொருந்தக் கைத்தாளம் தட்டினர். அம்பலத்தரசின் ஆனந்தக்கூத்தும், மாதவனது மத்தளமுழக்கமும், நாவின் கிழத்தி நாயகனாகிய நான்முகனின் தாளத்தட்டும் அமுதமயமான ஆனந்தத்தை அளித்தன. அமரரும் முனிவரும் அகமகிழக் கேட்டு ஆனந்தவாரிதியில் ஆழ்ந்தனர். இவ்வகையில் ஏற்றம் பெற்றுத் தோன்றியதே ஆனந்தவாத்தியமாகிய மத்தளம். இச்செய்தியைத் தமருகப்பிரகாசிகை என்ற வடமொழி நூல் விளக்கமாகக் கூறுகின்றது. இச்செய்தியினால், ஆதியில் சிவபெருமான் தமது தமருக வாத்தியத்தினின்றும் இசைக்கருவியாகிய மத்தளத்தைத் தோற்றுவித்தார் என்பது உறுதிபெறுகின்றது.

ஊழிமுதல்வனாகிய உயர்பெருங் கூத்தன், திருக்கூத்தாடியபோது தமது தமருகத்தினின்றும் எழுவித்த நாதமே பிரணவமந்திரமாய், வியாகரண சூத்திரங்களுக்கு மூலமென்று நந்திகேஸ்வரப்பிரகாசிகை என்ற வடமொழி நூல் முதல் அத்தியாயத்தில் சுலோகம் ஒன்றிற் காணப்படுகிறது. அச்சுலோகம் :—

"நிருத்தாவஸானே நடராஜராஜோ
நநாத டக்காம் நவபஞ்சவாரம்
உத்தர்த்து காமஸ் ஸனகாதி ஸித்தா
னேதத்விமர்சே சிவஸூத்திரஜாலம்."

என்பது. வியாகரணம் = இலக்கணம்.

மற்றும்—"தருப்பொலியும் அமரர் பதிக்கா சானவன்
சபையில் நடராச ரங்கைத்
தமருகத் தெழுசத்த சூத்திர வியாகரண
சாகரந்தான் விரித்தோன்".

என்றும்,

"குமுதபதி வகிரமுது சிந்தச் சிந்தச்
சரணபரி புரசுருதி கொஞ்சக் கொஞ்சக்
குடிலசடை பவுரிகொடு தொங்கப் பங்கிற்—கொடியாடக்
குடிலதனி அசைய விசை பொங்கப் பொங்கக்
கழலதிர டெகுடகுட டெங்கட் டெங்கக்
குகுதொகுகு குகுதொகுகு குங்கத் தொங்கக்—குகுதிதோ
திமிதமென முழவொலி முழங்கச் செங்கைத்
தமருகம திர்சதியோ டன்பர்க் கின்பத்
திறமுதவு பாதகுரு வந்திக்குஞ் சற்குருநாதா".

(திருப்புகழ்)

என்றும்; பெரியோர் கூறுதல் காண்க. அன்றியும்,

"மால்கை மத்தளம் தணுதணுவென
மலரவன் தாளம் கணீர் கணீரென"

"சதுர்முகன் இசைக்கொத்தங் கருகில் தாளந்தட்ட
ஜதையறிந்து அயன்றூதை தூக்கி மத்தளங் கொட்ட"

என்று பக்த சிரோமணியாகிய சீர்காழி, முத்துத் தாண்டவர் பத்திவெள்ளம் ஊற்றெடுப்பப் பாடிய முத்துத் தாண்டவர் கீர்த்தனையினால், கூத்துடையான்றன் கூத்துக்குத் திருமால் மத்தளமும், பிரமன் கைத்தாளமும் தட்டினரென்பது வலியுறுகின்றது.

இச்சான்றே யன்றி, மற்றொரு பெருஞ்சான்றும் காட்சிப் பிரமாணமாகவுள்ளது. அது—'சிவகஞ்சியில் திரு ஏகம்பர் ஆலயத்தில் மூர்த்தங்கொண்டருளும் இலிங்கத்திற்கு மத்தளமாதவன் என்று பெயர் இருப்பதாம். விஷ்ணுமூர்த்தி, சிவன் கூத்துக்கு மத்தளங்கொட்டியதன் நினைவுக்கு அறிகுறியாகவே மகாதேவன், மத்தளமாதவன் என்ற பெயருடன் இலிங்கவுருவமாகக் கோயில்கொண்டிருக்கின்றனர். அந்த இலிங்கமூர்த்தம் ஏகாம்பரர் சந்நிதியில் மார்க்கண்டேயர் பூசித்த இலிங்கத்துக்கு அடுத்து விளங்குவதே என்று ஆன்றோர் கூறுகின்றனர்.

இவையேயன்றித் தென்னிந்தியாவில் ஆங்காங்கு விளங்கும் சிவாலயங்களில் நிறுத்தப்பெற்றுள்ள சிற்பத் தூண்களில் சிற்சபாநாதன் திருக்கூத்தாடுவது போலவும், திருமால் மத்தளம் கொட்டுவது போலவும், பிரமன் கைத்தாளம் தட்டுவது போலவும் உள்ள சிற்பத் திருவுருவங்கள் சித்திரிக்கப்பட்டிருப்பது மேற்கூறிய நிகழ்ச்சியின் காட்சிப் பிரமாணமாகும்.

இங்ஙனம், சுருதி-காட்சி — சிற்பம் ஆகிய சான்றுகள், சிற்சபாநாதன் தமருகத்தை அசைத்து மத்தளக்கருவியைத் தோற்றுவித்த செய்தி உண்மைதான் என்பதை மெய்ப்பிக்கின்றன. இஃது இவ்வாறாக, வடமொழியிலுள்ள

பரதகல்பலதாமஞ்சரி அநுமபரதம் என்னும் நூல்கள், மத்தளத்தின் பிறப்பைப்பற்றி வெவ்வேறு விதமாக விளம்புகின்றன. அவை:—

சுலோகம்.

"புராமுரா சுரம் ஹத்வா—பகவாந் பக்தவத்ஸல:
தத்களேபரமாதாய மர்த்தலம் க்ருதவாந் பிரபு:"

(பரதகல்பலதாமஞ்சரி)

(பொருள்) பூர்வகாலத்தில் தமது பக்தர்களிடத்தில் பேரன்புகொண்ட நாராயணமூர்த்தி, முராசுரன் என்ற இராக்கதனைக் கொன்று அவனது தேகத்தை மத்தளமாகச் செய்தனர் என்பது.

அநுமபரத சுலோகக் கருத்து.

மிருதங்கன் என்ற ஓர் அசுரன், பூர்வத்தில் வாயு தேவனால் ஒரு குற்றங் காரணமாகப் பலமாகத் தாக்கப் பட்டனன். அதனால் அவனது வலியதேகம், சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டு உயிர்நீங்கிக் கயிலாயத்தின் சிகரமொன்றில் பிணமாய்க் கிடந்தது. அப்பிணத்தின் பிரதான உறுப்பாகிய சிரசைத் துண்டித்து மத்தளம்போல் உருச்செய்து அதன் இருபுறங்களுக்கும் புலித்தோலால் முகபந்தனமிட்டு, ஆதிதாளம் முதல் பல தாளங்களுடன் நந்திகேஸ்வரர் இனிமைபெற முழக்கினர். இசைப்பிரிய ராகிய பரமசிவன் கேட்டு மகிழ்ந்து அம்மத்தள வாத்தியத் திற்கேற்ப ஆனந்தத் தாண்டவம் ஆடினர் என்பது.

நந்திதேவர் மத்தளங்கொட்டிய கையை, அர்த்தசந்திர ஹஸ்தம் என்று அபிநயதர்ப்பணம் கூறுகிறது.

மேலே காட்டிய இருவகை வரலாறுகளில் எதனைக் கொள்வது? எதனைத் தள்ளுவது? என்று அறியமாட்டா மல் மயக்கமுண்டாவதால், அறிஞர்களே அவற்றின் உண்மை காணும்படி விடுகின்றோம்.

மத்தளக்கருவியின் தோற்றந்தான் இவ்வாறு மாறு பட்டுளதென்றால், திருக்கயிலையில் சிவனெம்மிறை ஓர் திருவிளையாடல் கருதித் திருநடனம் செய்தபோது நாரண னும், நான்முகனும் முறையே மத்தளமும், கைத்தாளமும் கொட்டித் தட்டினரென்று தமருகப்பிரகாசிகை கூறிய திருக்க, சிவநிருத்திய மகாத்மியம் என்ற வடமொழிநூல், அந்நிருத்தியம், பிரதோஷகாலத்தில் கயிலைமலையில் கண்ணு தற்கடவுளால் நடிக்கப்பட்டதென்றும், அந்நடனத்திற்குத் திருமால் மட்டும் மத்தளம் கொட்டினர் என்றும் கூறு கின்றது.

இவ்விஷயத்தையும் முன்னர் மத்தளப் பிறப்பைப் பற்றிய மாறுபாட்டை வாசகர்கள் ஆராய்ந்து உண்மை காணும்படி விட்டதுபோல் விடுகின்றோம்.

2. இன்னிசையெழும் இசைக்கருவிகளும்—அவற்றின் வகை—தொகைகளும்

"ததம் வாத்யம் ததா ந்ருத்யம்—த்ரயம்ஸங்கீத முச் யதே" என்பது வடமொழி சுலோகம். இச் சுலோகத்தின் படி. - இசை - வாத்தியம் - நடனம் ஆகிய மூன்றினுள் நடுவிலுள்ள வாத்தியமாகிய மத்தளத்தைப் பற்றி மட்டும் இங்கு முதன்மையாக ஆராய்ந்துகூற முற்படுகின்றேன்:—

வாத்தியம் என்பது - இசைக்கருவிகளில் ஒன்றை இசையுடன் கூட்டி யிலயத்துடன் இன்னோசையெழ இசைப்பது. அவ்வாத்தியம் நான்கு வகைப்படும் அவை ததம், ஆனத்தம் அல்லது ஆனந்தம், சுஷிரம், கனம் என்பன. இவை வடமொழிப்பெயர்கள். தமிழ்நூல்களில் இவைகள் ஐவகையாகக் கூறப்பட்டுள்ளன. அவை - தோற் கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக் கருவி எனப்பெயர்பெறும். இவற்றுள், மிடறு என்பது தொண்டையைக்குறிப்பது. அது இயல்பான வாய்ப்பாட்டு. அதனை நீக்கி எஞ்சிய நான்கைமட்டும் இசைக்கருவிகளாக நமது முன்னோர் கைக்கொண்டனர். அவற்றை ஆராய் வாம்:—

முதலாவது ததம்:— அது தந்திகளால் ஒலிக்கும் இசைக்கருவிகளின் வகையை விவரிக்கும் ஓர் தலைப்பு. தந்தி வாத்தியங்கள் இருபத்திரண்டு. அவை:— வீணை, கோஷாவதி, சித்ரா, விபஞ்சி, பரிவாதினி, வல்லகி, குஞ்சிகா, ஜ்யேஷ்டா, நகுலோஷ்டி, கின்னரி, ஐயா, கூர்மி, பினுகி, ஹஸ்திகா, சுதந்தரி, ஔதும்பரி, ஷட் கர்ணம், பௌணம் இராவணம், ஹஸ்தம், சாரங்கி, ஆலாபினி, என்பன. (சாரங்கதேவர் இரத்தனுகரம்)

மேலே காட்டிய வடமொழிப் பெயர்கள் போலவே, தமிழிலும் வீணைகளின் பெயர்கள் உள்ளன. அவை:—

சித்திரகோ ஷாவளி சித்திரிகை கூர்மிகை
உற்றசா ரங்க முயர்ராவ ணுசுரம்
கின்னரி வராளி கீஸ்தி குச்சிதை
பன்னு விபஞ்சிகை பரிவா தினியே.

"சகளவல் லகிசர வீணைய ராவிதம்
மகதிப்ர கதிலகு லாகூி ருத்ரிகை
களாவதி கச்சளா காந்தாரி யநுமதம்
என்னும் வீணை யிருபா னிரண்டே"

(பரதசாத்திரம்)

என்பன. இவற்றுள் மகதிவீணை-நாரதருக்கும்; பிரகதி வீணை - தும்புருவிற்கும்; கச்சளாவீணை - கலைமகளுக்கும் களாவதிவீணை-விச்சுவாவசுக்கும்; அனுமத்வீணை-அநுமாருக்கும்; இராவணசுரவீணை-இராவணனுக்கும் உரியனவாம்.

2. ஆனந்தம்.

மத்தளம், தம்பட்டம், உடுக்கை, (உடுக்கு) கரடை, கடம் (மிடா) கடசம், டவசம், டக்கா, குடுக்கை, குடுவா, குஞ்சிகை, டமாரம், டக்கா, மண்டிடக்கை, உக்கிலி, செல்லுகை, சல்லரி பாணம், த்ருவளி, துந்துபி, பேரி, நிஸ்ஸானம், தும்பகி என இருபத்துமூன்று வகைகள்.

மற்றும்—பிம்பகம், தர்ப்பவாத்தியம், தமுக்கு, துர்த்தரம். கனசம், தவில், ஜரவஜம், கமடம், லவண்டை, குண்டலி, துக்களி, தமுகி ஆக இப்பன்னிரண்டும் வாத்தியவகைகளில் வைத்துக்கூறப்பட்டுள்ளன.

இவைகள்—வடமொழி "உமாமகேச்சுரபரதம் சர்வ வாத்திய லட்சணத்தில்" கண்டபடி இங்கு வரையப்பட்டன.

இவையேயன்றித் தமிழின் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்ருகிய சிலப்பதிகார உரையிலும் வாத்திய வகைகள் வரிசைபெறக் கூறப்பட்டுள்ளன. அவை:—

"பேரிகை படக மிடக்கை யுடுக்கை
சீர்மிகு மத்தளஞ் சல்லிகை கரடிகை
திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகந் தண்ணுமை தாவில்தடாரி
யந்தரி முழவொடு சந்திர வளையம்
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளந் துடுமை சிறுபறை யடக்கம்
மாசி றகுணிச்சம் விரலேறு பாகந்
தொக்க வுபாங்கந் துடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத்தனரே"

என்பது,

தோற்கருவிகள் அனைத்திற்கும் "பறை" என்பது பொதுப்பெயரெனச் சங்க நூல்களாலும் பிறநூல்களாலும் தெரிகிறது.

"தெய்வம் உணாவே மா மரம் புள்பறை"

என்று "தொல்காப்பியம்" கருப்பொருட் சூத்திரத்திலும்,

"அனிச்சப்புக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை"

என்று திருக்குறளிலும் பறை என்பது தோற்கருவிப் பொதுப்பெயராகவே கூறப்பட்டுள்ளது கவனித்தற்குரியது.

"மணப்பறை" "பிணப்பறை" என்பவற்றிலும் "பறை சாற்றினன்" முதலிய வழக்குகளிலும் பறையென்பது பல்வேறு தோற்கருவிகளைக் குறித்திருப்பது தெளிவாம். பண்டைக்காலத்தில் "மண்டை" என்னும் பெயர், பறைக்கு வழங்கிவந்த மறு பெயரென்ப. மண்டை

ஓடுபோன்று மண், மரம், பித்தளை, முதலியவற்றுற்செய்து தோல்போர்த்த பறைகளை மண்டை என்பது ஒருவகை உவமை ஆகுபெயர்.

மண்டை என்பது இக்காலத்தில் "மொந்தை" யென்று பெயர் திரிந்து அவ்வடிவாயுள்ள மட்கலத்தைக் குறிக்கின்றது. "தவலை" என்பதன் மறுவடிவாகிய "தபேலா" ஓர் பறையையும், நீர்ப்பாத்திரத்தையும் குறித்தல் காண்க. தபேலா என்பது இந்துஸ்தானிச்சொல். "தவில்" என்னும் கருவிப்பெயரும் இதன் திரிபுபோலும்!

3. சுஷிரம்.

துளைகள் உள்ளதும் வாயில் வைத்து ஊதக்கூடியதுமான வாத்தியவகைகளைக் குறிப்பது. அவை:— வம்ஸம் (புல்லாங்குழல்) மங்கலதூரியம் அல்லது தூரிகை, உக்கா, தாடகி, காஹளம், தித்தி, மதுகரி, சங்கம், (சங்கு) பாரி, நாகஸ்வரம், ஸ்வரநாபி, முரளி, ஒத்து, பிருங்கம், சிருங்கிகை (கொம்பு) காபாலிகம், சர்மவமிசம், முகவீணை, துத்தாரி, திருச்சின்னம், (திருச்சணம்) பாவம், பாவிகை, துண்டுகி, என இருபத்துமூன்றுமாம்.

(உமாமகேச்சுரபாதம்)

4. கனம்.

வெண்கலம், பித்தளை, இரும்பு முதலிய உலோகவகைகளில் செய்யப்பெற்ற தாளக்கருவிகளைக் குறிப்பது. தாளம் என்பது கைத்தாளம், கஞ்சம், கஞ்சனன், கிட்டி, கிணி, பாண்டில் எனப் பல்வகைப் பெயர்பெறும்.

தாளம்போடல் என்பது, ஒத்தறுத்தல், தட்டல், வட்டித்தல் என்ற பெயர்களால் வழங்கப்படும்.

தாளவொத்து என்பது, சதி, சீர், தோற்கருவி, பணி எனப்படும். இத்தாளக்கருவிகள் பல்வகை அளவுகளிற் சிறியதும், பெரியதும், நடுத்தர அளவுள்ளதும், மிகப் பெரியதும் மிகச்சிறியதும் கனத்ததும், இலேசானதும் ஆகப் பலவகையாக இருக்கும். வெண்கலம் முதலிய உலோகங்களில் சாத்திர அளவுப்படி செய்யப்பெறுவன. இவைகள் ஒன்றோடொன்று தட்டியடிக்கும் வகையின்பாற் படுவன. இவற்றைக் 'கணவாத்தியங்கள்' அல்லது "கஞ்சக்கருவிகள்" என்பர். தாளம், ஜாலரா, சப்பளாக் கட்டை, ஆகியவற்றையும், சேகண்டி, கண்டாமணி, கிண் கிணி, முதலியவற்றையும் இவ்வினத்தில் சேர்த்துக் கூறுவர். மற்றும் மணி, சிறுமணி, ஜயமணி, கமீரா, சுத்திப் பட்டம் முதலிய கருவிகளும் லயமாகிய தாளத்திற்கெனவே உபயோகப்படுகிற வாத்தியவகைகளேயாம்.

மேலே கூறப்பட்ட ததம்—ஆனந்தம்—சுஷிரம்—கனம் என்னும் நான்குவகை இசைக்கருவிகள், ச, ரி, க, ம, ப, த, நி, என்ற ஏழுவகைச் சுரங்களாலும் அவற்றின் பேதங்களாலும், த. தி. தொம்-நம் என்னும் நால்வகை ஜதிச்சொற்களாலும், அவற்றிற்கும் மேற்பட்ட தாளக் கெத்துக்களாலும் இயக்கப்படுவனவாம்.

ஏற்றமுறும் எழுவகைத் தோற்கருவிகளும் அவற்றின் இன்றேசையும்—தனிச்சிறப்பும்.

தோற்கருவிகளில் முதல்வைத்தெண்ணக்கூடியன எழு வகையாமென இசை நூல்கள் அளந்து கூறுகின்றன.

அவை:— உத்தமமான மத்தளம்–சல்லிகை–இடக்கை–கரடிகை பேரிகை–படகம்–குடமுழா என்பனவாம். இசைக் கருவிகள் என்பன, இன்னோசைமிக்க வாத்தியவகைகளாம். அவ் வாத்தியங்கள், நாதவாத்தியம், இலயவாத்தியம் என இருவகைப்படும். இவற்றுள் நாதவாத்தியம், பண்ணை இசைக்கும் சுரதானங்கள் அமையப்பெற்றவை. இலய வாத்தியம், மாத்திரையளவான அமிசங்களால் அளக்கப் பட்டுக் கீதத்தைப் பரிமளிக்கச் செய்பவை. மற்றும் நாத வாத்தியங்கள் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி என இசைவாணர்களால் மூன்றுவகையாகப் பகுக்கப் பட்டிருக்கின்றன. மேலும், பண்டைத்தமிழ் மக்க ளிடையே தோலால் மூடப்பட்ட முப்பத்தொரு முழவுகள் வழங்கினவென்று சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையிலிருந்து அறியப்படுகிறது. புறநானூறு, பத்துப் பாட்டு, சீவகசிந்தாமணி, பெருங்கதை, இறையனர் அகப் பொருள் ஆகிய பழைய நூல்கள், வேறுசில முழவுகளின் பெயரையும் நமக்கு அறிவிக்கின்றன. இவை ஒவ்வொன் றும் ஒவ்வொருவகையான ஓசையுடன் கூடியவை என்று தெரிகிறது. மேலே உத்தமமான தோற்கருவிகளில்உயர்ந்த தெனக் கூறப்பெற்ற மத்தளம் வாய்ப்பாட்டிற்குப் பக்க வாத்தியமாகவும், தாளலயத்திற்கும் நுட்பமான சுருதி பேதங்களுக்கும் இன்றியமையாததாகவும், செவ்விய மதுரஞ்சேர்ந்த தீந்தமிழ்ச் சுவைபோல் தெள்ளிய தேவகாதத்தில் தன்னிகரற்றதாகவும் நெடுங்காலத்தி லிருந்தே இசைப் பழக்கத்தில் இருந்துவருவதாகவும் அமைந்த ஓர் இன்னிசைக்கருவி. படகம், பேரிகை, இடக்கை யினுல் முழக்கப்படும் பெருமுரசாகிய இடக்கை, சல் லென்ற ஓசையுடைய சல்லரி, கரடியின் முழக்கம் போன்று ஒலிக்கும் தட்டப்பறையான கரடிகை. பாதி உருண்டை

வடிவமும் உரத்த ஓசையுமுடைய பெரும்பறையான குடமுழா ஆக மேலேகுறித்த ஏழும் "அகமுழவு" எனப் பெயர்பெற்று முதல்தரமானவை என மதிக்கப்பட்டன. தக்கை, தண்ணுமை தகுணிச்சம் என்னும் மூன்றும் "அகப்புறமுழவு" எனப் பெயர்பெற்று நடுத்தரமானவை எனக்கருதப்பட்டன. கணப்பறை என்னும் "புறமுழவு" கீழ்த்தரமானதென்றும், இரங்கற்பறையான "நெய்தற் பறை" புறப்புறமுழவு என்றும் கூறப்பட்டன.

உத்தமமான இசைக்கருவிகளில் தலை சிறந்த தோற் கருவிகள் ஏழு என மேலே கூறியதற்கு உரியசான்று:—

தரித்த மதங்கமொடு மத்தளஞ் சல்லி
பெருத்த காடிகையே பேரி—யுரத்த
படகங் குடமுழவம் பாங்காய வேழும்
அடைவே முதற்கருவி யாம்" (சுத்தானந்தப்பிரகாசம்)

என்ற வெண்பாவாம்.

இவை அன்றி, "பண்ணமைமுழவு" என்பதொன்று. பண்ணமை முழவென்பது-பண்ணமைதியுடைய முழவா கிய மத்தளம் என்க. "பண்ணமை முழவின் கண்ணெறி யறிந்து" என்பது சிலப்பதிகாரம், "தண்ணுமைக் கருவிக் கண்ணெறி தெரிவோர்" என்பது மணிமேகலை. 'கண் ணெறியறிந்து', 'கண்ணெறிதெரிவோர்' என்றவற்றின் பொருளென்னையெனின் கண் என்பது-மத்தளவாத்தியத் தின் வலது முகம், அல்லது மேற்பக்கம் என்று பொருள். அறிதல்=தெரிதல் என்பது. இதன் விளக்கமாவது- மத்தளத்தின் வலது முகத்திலுள்ள கண்கள்தோறும் அமைந்துள்ள கையை, இடக்கையாற் செய்வதனுல் 'இடக்கை' யெனப் பெயராயிற்று. சுருதி, தம்பூர், வீணை,

பிடில், ஆர்மோனியம், வாய்ப்பாட்டு இவைகட்கென நிர்ணயிக்கப்பெற்ற சுருதிவரம்புக்குச் சரியாக ஒத்துளதா என்பதை ஆராய்ந்து உணர்தலாம். இன்பமயமான இவ் இசைக்கருவி கூத்துக்களுக்கு உரித்தாகலானும் பண்ணிற் குரிய எழுத்துக்கள் உள்ளே பிறத்தலானும் இதனை, "நான்முகன்" என்று இசைவாணர் இயம்பலாயினர்.

இருபுறமும் கரங்கொண்டு ஓசை யெழுப்புவது மத்தளமாதலின் மத்தளத்தை முதற்கருவியாக முதல் வைத்துக் கூறினர்.

இவையேயன்றி முரசு, நிசாளம், துடுமை, திமிலை என்னும் நான்கையும் "வீரமுரசு" என வழங்குவர். முரசு மிகப் பெருமையுடையது. தமிழரசர் போருக்குத் துணையாகக்கொண்ட பலகருவிகளுள், வீரமுரசினைத் தெய்வத் தன்மை யுடையதாகக் கொண்டிருந்தனர். 'பலிபெறு முரசம்' எனப் புறநானூறு கூறுவதால் அதற்குப் பலி யிட்டனர் எனத் தெரிகிறது. அரசர்கள் அதனைத் தமது அரண்மனையில் வைத்துப் போற்றிவந்தனர், வீரமுரசே போர்முரசென்பது. இப்போர்முரசுடன் தியாகமுரசு (கொடைமுரசு) மணமுரசு, என்னும் முரசு வகைகளும், நாழிகைமுழவு, காலைமுழவு எனக் காலத்தைத் தெரிவிக்கும் இருமுழவுகளும் இருந்தன. இவைகளுடன் யாமங்கள் தோறும் கொட்டப்படும் பறைகளும் தமிழரசர் அரண் மனைகளுள் இருந்தன. மேலும், இடைசுருங்கிய பறையான உடுக்கையும், மொகு மொகு வென்று ஒலிக்கும் தமருகமும், இணைப்பறையான தடாரியும், குறிஞ்சிநிலப் பறையான தொண்டகமும், பாலைப்பறையான நிரைகோட்பறையும், ஒருகட் பறைகளான பதலையும், மொந்தையும், கைப்பறை யான விரலேறும், செய்திகளை ஊரார்க்கு உணர்த்தும்

பறையான கோட்பறையும், பகைவரிடமிருந்து ஆநிரையைக் கவரும்போது அடிக்கும் ஆகோட்பறையும், சிறுபறை, பெரும்பறை முதலியவும் தமிழகத்தில் வழங்கி வந்தன.

இவ்வண்ணமாகப் பழைய நூல்களிற் காணப்படும் எண்ணிறந்த பலவகைத் தோற்கருவிகளைப் பற்றிய விரிவான செய்திகளை இக்காலத்தில் நாம் சரியாக அறிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். ஆயினும், அவற்றுள் சிலவேனும் இக்காலத்திலும் நம் இடையே வழங்கிவருவது கண்கூடு.

மணமக்கள் மனமகிழ்ச்சியுடன் செய்யும் ஊர்வலங்களிலும் உயிர் உடல் நீங்கியபின் நிகழ்த்தும் பிணக்கோலங்களிலும், இரவு நேரங்களில் ஊர் நடுவில் நடாத்தும் தெருக்கூத்துக்களிலும், திருக்கோயிலில் நிகழும் திருவிழாக்களிலும் தப்பட்டை (தம்பட்டம்) தவண்டை, துடி, தமுக்கு, டமாரம், கொட்டி மத்தளம், கிடுகிடு, உறுமி, உடுக்கை, நகரா, பம்பை, பேரி, சல்லரி, மல்லாரி தவில் முதலிய பலவிதமான இசைகெழுமிய தோற்கருவிகள் முழக்கப்படுகின்றன. இறுதியில் கூறிய தவில் பெரிய மேளத்தில் சிறந்த கருவியாக உபயோகிக்கப்பட்டு வருகின்றது. இக் கருவியைக் கேட்போர் விரும்பும் வண்ணம் சிறந்தவகையில் இசைப்பதில் ஒப்பற்ற திறமையும் ஓங்கிய புகழும்பெற்ற நீடாமங்கலம் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளையும், காலஞ்சென்ற இளைஞர் திரிசிரபுரம் பஞ்சாபிகேசனும், மன்னார்குடி பக்கிரியா பிள்ளையும், சத்திவேலும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

சல்லரி என்று பெயர் வழங்கப்பட்டு வந்த பழைய கைப்பறையே இக்காலத்தில் "கஞ்சிரா" என்னும் பெய

ருடன் விளங்குகிறது. விளிம்பின் நடுப்பாகத்தைச் சுற்றியும் சதங்கைகள் கட்டப்பட்ட இக்கருவி, ஒரு விநோத ஒலியை உண்டாக்குகிறது. இக்கருவியை இசையரங்குகளில் இசைப்பதை விசேடமாகக் கொண்டிருக்கின்றனர். சில யாண்டுகளாக இது பிரபலம் பெற்று வருவதுடன் இதில் வல்லவர்கள் பெருக்கம் பெற்றும் வருகின்றனர். முன்னர், புதுக்கோட்டை மான்பூண்டியா பிள்ளை, தட்சிணாமூர்த்தி பிள்ளை, தலைஞாயிறு இராதா கிருஷ்ணையர் முதலானோர் கைதேர்ந்தவர்களாகஇருந்தனர்.

டோலக் இஃது இக்காலத்தில் புதிதாய் ஏற்பட்ட தோற்கருவி, இசையரங்குகளில் அபூர்வமாக வழங்கி வந்தது. இப்பொழுது அறவேயில்லை. இக்கருவியைச் சுமார் 45-ஆண்டுகளுக்கு முன், "நன்னுமையா சாயபு" என்னும் மகம்மதியரும், அதற்குப்பின் முப்பது ஆண்டு களுக்கு முன்னிருந்த கும்பகோணம் வேணுகோபால் செட்டியாரும் சபைமெச்ச வாசிப்பதில் சிறந்த சமர்த்தராக விளங்கியிருந்தனர்.

மத்தளப் பெயர்க்காரணமும்—அப்பெயர் பயிலும் நூல்களும்.

மத்தளத்தியான சுலோகம்:—

"மூர்த்தித்ரயஸ்வரூபாய-மிருதங்காய நமோ நம:"

என்பது வடமொழி சுலோகம்.

வாத்தியபேதம்:—

"மத்தளம் பம்பை உடுக்கை டமருகம்
ஒத்தவீ ரொன்பதும் வாத்தியப் பொதுவே" (பரதம்)

இன்னிசைக் கருவிகளில் தலை சிறந்து, உயர்ந்த நாத ஒலியுடன் விளங்குவது தோற்கருவியாகிய மத்தளம். அது இன்னிசைப் பண்ணுக்கு இன்றியமையாது வேண்டப் படும் ஏற்றம் வாய்ந்தது. இதனை, இலயவாத்தியம் என்றும், இலயவாத்தியங்களில் முதல் வைத்தெண்ணக் கூடிய சிறப்புடையதென்றும், அதனாலேயே அதற்குத் தண்ணுமை என்ற பெயர் ஏற்பட்டதென்றும், தமிழ் நூல்களில் தொன்மைமிக்கதாய சிலப்பதிகாரத்தில் "தாழ் குரற் றண்ணுமை" என்று சிறப்பித்துக் கூறப்பட்ட தென்றும் தக்கோர் கூறுகின்றனர்.

" * * யாழுங் குழலும்
எங்கிய மிடறும் இசைவன கேட்பக்
கூருகிர்க் கரணங் குறியறிந்து சேர்த்தி
ஆக்கலும் அடக்கலும் மீத்திறம் படாமைச்
சித்திரக்கரணஞ் சிதைவின்று செலுத்தும்
அத்தகு தண்ணுமை" என்பது சிலப்பதிகாரம்.

இத்தோற் கருவிக்குத் தண்ணுமை என்ற பெயரேயன்றி, மத்தளம், மிருதங்கம் என்ற பெயர்களும் வழங்கப்படு கின்றன. மத்து என்பது ஓசைப்பெயர். இசையிடனாகிய கருவிகட்கெல்லாம் தளம் ஆதலின், மத்தளம் என்று பெயராயிற்று. தளம் = உயர்வு அல்லது அடிப்படை. அப்பெயராகிய அடியிலிருந்தே மத்தளம் என்றசொல் தோன்றியிருக்கவேண்டும். இன்சுவைமிக்க இவ்வளவு சிறந்தவாத்தியம் இதற்குமுன் எங்கும் இருந்ததில்லை என்று தெரிகின்றது. இதனைத் தமிழ்நாட்டினர்தவிர மற்ற நாட்டினர் உயர்ந்த முறையில் வாசிக்க முடிவதில்லை.

மிருதங்கம் என்பதற்கு:—

"மர்த்ஸேயித்யதி: ஸம்ஸப்த: மர்த்தளம்
ம்ருதுரவேணஸம்ஸப்தேன—ம்ருதங்கக:"

என்ற வடமொழி சுலோகமும், 'ம்ருதுரவேண' மிருதுத் தன்மையுடனும் மெதுவாகவும் கொட்டுவதனால் எழும் இனிமையான ஒலியினால் "மிருதங்கம்" எனப்பட்டது என்ற அதன் உரையாலும் மிருதங்கத்தின் பெயர் தெளிதல் காண்க.

இனி யாழுங்குழலும், என மேலெடுத்துக்காட்டிய சிலப்பதிகாரப்பகுதியில், 'சேர்ந்தி' என்றுள்ள சொற்றொடருக்கு, அன்பர்கள் செலுத்தி எனப்பொருள்கொண்டு, யாழ்ப்பாடலும், குழல் இசையும், கண்டத்தில்பாடுகின்ற பண்ணிசையும், இயைந்து நடக்கின்றபடி கேட்போர்க்குச் செவிகொள்ளாநிற்கத் தண்ணுமைக் கருவியமைந்த காரணத்தால் குறியறிந்து சேரவாசிக்கத் தகுதிவாய்ந்த தெனக் கொள்ளுதல் அமையும் என்கின்றனர்.

ஆக்கலென்பது—மற்ற இசைக்கருவிகளின் குறையை நிரப்புதல்.

அடக்கலென்பது—மற்ற இசைக்கருவிகளின் மிகுதியை அடக்குதல்.

மீத்திறம் படாமை என்பது ஆக்குமிடத்தும், அடக்குமிடத்தும், இரந்திரம் தோன்றாமற் செய்தல்.

சித்திரக்கரணம் சிதைவின்றிச் செலுத்துதல் என்பது இவையனைத்தும் செய்யுமிடத்து மத்தளத்தில் தனது கைத்தொழிலின் திறன்யாவும் அழகுபெறச்செய்து காட்டுதல், என்றவாறு.

இவையே மத்தளப் பெயர்க்காரணமும், அக்கருவியின் செய்தொழிற் சிறப்பும் ஆம். இனி அப்பெயர் பயிலும் நூல்களின் பெயர்களும், சொற்றொடர்களும் அடியில் வருமாறு:—

"   —வாருற்று
விசிபிணிக் கொண்ட மண்கனை முழவிற்
பாடினி பாடும் வஞ்சிக்கு
நாடல்சான்ற மைந்தினோய் நினக்கே"
(புறம் 15)

பொருள்: வார்பொருந்தி வலித்துக் கட்டுதலைப் பொருந்திய மார்ச்சனை செறிந்த தண்ணுமையை உடைய விறலிபாடும் மேற்செலவிற்கேற்ப ஆராய்தலமைந்த வலியை உடையோய் நினக்கு என்பது.

"பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோ ரென்னு மென்னையு முளனே." (புறம் 89)

பொருள்: மன்றின்கண் தூங்கும் பிணிப்புற்ற முழவெனும் தண்ணுமையினது காற்றெறிவதனால், தெளிந்த ஓசையையுடைய கண்ணின் கண் ஒலியைக்கேட்பின், அது, போர்ப் பறையென்று மகிழும் என்னுடைய தலைவனும் உளன் என்பது.

மடிவாய்த் தண்ணுமை யிழிசினன் குரலே" (புறம் 289)

மடிவாய்த் தண்ணுமை என்பதற்குத் தோலைமடித்துப் போர்த்த வாயை யுடைய மத்தளம் என்பது பொருள்.

"மடிவாய்த் தண்ணுமை நடுவணார்ப்ப"
(நற்றிணை 130)

"மடிவாய்த் தண்ணுமை நடுவட்சிலைப்ப"
(பெரும்பாண் 144)

புறத்திணைக்குரிய பூக்களைக் கொள்ளுதற்குப் பாணர் தண்ணுமை அறைதல் மரபென்பது பொருள். "பூக் கோளேய தண்ணுமை" என்பதனாலும் இவ்வுண்மை விளங்கும்.

"குறும்பர்க்கெறியு மேவற் றண்ணுமை
நாணுடை மாக்கட் கிரங்குமாயின் (புறம் 293)

புறமதிலைச் சூழ்ந்த குறும்பராகிய சிற்றரசரோடு போர்செய்தற்பொருட்டு ஏவற்றண்ணுமையை முழக்கச் செய்தல் பண்டைய போர்வழக்கு.

போரில் காஞ்சிப்பூக் கொள்ளுகைக்கு ஆண்மைமிக்க வீரரை ஏவுதலைச்செய்யுந் தண்ணுமைப்பறையை இயக்கு தலும் தொன்மை வழக்கு.

"மறப்படை நுவலு மரிக்குரற் றண்ணுமை
யின்னிசை கேட்ட துன்னரு மறவர்" (புறம் 270)

"வெண்ணெ லரிஞர் பின்றைத் ததும்புந்
தண்ணுமை வெரீஇய தடந்தாணாரை" (அகம் 40)

"வெண்ணெ லரிநர் மடிவாய்த் தண்ணுமை
பன்மலர்ப் பொய்கைப் படுபுளோப்பும்"
(அகம் 204,)

"வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇச்
செங்கணெருமை யினம்பிரி யொருத்தல்"
(மலைபடுகடாம்-471)

"மண்முழா மறப்பப் பண்யாழ் மறப்ப" (புறம் 65)

மண்முழவு—தண்ணுமை" அதாவது மத்தளம்.

"புணர்புரி நரம்பின் றீந்தொடை பழுனிய
வணரமை நல்யா ழிளையர் பொறுப்பப்
பண்ணமை முழவும் பதலையும் பிறவுங்
கண்ணறுத்தியற்றிய தூம்பொடு சுருக்கிக்
காவிற் றகைத்த துறைகூடு கலப்பையர்"
(பதிற்றுப்பத்து. 41)

"திண்வார் விசித்த முழவொடாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டில்
மின்னிரும் பீலி யணித்தழைக் கோட்டொடு
... ...
நொடிதரு பாணிய பதலையும் பிறவும்
... ...
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்"
(மலைபடுகடாம், 2. 13)

"மன்றப் பலவின் மாச்சினை மந்தி
யிரவலர் நாற்றிய விசிகூடு முழவின்
பாடின் றெண்கண் கனிசெத் தடிப்பின்
அன்னச் சேவன் மாறெழுந் தாலும்" (புறம் 128)

ஊர்ப்பொதுவின் பலவினது பெரியகோட்டின் கண் வாழும் மந்தியாகிய பெண்குரங்கு பரிசிலர் தூக்கி வைக்கப்பட்ட பிணிப்புப் பொருந்திய மத்தளத்தினது ஓசை இனிய தெளிந்த கண்ணைப் பலாப்பழம் என்று கருதித் தட்டினவிடத்து அதன்கண் வாழும் அன்னச் சேவல் அவ்வோசைக்கு மாறாக எழுந்து ஒலிக்கும் என்பது பொருள்.

"பாடுவல் விறலியோர் வண்ணம் நீரும்
மண்முழா வமைமின் பண்யாழ் நிறமின்
கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்
எல்லரி தொடுமி னாகுளிதொடுமின்
பதலை ஒருகண் பையென வியக்குமின்" (புறம் 152)

யான்பாடுவேன் விறலி ஒரு வண்ணம், நீங்களும் முழவின் கண்ணே மார்ச்சனையை இடுமின், யாழிலே பண்ணை நிறுத்துமின், கண் திறக்கப்பட்ட தூம்பாகிய களிற்றினது கைபோலும் வடிவையுடைய பெருவங்கியத்தை இசையுங் கோள், சல்லியை வாசியுமின், சிறுபறையையறையுங்கோள், பதலையில் ஒரு முகத்தை மெல்லெனக் கொட்டுமின் என்பது பொருள்.

"கொடிதரு பாணிய பதலையும்" (மலைபடுகடாம் 11)
மாத்திரையைக் கூறும் தாளத்தையுடைய ஒருகண் மாக்கிணை என்பது பொருள்.

மூவேழ்துறை என்பது — வலிவு, மெலிவு, சமம் என்னும் மூன்று தானத்திலும் ஒவ்வொன்றில் ஏழுதானம் முடித்துப்பாடும் பாடற்றுறையைக் குறிப்பது.

இன்னும் கூறின் மிகவிரியும், மிகையுமா மென்றஞ்சி இவற்றை இத்துடன் நிறுத்தி மேற்செல்வேன்

மற்றும், பரத நந்திகேஸ்வர புராணம், சுந்தானந்தப் பிரகாசம், அகத்தியபரதம், சிந்தாமணி, சிலப்பதிகாரம், பரத நூல், தேவாத்திய நடனரஞ்சனி, நந்திபரதம் முதலி யனவுமேயன்றி, சர்வவாத்திய சங்கிரகம், சோடசவாத்திய லட்சணம், சங்கிதரத்னகரம், சங்கிதமகரந்தம், சங்கிதசாரம், சங்கிதசமய சாராமிருதம், சங்கிததீபிகை, சங்கித சங்கிரக சூடாமணி, தமருகப்பிரகாசிகை, சங்கித கல்பலதாமஞ்சரி, உமாபரதம், அநுமபரதம், அபிநய தர்ப்பணம், முதலிய வடமொழி நூல்களிலும் மத்தளத்தைப் பற்றிச் சிறப் பித்துக் கூறப்பட்டுள்ளன.

பாணர்

யாழிசைத்துப் பண்பாடுவோர் பாணர் எனப்படுவர். இவர்கள் தமிழகத்தில் பழங்குடியினராய் விளங்கி யிருந்தனர். மிகப் பழைய தமிழ் நூலான தொல்காப்பி யத்திலேயே பாணரைக் குறித்துக் கூறப்பட்டிருக்கிறது. இதனால் பண்பாடும் பாணர் தமிழகத்துப் புகழ்பெருக வாழ்ந்த பழங்குடியினர் என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை. இப்பாண்குடியினர் மூவகையினராவர். அவர்கள் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் எனப்படுவர். இவர்களுள் இசைப்பாணர் என்பவர், வாய்ப்பாடகரும் யாழ்ப்பாணர் என்பவர் நரம்புக் கருவியினரும் மண்டைப்பாணர் என்பவர் தோற்கருவி யினரும் ஆவர். துளைக்கருவி இயக்கும் குழற்பாணர் மண்டைப்பாணருள் அடங்குவர். மண்டையென்பது பறை. குழலோடுகூடிப் பறையடிப்பதே பெருவழக்கு. மதுரைத் திருவிளையாடற் புராணத்தில் பாண்டிய அரசனது இசைப்புலவராகக் கூறப்படும் பாணபத்திரரும்; நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கட்கு யாழ்வாசித்த

திருநீலகண்ட யாழ்ப்பாணரும்; திருமால் திருவடியில் சிந்தை மறவாத பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரும் யாழ்வல்ல அறிஞருமான திருப்பாணாழ்வாரும், பாணர் குலத்தவரே ஆவர். பாணருள் ஆடவன் "பாணன்" என்றும்; பெண் பாடினி, பாணிச்சி, பாட்டி, விறலி என்றுங் கூறப்படுவர்.

வேளாளர் குலம் "வேள்" என்றும், சமணர்நெறி "சமண்" என்றும்; பாணர்குலம் "பாண்" என்றும் கூறப் படுவது பண்டைக்கால வழக்கு.

மற்றும் பாணருக்குச் சென்னியர், வயிரியர், செயிரியர், மதங்கர், இசைகாரர், பண்ணவர், பண்டவர், (பண்டர்) ஓவர், அம்பணவர் முதலிய பெயர்களும் உண்டு. இவற்றுள் பண்டர், ஓவர் என்பன பாணருள் கீழ்க்குலத்தினரைக் குறிக்குமென்று பிங்கலநிகண்டு கூறுகின்றது. மதங்கன் அம்பணவன் என்னும் ஆண்பாற் பெயர்கட்கு மதங்கி, அம்பணத்தி என்பனமுறையே பெண்பாற் பெயர்களாகும், அம்பணம் = யாழ்; அம்டணவன் யாழ்வாசிப்பவன். பாணர். வாய்ப்பாட்டுப்பாடுவதிலும், இசைக்கருவிகளைத் திறம் பெற இசைப்பதிலும் சமர்த்தராய் இருந்தனர். சிலப்பதி காரத்துள்ள "பாடற் பாணர்" (அந்தி அ. 186.) "குரல் வாய்ப்பாணர்" (அந்தி-அ-200) என்னும் தொடர்கள் பாடும்பாணரைக் குறிப்பனவாம்.

பழங்குடி மக்களான இப்பாணர்களின் சந்ததியார் மலையாள நாட்டில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களைத் திருவரங்கப்பாணன், குடைகட்டிப்பாணன். மீன்பிடிக்கும்பாணன் எனப் பலபிரிவாகக் கூறுகின்றனர். இவர்களுள் திருவரங்கப்பாணர் ஆடல் பாடல் மத்தளம் வாசித்தல் முதலியவற்றுள் திறமையுடையவர்களாய் இருக்கின்றனர்.

இசைத் தெய்வங்களாக அந்நாள் விளங்கிய இப் பாணர்களை அரசர்கள் பெரிதும் மதித்துப் பாணர் வருக! பாட்டியர் வருக! என்று விரும்பிக் கூவியழைத்து, யானை, குதிரை, தேர் முதலியவற்றையும், பொன்னையும், முத்தையும் மணியையும் வைத்திழைத்த ஆபரணங்களையும் போதும் போதும் எனக்கூறும் மட்டும் வாரி வாரி வழங்கிவந்தனர். ஆனால், ஊரின்கணுள்ள பொதுமக்கள் அப்பாணர்களை ஒதுக்கிவைத்துத் தாழ்ந்த வகுப்பினரைப்போல் நடாத்தி வந்தனர். அரசர்கள் பற்றுக்கோடு ஒன்றுதான் பாணர் கட்கு ஆதரவாக இருந்து இசைக்கலையை வளரச்செய்தது. வேற்றரசர் படையெடுப்பால் தமிழ்வேந்தர்கள் அரசாட்சி குன்றியது. இசை தீயஉணர்ச்சியை உண்டு பண்ணுவது என்ற சிலசமயக் கொள்கைகள் பரவத் தொடங்கின. அரசர்களது அன்பும், பொதுமக்கள் ஆதரவும் அறவே இல்லாததனல் இசைக்கலையின் செல்வாக்கு குறைந்தது. பாணர்களும் தங்கள் இசைத் தொழிலைக் கைவிட்டனர். தமிழ்வேந்தர்கள் வீழ்ச்சியும், பொதுமக்கள் ஆதரவின்மையுமே இசைக்கலையை மறையச்செய்ததென நான் கூறுவதைப் பிழையென எண்ணுதல் வேண்டா. நாகரிகம் நனிசிறந்து சாதி வேற்றுமை மறைந்துகொண்டுவரும் இக்காலத்தில் கூட இசைவாணர்கள் சங்கீத அரங்குகளில் தங்களின் அபூர்வ இசைத்தொழில்களைச் செவியும் சிந்தையும் ஒருங்கே களிப்பச் செய்கின்ற காலங்களைத்தவிர மற்றைய நேரங்களில் சரியாகக் கௌரவிக்கப்படுவதில்லை.

மத்தளவாத்தியமும் – அது இக்காலத்தில் பண்பட்டு உயர்ந்து விளங்கும் சிறப்பும்.

இசைக்கலையே ஒருநாட்டின் முன்னேற்றத்தை இனிது காட்டவல்ல சிறப்புடையது. நாளந்தா, தக்ஷசிலம் முதலிய கலாசாலைகளில் அக்காலத்தில் மாணவர் குருகுலவாசம் செய்ததுபோல், தோற்கருவியாகிய மத்தளத்தை நல்லாசிரியன் மூலமாக நன்கு கற்பதற்கு மாணவர்கள் அவ்வாத்தியத்தில் வல்லாரை யடுத்துக் குருகுல முறைப்படி கற்று வந்தனர்.

இன்னிசைக் கருவிகளில் மிக்குயர்ந்த தோற்கருவியாகிய மத்தளத்தை இனிய ஓசையெழ முழக்குவதற்கு இசைஞானமும், இலயஞானமும், கல்வியறிவும் இன்றியமையாதன. இவற்றிற்கெல்லாம் மேலாக மெத்தென ஒலிக்கச்செய்யும் கைலாகவமும் பெருகேறிய கைப்பழக்கமும் இசைவல்லாருடன் கூடி அவர்கள் செய்யும் இனிய தொழில்களுடன் மிகநெருங்கி ஒன்றிய அநுபவமும் அத்தியாவசியம்.

அத்தகைய அனுபவஞானிதான் மத்தளத்தைத் திறமை பெற வாசிப்பதற்குத் தகுதிவாய்ந்தவன். உள்ளத்திற்கு உவகையையும், உற்சாகத்தையும் ஒருங்கே ஊட்டவல்ல உன்னத இன்னோசையுடன் கூடிய மனோதர்மம் அல்லது தனி ஆவர்த்த தாளச்சொற்களை லயத்துடன் முழக்கும் மத்தளப் புலவனது ஆழ்ந்த ஜதியறிவின் பெருக்கமே யாவர்க்கும் ஆனந்தத்தை அளிப்பதற்குக் காரணம். தமிழ் மக்களது கலைப் பொக்கிஷமாகிய தண்ணுமைக் கருவியின் இன்னோசையை, நுனித்தறிந்து லயஞான விற்பனத்துடன்

இசையெழ முழக்கிச் செவிவிருந்தூட்டிய நமது முன்னோர்களின் கலைஞானம், எத்துணைச் சிறந்ததாகத் தெரிகிறது? அவர்கள் இவ்வின்னிசைத் தோற்கருவி வளர்ந்து பெருகுவதற்கு அதனிடத்து நீண்ட காலமாகவைத்துக் கொண்டிருந்த பற்றும் பழக்கமுமே அக்கருவி வளம்பெற்று இன்னிசையரங்குகளில் முன்னணியில் நிற்பதற்கும் ஏற்றம்பெற்று இலங்குவதற்குங் காரணமாயின. அதனாலேயே அதன் உயருஞ்சக்தி நாளும் பெருக்கமடைந்து விரும்பிக்கேட்கும் வேட்கையை நமக்கு விளைவித்து ஆனந்தத்தையும் அளித்து வருகின்றது. இருபதாம் நூற்றுண்டாகிய இக்காலத்தில் இவ்வின்னிசைக் கருவியில் இசை நாதத்தை இன்பமுறையில் எழுப்பும் தொழிலாளர்கள் புதுத்துறையில் அவ்வாத்தியத்தை அதிசயிக்கத்தக்க முறையில் அழகுபெற வாசித்து வருகின்றனர். இதனாலேயே மத்தளவாத்தியம் இப்பொழுது மிகவும் உயர்வும் சிறப்பும் பெற்று மனோகரமாய் விளங்குகின்றது. இதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்னும், அதற்குமேலுமுள்ள ஆண்டுகளிலும் பிரசித்திபெற்று விளங்கியிருந்த தஞ்சாவூர் திரு. நாராயணசாமி அப்பா, துக்காராம், கும்பகோணம் அழகன்நம்பி, குற்றலம் குப்புசாமி பிள்ளை, வேணுகோபால் செட்டியார், புதுக்கோட்டை தட்சிணமூர்த்தி பிள்ளை, சாத்தபுரம் சுப்பையா, பழநி முத்தையா, தஞ்சை அங்கண்ணன், முத்து, திருநெல்வேலி கோமதி, பாலக்காடு சாமி அய்யர் முதலியோர் மத்தளம் வாசிப்பதில் மாட்சிமைபெற்று விளங்கியிருந்தனர். அவர்கள் வாத்தியம் அளவோடு மிருதுத்தன்மையில் நின்று, பண்ணிசைக்கடங்கிக் கீதத்தைப் பரிமளிக்கச்செய்து கேட்போர் செவிகளுக்குச் சிறந்த இன்பத்தை அளித்தது. இருபதாம் நூற்றுண்டாகிய இக்காலத்து விளங்கும் மத்தள வித்துவான்களாகிய

பாலக்காடு மணி அய்யர், பழனி M. சுப்பிரமணிய பிள்ளை, குற்றாலம் சிவவடிவேல், சென்னை வேணுநாயகர், பீதாம்பரம் S. இராமதாஸ், D. சாமிநாத பிள்ளை, M. V. தட்சிணாமூர்த்தி ஆச்சாரி, மற்றுமுள்ளவர்களும் பழைமைத் தொழிலாளர்களினும் பன்மடங்கு மிருதங்கத்தைத் தங்கள் கைத்திறம் கதித்தோங்கக் கனமுழக்கத்துடனும் புதுவிதத்தில் மனோதர்மம், ஜாதிநடைகள், தஸ்து, நீண்டமோரா, பலவகை முத்தாய்ப்புக்கள், தகிகிணதோம் முதலியவைகளைப் புதுதினுசில், வியக்கத்தக்க வகையில் வெகுசமர்த்தாகவும் செய்து களிப்பித்து வருகின்றனர். எனினும், இன்றைக்குச் சுமார் முப்பது ஆண்டுகளுக்குமுன் தஞ்சையில் யாவராலும் பிரசித்தமாகப் புகழ்ப்பெற்றுப் பெயர் சிறந்து விளங்கிய வித்துவான் நாராயணசாமி அப்பா அவர்களைப்போல் தெய்வ நாமாவளிகளையும் மகாராட்டிர பதங்களையும் பண்ணமைதியுடன் வாயில்பாடிக்கொண்டே மிருதங்கத்தை வெகு இனிமையாக வாசித்தவர்கள் வேறெவருமில்லை. இதைவிட ஆச்சரியமான செயல்கள் பழங்காலத்தில் நடந்து வந்திருக்கின்றன. “ஒரே பண்ணை இரண்டு தாளங்களுக்கு அமைய ஒருவனே பாடிக்கொண்டு” “தடாரி” என்ற தோற்கருவியை வாசித்தான் என்ற உண்மையை நாம் உணரும்போது பண்டைநாளில் விளங்கிய தோற்கருவித் தொழில்வல்லார் திறமையும், இசை நுணுக்கமும் எவ்வளவு உயர்ந்தது என்று நமக்கு விளங்குகின்றது. ஒருபண்ணிசை இருவித தாளத்துக்கு அமையப்பாடுவது இப்போது மனோகற்பனையில் இருக்கின்றதேயொழிய அநுபவத்தில் இல்லை. இக்காலத்தில் மிகமுயன்றுவிடாது பழகினால் செய்யக்கூடிய இவ்வரிய செயலை, அக்காலத்து இன்னிசைக் கருவியாளன் தனது அன்றாட வாழ்க்கையில் எளிதாகச் செய்துவந்தான். மற்றொரு அதிசயச்செயலும்

யாதெனின், கோயிலென்று பெயர் சிறந்த சிதம்பரத் திருத்தலத்தில் ஆடவல்லபிரான் ஆலயத்தில், பரதநாட்டிய சாத்திரத்தின் நான்காவது அத்தியாயத்தை அப்படியே கருங்கல்லில் செதுக்கிய சிற்பிகள், "லலாடதிலகம்" என்னும் பெயருடைய சிற்பம் ஒன்றில் ஒருநடிகரோடு இரண்டுபாடகர் மத்தளத்தை வாசிப்பதைச் சித்தரித்திருப்பதன் சிறப்பேயாம். இவையன்றி இம்மத்தளக் கருவியின் உருவச்சித்திரம் அஜந்தா ஓவியங்களிலும் வரையப்பட்டுள்ளது. இதனால் இக்கருவி வெகுகாலப் பழக்கத்தில் இருந்துவருவதாகத் தெரிகிறது.

தாளவாத்தியமாகிய தண்ணுமைக்கருவியைச் செய்யும் விதமும். மரம், அளவு, தோல், வார், மூட்டு, சாட்டை, பிசின், மாவு, முதலியவற்றின் தெளிவான விளக்கமும்

மத்தளம் கற்க விரும்பும் மாணவர்கள் தாம் கற்கத் தொடங்கும் கருவியின் சீர், அமைப்பு, அங்கங்கள், அமைந்திருக்கும் விதம், சுருதிமுதலியவற்றை ஐயந் திரிபுகளுக்கு இடமின்றி விளக்கமாக அறிந்திருப்பது அத்தியாவசியம். அவைகளை அநேகர் அறியாமலே இருக்கின்றனர். யாவரும் தெளிவாக அறியும்பொருட்டு அவற்றை இதன் கீழ் வரைகின்றேன்.

மத்தளம் அல்லது மிருதங்கம் என்னும் தோற் கருவியின் அமைப்பு நடுவில் பெருத்தும், வலது இடது பக்கங்களிலும் வலப்புறம் சிறிது அளவு குறைந்தும், இடதுபுறம் சற்று அளவு விரிந்தும் இருக்கும். உதாரணம் வேண்டுமாயின், மண்ணினால் செய்யப்பெற்ற இரு பூக்

தொட்டிகளை வாயோடு வாய் பொருத்தினுல் எவ்வாறிருக்குமோ! அவ்வுருவத்தைக் கொண்டிருக்கும்.

மத்தளம் செய்யப்படும் மரவகை.

மத்தளஞ்செய்வதற்கு உரிய மரங்கள் பலவிதமாக நூல்களுள் கூறப்பட்டுள்ளன. அவை ஐந்துவகைமரங்கள் என்றும், அவற்றை ஐந்து ரத்தினங்கள் என்றும், அவை தென்னை, பலா, வேம்பு, சந்தனம், கருங்காலி என்றும், கூறப்பட்டுள்ளன 'பரதம்' என்னும் நூலுள் மத்தள லட்சணம் கூறும் வெண்பா:—

மத்தளஞ் செய்யப் பலாமா விலிங்குநுணு
உத்தம சாதி யொளிர்வேம்பாம். என்று கூறியுள்ளது

அவை:- பலா, மாவிலிங்கு, நுணு, தேக்கு, வேம்பு, என்னும் ஐந்து வகை மரங்கள். மற்ருெரு வடமொழி நூலுள், இரத்தசந்தனம் கருங்காலி, செம்மரம், வேம்பு, பலா என ஐவகை மரங்கள் கூறப்பட்டுள்ளன. மற்ருென்றில், வேம்பு, பலா இவற்றுடன், பூவரசும் பனையும் சேர்த்து எழுவகையாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வகை இனத்தில் ஏதாவதொரு மரத்தில் விறல். வெடிப்பு, கணு, சுழி இளசு இல்லாமல் சுத்தமான மரத்தைத் தேர்ந்தெடுத்து, நன்ருகத் தொழில் தெரிந்த விவேகியான மரத்தச்சனைக் கொண்டு மத்தள நூலுள் குறித்துள்ளபடி மத்தளக் கட்டையைச் செய்தல்வேண்டும்.

மத்தளத்தின் நீளம், குறுக்கு இருபுறத்துவாய்களின் அகலம், கனம், அளவு முதலியன.

அங்ஙனம் மத்தளவடிவாகச் செய்யப்பெற்ற மரத்தை

உள்ளே நன்ருகக் குடைந்து; உள்வாயின் மரக்கனம், ஒரு அங்குலக் கனமுள்ளதாகவும், நீளம் நாற்பத்தெட்டு அங்குலமும், நடுச்சுற்றளவு இருபத்தைந்து அல்லது முப்பது இஞ்சும் வலந்தரை குறுக்களவு ஐந்தேமுக்கால், அல்லது ஆறு இஞ்சும், தொப்பியின் குறுக்களவு ஆறரை இஞ்சும் ஆகவைத்துக் கட்டையைக் கடைந்து நயப்படுத்த வேண்டும். இவைகள் இக்காலத்துச்செய்யப்படும் மத்தளக் கட்டையின் அளவுகள். பண்டைக்காலத்து மத்தளக் கட்டையின் அளவுகள் இவற்றினும் சிறிது கூடுதலான அகல நீள முள்ளவைகள்.

தோல்வகையும் — வாரும்

மத்தளமானது இரண்டு கைகளினுலும் கொட்டி முழக்கும் தோற்கருவியானதால், அதன் இருபக்கங்களும் தோல்கொண்டு பொதிதல் வேண்டும். அத்தோல் ஆட்டுத்தோல், மாட்டுத்தோல், எருமைத்தோலின் நீண்டவார் ஆகியவைகளைத் தக்கபடி பதப்படுத்திப் பொதியவேண்டும். வேண்டிய அளவு இழுத்துக் கட்டுவதற்கும் ஓர் இடத்தில் துவண்டு மற்ருேர் இடத்தில் இறுக்கியிராமல் பக்கம் முழுதும் ஒரேசமமாக இறுகி இருப்பதற்குமாகத் தக்கபடி ஆலோசித்து வழிசெய்யப்படவேண்டும். அங்ஙனம் செய்வ தற்கு "மூட்டிடுதல்" என்று பெயர்.

மூட்டிடுதல்

மூட்டு இடுதலாவது உரோமம் நீக்கிய மாட்டுத்தோல் ஆட்டுத்தோல், எருமைத்தோலின்வார் ஆகியவைகளினுல் "வலந்தரை தொப்பி" என்னும் இருபக்கங்கட்கும் கெட்டியாக எருமைத்தோலினுல் வகிரப்பட்ட துண்டுச் சாட்டைகளினுலும், ஆட்டுத்தோல், மாட்டுத்தோல்களின் வட்ட

வடிவமான துண்டுத் தோல்களினாலும் இரு வளையங்கள் பழுத்த மூங்கில் வாரைகளால் கெட்டியாகச் செய்யப்பட்டு அவற்றை மத்தளக்கட்டையின் வலந்தரைத் தொப்பிப் பக்கங்களில் பொருந்துமாறு வைத்துப் பதப்படுத்தப்பட்ட நீண்ட எருமைத்தோல் வாரினால் பூட்டிக் கோத்துநன்றாக இறுகும்படி பிகித்துக் கட்டுதல் என்பது.

இங்ஙனம் மத்தளத்தின் வலந்தரை, தொப்பி ஆகிய இருபுறத்திலும் தகுதியாகப் பொதியப்பட்டு சாட்டையிட்டுப் பின்னிய தோலுக்கு கவணை "மூட்டு" என்று பெயர். சிலர் "புடா" என்பர். தொப்பிப் பாகத்து மூட்டுக் "கவணை" என்றும் அந்தந்த நாட்டு வழக்கச் சொற்படி பெயர் கூறுவர்.

கண்களும் — அளவும்.

மத்தளத்தின் வலது இடது பக்கங்கட்கும் இரு வகைத் தோல்களைக் கொண்டு கெட்டியாகப் பொதியப் பட்டிருக்கும் இரு வளையத்தையும் நீண்ட எருமை வாரால் கெட்டியாகப் பிகித்துக் கட்டுவதற்கு ஒவ்வொரு வளையத்திலும் அதன் சுற்றளவு முழுவதிலும் சம தூரங்களில் துளைகள் செய்யப்பட்டிருக்கும். இங்ஙனம் செய்யப்பட்ட துளைகளுக்குக் "கண்கள்" என்று பெயர். மத்தளத்திற்குரிய இருவளையங்களிலும் சரியாகப் பதினாறு கண்கள் இருக்கும். இக்கண்களில்தான், முன் சொன்ன, நீளமான எருமைத்தோல் வார் கோத்து மத்தளத்தின் இருவாய்ப் பக்கங்களிலும் பொருத்தி வைக்கப்பட்டிருக்கும் மூட்டுகள் ஒன்றோடொன்று நன்றாக இறுகும்படி பலமாக இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். இறுதியில் எருமைத்தோலின் நீண்ட வாரின் இரு நுனிகளும் ஒன்றாகச்சேர்த்து முடிபோடப்படும்.

வலந்தரையும் — தட்டுகளும்.

மத்தளத்தின் வலது பக்கத்துக்கு "**வலந்தரை**" என்று பெயர். சிலர் "நங்கி" என்பர். இப்பாகத்தின் வளையத்தில் பொதியப்பட்டிருக்கும் தோல்கள் ஒன்றன்மீதொன்ருகப் பக்குவமாக அடுக்கப்பட்ட மூன்று தோல் அடுக்குகள். இவற்றிற்குத் "**தட்டுகள்**" என்று பெயர். இவைகளை நன்ருக ஈரம் உலர்ந்தபின் விளிம்பின் ஓரத்தில் மட்டும் மூன்று அடுக்குகள் இருக்கும்படி விட்டு விட்டு 'நடுப் பாகத்திலிருந்து மேல் இரண்டு அடுக்குகளை அதற்கு ஏற்ற வகையில் வெட்டி எடுத்துவிடுவர். அதனுல் நடுப்பாகத்திலே அடித்தட்டாகிய ஒற்றைத்தோல் மட்டும் மிகுந்திருக்கும். இதனைக் "**கொட்டுத்தட்டு**" என்று கூறுவர். மேலே இருப்பதற்கு "**மீட்டு**" என்று பெயர். இவை இரண்டும் வெளியில் தெரியும். இவைகளுக்கு அடிப்பாகத்தில் கட்டையின் விளிம்புடன் ஓட்டிநின்று வெட்டுத்தட்டுப்போல் உள்ளிடத்திலிருக்கும் தோலுக்கு "**உட்கரத்தட்டு**", அல்லது "**உக்கரைத் தட்டு** என்று பெயர்". இத் தட்டை மறைத்திருப்பதனுல் இது வெளியில் தெரிவதில்லை. இத்தட்டினுல்தான் முதல் இரண்டு தோல்களும் மத்தளக்கட்டையின் விளிம்போடு ஒட்டாமல் நிற்கின்றன. கொட்டுத்தட்டுத் தோலானது அசைவு கொடுத்து நாதம் கிளம்புவதற்காகவே இங்ஙனம் அமைக்கப்படுகிறது.

கரணை எனப்படுவதும், அதன்மீது கருநிறத்தில் வட்டமாகப் பூசப்படும் சாந்தும், சாந்துவைத்து நாதங்கிளம்பச்செய்யும் விதமும்.

தோற் கருவிகளில் எந்த வாத்தியத்திற்கும் இல்லாத அதிசயமும், இனிய சுவையும், தண்ணிய குளிர்ச்சியும்,

மெத்தெனும் நாதமும் மத்தளத்துக்கு மட்டும் தனியாக அமைந்தது வியத்தற்குரியது. இப்புதுமை நாதம், மத்தளத்தின் வலந்தரைப் பாகத்துக்கு அமைவதற்கு நமது முன்னோர்கள் பன்னாள் ஆராய்ந்து கண்ட சாந்து பூசும் முறை மிகவும் பாராட்டுதற் குரியது. இங்ஙனம் பூசப்படும் சாந்தினால் மத்தளத்தின் வலந்தரைக்குத் தீர்க்கமான இனிய நாதம் உண்டாகின்றது.

மைபூசி நாதம் எழும் வட்டமான நடுப்பாகத்துக்குக் "கரணை" என்று பெயர். அக்கரணைக்குச் சாந்து அல்லது சோறு பூசும் விதமாவது: 'மத்தளத்தின் வலந்தரைப் பக்கத்திலுள்ள கொட்டுத்தட்டின் நடுப் பாகத்தில் இரண்டரை இஞ்சு அல்லது மூன்று இஞ்சு வட்டமான இடத்தில் மட்டும் ஒருவகைக் கலவை மை புளிய இலையின் கனத்தில் பூசப்படும். அம் மை— கோளாங்கல் கொண்டு நயமாக இடித்து வஸ்திரகாயம் செய்யப்பட்ட பொடி, அல்லது இரும்புச்சத்துச் சேர்ந்த சிட்டம், அல்லது கிட்டம் என்னும் கல்லை யுடைத்து மாவுபோல் நயப்புடைய பொடியை நன்றாக வஸ்திரகாயம் செய்து, அதனுடன் **அடுப்புக்கரி, வஜ்ஜிரம், கோந்து, சோற்றுப்பசையுடன்** நன்றாகக் கலக்கும்படி பிசையப்படுவது. அங்ஙனம் நன்றாகப் பிசையப்பட்ட கருநிற மையை, ஈரமுள்ள ஓர் துணியில் எலுமிச்சங்காய் அளவு வைத்துக்கொண்டு சுருதி ஞானத்தை நன்றாகவுணர்ந்த மத்தளங்கட்டுவோன் குன்றுமணி குன்றுமணி அளவு கொஞ்சங் கொஞ்சமாக எடுத்து அந்நடுப்பாகத்தில் பூசிக் கட்டைவிரலால் நன்று கப்பதியும்படி வழவழப்பான குண்டுக்கருங்கல் குழவி யினால் மை நன்றாகத் தோலில் அழுந்தும்படி அழுந்தத்

தேய்த்துத்தேய்த்து சாந்து கருதியவாறு நன்ருகப் பதிந்து நாதம் கிளம்பியதும் மத்தளத்தின் வலந்தரைப் பக்கத்தைப் புள்ளால் தட்டிக்கொட்டிக் கருதிய சுருதியளவில் நாதம் உண்டாகும்படி செய்து கருதிய நாதம் உண்டானதும் அப்பாகத்தை நீரினுல் நன்ருகக் கழுவிச் சுத்தப்படுத்தி வார் பிகிந்து வேலையைப் பூர்த்தி செய்வன்.

வீணை, பிடில் முதலிய தந்தி வாத்தியங்களில் ஒரு பிருடையைக் கொண்டு தந்தியை இறுக்கியோ தளர்த்தியோ சுருதி சேர்ப்பதுபோல் வட்டமான தோல் முகமுள்ள இம்மத்தளக் கருவியையும் மூன்றங்குல நீளத்தில்—ஒரு இஞ்சு சுற்றுவட்டத்தில் கெட்டியான மரத்தாலும் மூங்கில் கணுத்துண்டாலும் செய்யப்பட்ட புள்ளைக் கரணைப் பக்கத்திலுள்ள வலுவான சாட்டையின் வளையத்தின் பதினறு கண்களிலும் குண்டுருவக் குழவிக்கல் கொண்டு **கொட்டியும்**, **தட்டியும்** சுருதி சேர்க்கவேண்டும். இதன்பின்னர்த்தான் மத்தளத்தில் "மீட்டு" என்னும் "அரை சாப்", "முழுச்சாப்" நாதங்கள் ஏற்படுகின்றன. **மீட்டையும்**, **சாப்பையும்** ஒரே நாதமாக்குதற்கு வலந்தரைப் பக்கத்திலுள்ள சாட்டையால் பின்னப்பட்ட வலுவான வளையம்தான் காரணம்.

தொப்பி

(மத்தளத்தின் இடது பக்கத்துக்குப் பெயர்).

மத்தளத்தில் இடது கையால் வாசிக்கும் பக்கத்துக்குத்தொப்பி என்று பெயர். இப்பக்கம் வலந்தரையைவிடச் சிறிது அகலமுள்ளது. ஆனல் தொப்பியின் வெட்டுத்தட்டு வலந்தரையின் வெட்டுத்தட்டைவிட அகலத்தில்

சிறியது. மத்தளத்தை வாசிக்கத்தொடங்கும்போது தொப்பியில் "**தொம்**" என்னும் மிருதுவான "**தொனி**" எழவேண்டுமானால், கோதுமை ரவையை நீரினால் நனைத்துப் பிசைந்த **மாவையேனும்**, தெள்ளிய எரு வாட்டிச்சாம்பலையும் சோற்றையும் சேர்த்து நயமாகப் பிசைந்த **மாவையேனும்** தொப்பியில் போர்த்துள்ள தோலின் நடுவில் சுருதிக்கு வேண்டிய அளவு தடவ வேண்டும். அங்ஙனம் தடவும் மாவு ஈரம் உலராதபடி அடிக்கடி தண்ணீர் தடவிக்கொண்டே யிருக்கவேண்டும். அப்பொழுதுதான் தொப்பிக்குள்ள தொனி கலையாமல் இருக்கும்.

புதிதாக மூட்டப்பட்ட மத்தளத்தில் இனிமையான தொனி உண்டாகாது. பழகப்பழகத்தான் நல்ல தொனி ஏற்படும். தவிர, மத்தளம் கற்கும் மாணவர் தாங்கள் பழகும் வாத்தியத்தில் கைபடியும்வரையில் நயமான நாதம் வருவது கஷ்டம். நீண்டபழக்கத்தில் சரியாக வந்துவிடும்.

ஒலியின் மாறுபாட்டுக்குக் காரணம்.

இங்ஙனம் மொத்தமாகக் கூறப்பட்டதிலிருந்து மத்தளங்கள் யாவும், ஒரே அளவும், நாதமும் ஆக இருக்குமென்று வாசகர்கள் எண்ணிவிடக் கூடாது. மத்தளத்துக்கு மத்தளம் நாதம் வேறுபட்டிருப்பது, மத்தளக் கட்டைகள் அளவிலும், உருவிலும், கட்டையின்கனத்திலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதனாலும், பலசாதி மரங்களினால் மத்தளக்கட்டைகள் செய்யப்பட்டிருப்பதனாலும் ஆம். மரத்தின் குணத்துக்குத் தக்கபடி மத்தளத்தின் நாதமும் மாறியிருக்கும், அது

போலவே தோலின் கனத்தினலும், தோலைச்சுற்றியுள்ள விளிம்புப் பட்டையின் அகலத்தினலும், நடுவிலுள்ள கரணையின் பரப்பினலும், கனத்தினலும் நாதத்தின் தன்மை மாறுபடும். தோலைச் சுற்றியுள்ள சாட்டை, பின்னிய இறுகிய வளையத்தின் இடமாறுபாட்டாலும் தோலை இழுத்துக்கட்டும் வாரின் இறுக்கம், நெகிழ்ச்சிகளாலும் நாதமானது மாறுபடுமென்க.

மத்தளத்தில் உண்டாகும் கார்வை.

மத்தளத்தை ஒரு விரலால் இலேசாகத் தட்டினலும் இனிமையானதோர் நாதம் நீண்டு ஒலிக்கும். இத்தகைய ஒலி நீட்சியைப் பொது வழக்கிலே "**கார்வை**" என்று கூறுவர். இந்தக் கார்வை, காதுக்கினிமையைத் தருகின்றது. விரலால் தட்டினதும் உண்டாகிற ஒலியானது தோன்றிய உடனே மறைந்துவிடாமல் காத்து நிற்கிறது. எதனுல் மத்தளத்தின் எந்தப்பாகம் இந்தக் குணத்துக்குக் காரணமாயிருக்கிற தென்பதை நுணுகி ஆராய்ந்து பார்த்ததில், மத்தளத்தின் கட்டையின் கனமும் விறைப்பும், தோலின் நடுவிலே தடவப்படும் சோற்றின் திண்மையுமே இதற்குரிய காரணம் என்று தெரிய வந்தது.

தோலின் பரப்பு.

தோலின் பரப்பு அதிகமாக அதிகமாக நாதத்தின் சுருதி குறையும். மத்தளத்தைக்காட்டிலும், பறையும், முரசும் அளவில் பெரியவை. அவற்றின் தோலின் பரப்பு மிகவும் அதிகமானது. ஆகையால், அவற்றின் சுருதி குறைவாக அல்லது கட்டையாக விருக்கிறது.

கட்டையின் கனமும், விறைப்பும்.

தோலுடன் பிணைக்கப்பட்டிருக்கும் மத்தளக் கட்டையின் விளிம்பு மெல்லியதாயிருந்தால், தோலி லின்றும் தோன்றும் ஓசை சீக்கிரம் அடங்கிவிடும். ஏனெனில், அடிபட்ட தோல் அதிர்கின்றது. அவ் வதிர்ச்சியினுல் ஒலிக்கின்றது. இந்த அதிர்ச்சியானது அதிரும் தோலோடு பிணிக்கப்பட்ட கட்டையை அதிரச் செய்கிறது. கட்டை மெல்லியதாக இருந்தால் அதுவும் அதிர்ந்து தோலின் அதிர்ச்சியையும் சிதற விடுகிறது. அதிர்ச்சி சிதறவே அதனுல் உண்டாகிய ஒலியும் அடங்கி விடுகிறது. அங்ஙனம் இல்லாமல் தோலோடு பிணைக்கப் பட்ட கட்டையானது கெட்டியாகவும், கனமாகவும் இருந்தால் அது அவ்வளவு அதிருவதில்லை. அதனுல் தோலின் அதிர்ச்சி விரைவில் சிதறிப்போவதில்லை. மத்தளக்கட்டை கனமாக விருப்பதனுல், அதன் தோலா னது அதிர்ச்சியைச் சீக்கிரம் இழப்பதில்லை. ஆகையால் அதன் அதிர்ச்சியானது கூடச் சற்றுநேரம் அதிகரித்து நிற்கிறது. அதனுல் அது ஒலியை உண்டாக்கிக் கொண்டே இருக்கிறது. உண்டாகும் ஓசையும் தொடர்ந்து கேட்கிறது. இதைத்தான், மத்தளம் முழக்கு கின்றவர்கள் கார்வை என்று கூறுகின்றனர்.

தோலின் திண்மை.

இதுபோலவே அதிரும் தோலானது பளுவின்றி இலேசாக விருக்குமானுல், அது அதிகநேரம் அதிராது. அதன் நடுப்புறத்திலே தோலோடு தோலாய் ஒட்டிய கன மிருந்தால், அந்த கனத்தினுல் அதிர்ச்சி வன்மையுடைய

தாகின்றது. அதிக நேரமும் ஓசை கூடியதாயிருக்கிறது. இவ்விதமாக நடுவிலுள்ள சோற்றின் கனமும் கார் வைக்குக் காரணமாகின்றது.

இன்னொரு காரணத்தையும் குறிப்பிடவேண்டும். பறையின் ஒருபுறம் தோல் போர்த்து மூடப்பட்டிருந்தாலும், அதன் மற்றொருபுறம் திறந்து கிடக்கிறது. மத்தளம் இருபுறமும் வாயடைத்த கருவி. மத்தளக்கட்டையின் உட்புறத்திலே இரண்டு பக்கங்களிலுமுள்ள தோலுக்கு இடையிலே காற்று அடைபட்டுக் கிடக்கிறது. தோல் அதிரும்போது அதனுடைய அதிர்ச்சியால் அதனுடைய காற்று அதிருகிறது. அதனல் அதிர்ந்த ஒலியைப் பெருக்கவும், இனிதாக்கவும் தங்கி நிற்கவும் செய்கிறது.

வெட்டுத் தட்டு

மத்தளத்துக்கு மத்தளம் நாதம் மாறுபட்டிருப்பதற்கு முக்கிய காரணமாகவிருப்பது அதன் வெட்டுத் தட்டு. வெட்டுத்தட்டின் அகலத்தின் கூடுதல், குறைதல்களுக்கு ஏற்றபடி மத்தளத்தின் சுருதி வித்தியாசப் படுகிறதென்பது அனுபவத்தில் கண்ட உண்மை. வெட்டுத்தட்டு அகலமாயிருந்தால் மத்தளத்தின் நாதம் அடங்கியிருக்கும். அநுஸ்வரங்களும், மேல்ஸ்தாயி ஸ்வரங்களும் அவ்வளவு ஒலிக்கமாட்டா.

வெட்டுத்தட்டின் அகலம் குறைவாயிருந்தால் நாதத்தின் கார்வை அதிகமாகவிருக்கும். நாதமும் கணீர் என்று கேட்கும். அனுஸ்வரங்களும் கூடவே ஒலிக்கும். ஒரே சமயத்தில் பலவகையான ஸ்தாயி ஸ்வரங்களும் உண்

டாகி இரைச்சலும் ஏற்படுமானல், அப்போது எழும் நாதம் செவிக்கு அவ்வளவு சுவையாய் இராது. வேண்டாத உச்சஸ்தாயியின் ஸ்வரங்களே அடக்குவதே. வெட்டுத்தட்டை அமைத்திருப்பதன் முக்கிய நோக்கம். மேல்ஸ்தாயியின் ஸ்வரங்களேயும், இரைச்சல்களேயும் வெட்டுத்தட்டு எங்ஙனம் அடக்குகின்றதென்பது, ஒலியின் தத்துவத்தை உணர்ந்த அறிஞர்களுக்கு நன்ருகத் தெரியும்.

மரப்புள்ளுகள்.

மத்தளத்தின் கட்டைக்கும், தோல்வாருக்கும் உள்ள இடைவெளிகளில் கெட்டியான மரத்தில் அல்லது பழுத்துச் சேகேறிய கெட்டி மூங்கிலால் செய்யப் பெற்றதும், மூன்று இஞ்சு நீளமுள்ளதுமான எட்டுச் சிறு உருண்டை வடிவமுள்ள துண்டுகளாக மத்தளச் சுருதி அதிகப்படுவதற்குச் செருகப்படும் துண்டுகளுக்குப் புள்ளுகள் என்று பெயர். இவற்றை மத்தளத்தின் இடைவெளியின் பாகத்தில் தேவைக்கேற்றபடி உயர்த்தவும், தளர்த்தவும் கூர்மையுள்ள இரும்பு மயிர்க்கோதி போன்ற உருவத்திலுள்ள சிறிய ஆயுதத்தைக்கொண்டு செய்வர். இதனல் சுருதி உயரவும் தாழவும் கூடும். மற்ருெரு வகையாகச் செய்தாலும் சுருதி உயரவும் தாழவும் செய்யலாம். அது — வலந்தலை மூட்டிலுள்ள கெட்டியான எருமை வாரைக்கொண்டு பின்னப்பட்ட வளேயத்தின்மீது இரும்பு சுத்தியினலாவது, மேற்கூறிய மரப்புள்ளினலாவது, வேண்டியவாறு கொட்டித்தட்டி, மூட்டை, மேலோ, கீழோ தள்ளினல் தோல் இறுகும் அல்லது நெகிழும். அதற்கேற்ப

மத்தளத்தின் சுருதி உயரவும் தாழவும் கூடும் என்பது. இவ்விருமுறைகளாலும் மத்தளத்தை விரும்பியவாறு சுருதி சேர்க்கலாம்.

மத்தளத்தின் ஓசை செவிக்கு இனிமையாக ஒலிக்க வேண்டுமானால், தோலின் இறுக்கம் எல்லாப்பக்கங்களி லும் ஒரே அளவில் இருக்கவேண்டும். வலந்தரையின் சுற்றுவட்டத்திலே சமதூரத்திலுள்ள பதினாறு (16) இடங்களிலிருந்து இறுக்கத்தைச் சமமாகச்செய்யவேண்டு மென்னும் ஒலியின் தத்துவங்களை நம்முடைய முன்னோர் கள் நன்கறிந்தே மத்தளத்தைச் செய்தார்கள் என்று தெரிகிறது.

ஒலிகள்.

ஒலிகள் இயற்கை ஒலி, செயற்கை ஒலி என இரு வகைப்படும். காற்றும், இடியும், மழையும், ஆகிய இவற்றினின்றெழும் ஒலிகள், இயற்கை ஒலியின் பாற் படும். மனிதனால் இயற்றப்பட்ட பல்வகைப் பொருள் களில் எத்தனையோ வகை நாதங்கள் உண்டாகின்றன. அவை - ரயில், மோட்டார், குதிரை வண்டி, மாட்டு வண்டி, ஆகாயவிமானம், முதலியவைகளிலிருந் தெழும் நாதங்களும், ஊதும் குழல்கள், அடிக்கும் மேளங்கள், பாடும் பாட்டுக்கள், நடிக்கும் கூத்துக்கள், பேசும் குரல் கள் முதலியனயாவும் இவைபோன்ற பிறவும், பல்வகை யான நாத ஒலிகளை எழச்செய்கின்றன. இவையே செயற்கை ஒலிகள் எனப்படும்.

ஒலியும் — இசையும்.

எனினும், இவ்வகைக் கருவிகளில் எழுகின்ற நாதங் கள் மிகச்சிலவே செவிக்கு இன்பத்தைத்தருவன. பெரும்

பாலானவை செவிகளைத் துளைக்கும் கடூரமான ஓசைகளாகவே ஒலிக்கின்றன. செஞ்செவிபெற்ற அறிஞர்கள், இன்னிசைகளை நன்கு உணர்வார்கள். பக்குவமான மனத்தைப்பெற்ற ரஸிகர்கள் நாதவொலியின் நயத்தை அநுபவித்து மகிழ்வார்கள். சுவை அறிந்து தெளிந்த கவிகள் இனிய நாத ஒலிகளைச் செவிமடுக்கும் போது நமக்குச் சுவையூட்டி நம்மையும் நாத ஒலியின் இனிய இன்பத்தை அனுபவிக்கச் செய்கின்றனர்.

ஒலியின் தத்துவம்.

வட்டவடிவமான தோற்கருவியின் வலந்தரையானது, மீட்டுக்கோ, சாப்புக்கோ ஏற்றபடி ஓசைகளை உண்டாக்குகின்றது. இவ்வாறு ஓசைகளை வேற்றுமைபடச்செய்வதற்குக் காரணம், மத்தளக் கருவியினுடைய தோலின் அசைவினால் ஏற்படும் வேறுபாடேயாம். பிடில் தந்தியின் அசைவின் வேகம், தன்மை, அளவு முதலியவற்றால் பிடிலினின்றும் உண்டாகும் நாதத்தின் அளவு, ஸ்வரம், முதலிய குணங்கள் வேறுபடுவது போலவே தோற்கருவியாகிய மத்தளத்தின் தோலின் அசைவினாலேயே அதன் நாதத்தில் வேறுபாடுகள் பல வகையாக உண்டாகின்றன. சாதாரணமான தோற்கருவி ஒன்று, அதிரும் வகைகளில் ஒன்பது வகையான அசைவுகளில் ஒன்பது வகையான ஒலிகளை உண்டாக்குகின்றது. ஆனால், இவை ஒன்றோடொன்று பொருந்தி, காதுக்கு இனிமையாக இருக்கமாட்டா. இவற்றை ஒழுங்குபடுத்திச் செவிக்கு இன்பம் பயக்கும் இன்னிசைகள் ஆக்குவதுதான் மத்தளத்தை அமைத்தவர்களுடைய நோக்கம். அவர்கள் செய்துள்ள ஏற்பாடுகளினால்

தோற்கருவிகளின் அசைவின் தன்மை வேறுபட்டுப்போகின்றது. ஒன்றேடொன்று ஒவ்வாத ஒன்பது வகையான ஓசைகள் ஐந்து வகையான ஐந்துஸ்தாயியின் ஸ்வரங்களாக மாறுபடுகின்றன.

வட்ட வடிவமுள்ள சாதாரண தோற்கருவி ஒன்று, ஒலித்துக் கொண்டிருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அது கீழ்ஸ்வரங்களை உண்டாக்குமாளுல், அப்பொழுது அதன் தோலின் அதிர்ச்சியானது, நடுப்பாகத்தில் அதிகமாயும், விளிம்போரத்தில் குறைவுபட்டும் இருக்கும். அது மேல் ஸ்வரங்களை உண்டாக்குமாளுல், அப்போது அதன் தோலின் அதிர்ச்சியானது விளிம்பின் ஓரத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. அதாவது, விளிம்பின் ஓரத்திலே அதிகப்பட்டுள்ள அதிர்ச்சியால் மேல்ஸ்தாயிஸ்வரங்களும் அதிகப்படியான அநுஸ்வரங்களும் எழுகின்றன. ஆகையால் விளிம்பின் ஓரத்திலேயுள்ள அதிர்ச்சியை - அசைவை அடக்கிவிட்டால். மேல் ஸ்தாயிஸ்வரங்களைப் பேசவொட்டாது தடுத்துவிடலாம். இதன்பொருட்டுத்தான் மத்தளத்தின் விளிம்பின் ஓரத்திலே வெட்டுத்தட்டு அமைக்கப்பட்டிருக்கிறது. வேண்டாத - செவிக்கு இனிமையற்ற மேல் ஸ்தாயிஸ்வரங்களை அது அமுக்கிவிடுகிறது. எப்படியெனில், மேல்ஸ்தாயி ஸ்வரங்களை உண்டாக்குவதற்கு வேண்டிய விளிம்பு ஓரத்து அதிர்ச்சிகளை அது அமுக்கிப்பிடித்து அடக்கி விடுகிறது. அதனுல், மேல்ஸ்தாயிஸ்வரங்களைப் பேசுவதற்கில்லை. ஐந்து ஸ்தாயிஸ்வரங்களுக்கு மேற்பட்ட ஸ்தாயியிலுள்ள ஸ்வரங்கள் செவிக்கு வந்து எட்டும்போது அவை கேட்பதற்கு இனிமையாகவிரா. கீழ் ஸ்வரங்கள் உண்டாகும்போது விளிம்பின் ஓரத்திலே

அதிர்ச்சி குறைவாகவே யிருப்பதால், கீழ்ஸ்வரங்களுக்குப் பங்கம் உண்டாவதில்லை. ஆனால் வெட்டுத்தட்டு மிகவும் அகலமாக இருக்குமாயின், கீழ்ஸ்வரங்களையுங் கூட அது அடக்கிவிடும். அப்போது மத்தளத்தின் நாதம் மிகவும் குறைந்துவிடும்.

வெட்டுத்தட்டின் கனத்தினால், அசையும் தோலின் கனம் சிறிது அதிகப்படுகிறது. இந்த அதிக கனத்தினால், தோலின் அதிர்ச்சி சற்று அதிகமாகத்தான் ஆகும். ஆயினும், இது ஓசையை அதிகப்படுத்தச் செய்யும் உதவியைக்காட்டிலும், அதனைக் குறைப்பதன் பொருட்டுச் செய்யும் தடையே அதிக வன்மை யுடையது. இதுவேதான் அதனை அமைத்தோர் கொண்ட நோக்கமும் ஆம்.

பிடில், தம்பூர், வீணை முதலிய தந்தி வாத்தியங்களை வேண்டியபடி மீட்டி வேண்டிய ஸ்வரங்களை உண்டாக்கிக் கொள்வதைப்போல், மத்தளத்தின் தோலையும் தக்கபடி மீட்டினால் அதற்கேற்றபடி நாதங்கள் எழும். இதன் விசேஷ குணமும் இதுவேயாம்.

மத்தளத்தில் ஒலிக்கின்ற ஸ்தாயிகள்.

முதலாவது ஸ்தாயி

மத்தளத்தின் நடுவில் வலது கையால் லாகவமாகச் சாப்புக்கொடுத்தால், அதில் "டங்... ங்... ங்..." என்று செவிக்கு இனிமை தரும் குளிர்ந்த தொம் நாதம் கேட்கும். இங்ஙனம் கேட்கும் குளிர்ந்த இன்னொலியிலே அநுஸ்வரங்கள் கலந்திருக்கமாட்டா. அங்ஙனம் சாப்புக் கொடுக்காமல் மத்தளத்தின் வெட்டுத்தட்டின் விளிம்பில்

ஆள்காட்டி விரல், பெருவிரல்களை வைத்து மீட்டுக் கொடுத்தால், அல்லது பாதி உள்ளங்கையும், சுட்டு விரலும் கொண்டு அரைச் சாப்புக் கொடுத்தால், அதிலுண்டாகும் நாதத்திலே அநுஸ்வரங்களும் கலந்துண்டாகும். இவ்விதச் செய்கைகளினால், மத்தளத்தின் தோல் ஒரே மொத்தமாக அதிரும்.

இரண்டாவது ஸ்தாயி.

இதில் மத்தளத்தின்மீது உள்ளங்கையின் ஓரத்தினால் அரைச்சாப்புக் கொடுத்துவிட்டுச் சுட்டுவிரலைத் தோலின் நடுவில் சிறிது அழுத்திவைத்திருந்தால், அந்த விரல் வைத்த இடத்திலே அதிர்ச்சியிராது. அதற்கு இருபுறத்திலுமுள்ள தோல் அதிரும். இவ்விதச் செய்கையினால் மத்தளத்தின் தோலானது இரண்டு பிரிவாக அதிருகிறது. இதனால், இரண்டாவது ஸ்தாயிஸ்வரம் உண்டாகிறது.

மூன்றும் ஸ்தாயி.

கொட்டுத்தட்டிலேயுள்ள கண்ணையின் மீது விளிம்பின் ஓரத்தில் சுட்டு விரலையும் சிறிது தள்ளி இலேசாக வைத்துக்கொண்டு, அவற்றிற்கு நேர் குறுக்காகவுள்ள இடத்தில் தட்டினால், மேற்குறித்த மூன்றும் ஸ்தாயி ஸ்வரம் உண்டாகும். இச்செய்கையினால் தோலானது மூன்று பிரிவாக ஒலிக்கிறது.

நான்காம் ஸ்தாயி.

மேற்கூறியதைப் போலவே, மத்தளத்தின் மீதுள்ள சாந்தின் விளிம்பிலே மூன்றுவிரல்கள் விலக, விலக வைத்துக்கொண்டு தோலின் விளிம்பில், நடுவிரலுக்கு

நேர்குறுக்காகவுள்ள இடத்தில் இலேசாகச் சாப்புக் கொடுத்தால், மேற்குறித்த நான்காவது ஸ்தாயி ஸ்வரம் உண்டாகின்றது. இச்செய்கையினுல் தோலானது நான்கு பிரிவுகளாக ஒலிக்கின்றது.

ஐந்தாம் ஸ்தாயி.

மேலே கூறியவாறு மத்தளத்தின் சாந்தின் விளிம்பின் ஓரத்திலே நான்கு விரல்களைச் சிறிது தள்ளித் தள்ளி வைத்துக்கொண்டு தோலின் விளிம்பின் ஓரத்திலே சாப்புக்கொடுத்தால் மேற்குறித்த ஐந்தாம் ஸ்தாயியின் ஒலி எழுகின்றது. ஆனுல், அந்த ஒலி அதிகக் கார்வை உள்ளதாகவிராது. பெரிதாகவும், மிக நன்ருகவும் செய்யப்பட்ட மத்தளத்தினுங்கூட இவ்வொலி இலேசாகத்தான் கேட்கும். இச்செய்கையினுல் தோலானது ஐந்து துண்டுகளாக ஒலிக்கின்றது.

மத்தளமானது இவ்வகையாக ஒலிக்கும்போது அதன்மீது இலேசாக மணலைத்தூவினுல், அந்த மணலானது, சிற்சில வகையாகப்படிகிறது. மூன்ரும் ஸ்தாயி ஸ்வரங்கள் உண்டாகும்போது சிலவகையான மணல் வடிவங்களும், நான்காம் ஸ்தாயிஸ்வரங்கள் உண்டாகும் போது வேறு வகையான மணல் வடிவங்களும் உண்டாகின்றன.

பண்டைக்காலத்தில் விளங்கிய நமது தோற்கருவியின் தொழில் வல்லார்கள் இசையை இன்பமயமாகச் செய்வதற்கென்றே மத்தளத்தைப் பக்கவாத்தியமாகப் பரிமளிக்கும்படி பன்னுள் பலவாறு ஆராய்ந்து அரிதாய்க்கண்டு அமைத்த மத்தளத்தின் அற்புத இசை இன்பத்தை என்னென்று எடுத்தியம்புவது?

கர்ணகடூரமான பறையின் ஒலியைக் *கேட்போர் செவிகளுக்கு இன்னமுதமென இனிக்கும்படி இனிய ஓசையாகப் பண்படுத்திய பண்டையோர்கள், நாத ஒலிகளின் தத்துவங்களை நன்குணர்ந்து தெளிந்து இங்ஙனம் மத்தளத்தைப் புதுமையாக்கத் தடாரென அமைத்தார்களா? அல்லது நீண்டகாலமாக நாளடைவில் சிறிது சிறிதாக, ஒவ்வொன்ருக தற்செயலாக ஏற்பட்ட அனுபவத்தினுல் செய்தார்களா? அல்லது தானுகவே மாறிமாறி வந்த தோற்கருவியாகிய மத்தளமானது ஒருகாலத்தில் யாவரும் கேட்டு இதயங்களிக்கும் இசைக் கருவியாக இலங்கிற்ரு? என்று வியக்க வேண்டியதாயிருக்கின்றது.

இனிமையற்றதான நாதத்தை உண்டாக்குவதுதான் பறை என்னும் தோற்கருவியின் இயற்கைக்குணம். கர்ண கடூரமுடையது பறையொலியென்பது உணர்ந்து அதே வடிவத்தை யுடையதெனினும், இன்னிசையை இனிது பயப்பதான மத்தளத்தை மாண்புபெற ஆய்ந்தமைத்த நமது பண்டையோர்களின் இசையுணர்ச்சியும் புதுமையைப் புதுக்கி நிரூபிக்கும் நுணுகிய ஆராய்ச்சித் திறமையும் பெரிதும் கொண்டாடிப் புகழ்ந்து போற்றத் தக்கன. என்னெனின், இனிமையற்ற ஒலி, அல்லது ஓசையின் தத்துவத்தை நன்கறிந்து இனிமையுள்ள ஒலியாக -

---

* பறையொலி கர்ணகடூரமென்பது, கம்பராமாயணம் பாலகாண்டத்தில்— "கோதில்யாழ்

நறையடுத்த வசுணாஈன் மாச்செவிப்
பறையடுத்தது போலுமென் பாவரோ"

என்ற செய்யுளால் விளக்கமாம்.

இன்னிசையாக மாற்றிய செயலானது, ஒலியின் தன்மைகளையும், தத்துவங்களையும் நன்கு உணர்ந்து தெளிந்தவர்களே முயன்று செய்யக்கூடிய அரிய செயலாகும். கண்டபடியெல்லாம் கரடு முரடாய்க் காதுக்கு அருவருப்பாய் ஒலிக்கின்றதான தோற்கருவியொன்றை நன்றாகச் செப்பனிட்டுச் சீர்திருத்தி மிகமிக மதுரமான ஓசையைக் கொடுக்க வல்லதான மத்தளமாக மாற்றிய அவர்களுடைய அறிவின் திறமும் ஆராய்ச்சி வன்மையும் பெரிதும் பாராட்டுதற்குரியன.

மத்தளம் கற்பதற்குரிய தாளச் சொற்களும்—ஜதி முறைப் பாடங்களும், ஏழுகவுத்துவம், கோடரி முதலியனவும்.

தாளம என்பது சிவனும், சத்தியும் கூடியதனால் வந்த பெயரென்று—

“ தகாரமே ருத்திரனுஞ் சார்ந்த ளகாரம்
பகருகின்ற பார்வதியாம் பன்னும் — மகரவொற்றே
மாலா மகாரமே மன்பிரம மாகுமென்றே
சேலார் விழியாய் தெரி.” (தாளதத்துவம்.)

என்று தாளவியலில் கூறப்பட்டுள்ளது. தாள சம்பந்தமான தா, தீ, தொம்..., நம்..., என்னும் நான்கு தமிழ்ச் சொற்களே ஆரம்பத்தில் மத்தளங் கற்கும் மாணவர்

நல்ல இரசிகரும், கவியும், விஞ்ஞானியும், பேரறிவும், பெரும் புகழும்படைத்த பெரியாருமாகிய சர். சி. வி. இராமன் அவர்கள், இன்னிசைக் கருவிகளுள் ஒன்றாகிய மத்தளத்தைப்பற்றி அரிய தோர் ஆராய்ச்சியைப் பல வருடங்களாக நடத்திக்கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன்.

ஆசிரியர் மூலம் கேட்டுப் பயிலுதற்குரியன. "தா" என்பது வல்லினம்; "தீ" என்பது மெல்லினம்; "தொம்" என்பது வல்லினம்; "நம்" என்பது மெல்லினம். இதன் பின்னரே, கி, ட; த, கி, ட; தி ... கி ... ட ... தொம் ... கி ... ட ... நம் ... கி ... ட என்ற சொற்களையும்; இதன் பின்னரே கிடதக தகிட; கிடதக திகிட; கிடதக தொம் கிட, கிடதக நம்கிட என்ற சொற்களையும்; "தளாங்கு, தகதளாங்கு" என்ற சொற்களையும் மத்தளத்தில் மாணவர் பயிலவேண்டும். முதலில் தா என்ற சொல்லை மத்தளத்தின் இடது பக்கத்திலுள்ள "தொப்பி" என்று கூறும் பக்கத்தில் **இடது கரத்தின்** விரல்களைப் பிரிக்காமலும்; விறைப்பாக இல்லாமலும் நடுவில் விரல்நுனிகள் மட்டும் அழுந்தும்படி வைத்துக் கற்கவேண்டும்.

(2) **தீ** என்ற சொல்லை மத்தளத்தின் வலது பக்கத்திலுள்ள **"வலந்தரை"** என்று கூறும் பக்கத்தில் வலது கரத்தில், **கரணைப்பாகத்தின்** நடுவில், ஒரு அங்குலம் கரத்தைப் பின் தள்ளி வைத்துப் பயிலவேண்டும்.

(3) **தொம்** என்ற சொல்லை மத்தளத்தின் இடது பக்கத்துள்ள தொப்பியில் இடது கரத்து விரல்களை இலேசாகப் பின் பக்கம் வளைத்து விரல்கள் இரண்டு அங்குல மட்டும் அப்பகுதியில் படும்படியாக அணைத்து விளிம்பின் ஓரத்தில் தொம் என்ற தொனி கேட்கும்படி பயிலவேண்டும்.

(4) **நம்** என்ற சொல்லை, மத்தளத்தின் வலது பக்கம் கரணை மீது ஆள்காட்டி விரலை ஊன்றி, ஆள்காட்டி விரலால் மீட்டின் மேல் நன்ருகப்பதியும்படி அடித்துப் பயிலவேண்டும். அப்பொழுது நடுவிரல் சிறிது உயர்ந்

TAMIL NADU ... LIBRARY
No. 101258

திருக்கும். தொடக்கத்தில் மாணவர்கள் ஆள்காட்டி விரலை அழுந்த ஊன்றிப் பயில்வாராக. ஆள்காட்டி விரலை அழுந்த ஊன்றுமல் மத்தளத்தின் கரணையில் தட்டினல், 'பூம்' என்ற ஒருவித தொனியுண்டாம். அது உண்டா காமல் இருப்பதற்கே ஆள்காட்டி விரலை ஊன்றிப் பயில வேண்டும். இதன்பின்னரே (5) கி என்ற சொல்லை மத்தளத்தின் வலது பக்கத்தில் கரணைப்பகுதியில் முன்னர் தீ என்ற சொல்லைப் பயின்ற இடத்தில் கட்டைவிரலும், ஆள்காட்டி விரலும் மத்தளத்து மையின்மீது லேசாகப் பதியும்படி சற்று உயர்வாக வலதுகரத்தைத் தூக்கி எஞ்சிய நடுவிரல், கணையாழி விரல், சுட்டு விரல் ஆகிய மூன்று விரல்களையும் சேர்த்துத் தட்டினல் 'கி' என்ற சொல்லின் தொனி கேட்கும்.

(6) 'ட' என்ற சொல்லையும் மேலே குறித்த வலந்தரையின் கரணையையொட்டி மைதடவிய பக்கத்தில் ஆட்காட்டி விரலைமட்டும் நடுவிரலினின்றும் சிறிது விலக்கி அது பதிந்திருக்கவும் எஞ்சிய நடுவிரலும் கணையாழி விரலும் மோதிர விரலின்றும் சிறிது விலகி மைதடவிய பாகத்தில் பதியும்படி அவ்விரல்களை வைத்தும், சுட்டு விரலை வெட்டுத்தட்டில் பதியும்படி வைத்துத் தட்டினல் ட என்னும் சொல் தொனிக்கும். மேற்குறித்த இரண்டு சொற்களும் சவுக்கமாகவும், விரைவாகவும், மாணவர் பயிலவேண்டும்.

இரண்டாம் பகுதி

'**தண்ணுமை**' என்று **சிலப்பதிகாரம் அரங்கேற்று** காதையில் சிறப்பித்து ஓதப்பெற்ற மத்தளம், தோற்கருவிகள் அனைத்தினும் மேம்பட்டதென்றும் தனிச்சிறப்

புடையதென்றும்; தேவவாத்தியமென்று பரதநூல்கள் விதந்தோதுகின்றன வென்றும்; அவ்வாத்தியத்தினின்று எழும் ஓசை, மிக்க இனிமையும், தண்ணென்று குளிர்ந்த நர்தமும் உடையதாய் அமுதமயமாய்ச் செவிக்கு நல்லின்பத்தை அளிக்கின்றதென்றும்; அதனைச் செவியமுதம் எனச்செப்பினு மிகையாதென்றும்; அவ்வோசையை, மத்தளத்தை இசைக்கும் வல்லான்தான், பலகாலம் வருந்திப்பயின்று தேர்ச்சிபெற்றதன் பயனால் அவன் தனது வலது கை ஆள்காட்டி விரலாலும், பெருவிரலாலும், மத்தளத்தின் முன்பாகமாகிய வலந்தரையின் கரணையின்மீது மிகவேகமாகவும், மெதுவாகவும் மீட்டியும்; அரைக்கையினால் சாப்புக் கொடுத்தும் எழச்செய்கின்றானென்றும்; அவ்வினிய ஓசையைச் செவிமடுத்து நுண்மதியினராகிய அறிஞர்கள் அதனைப் "பிரணவநாதம்" என்று கூறுகின்றனரென்றும்; இந்நாதம் தந்திவாத்தியத்தில் தலை சிறந்த வீணைச்சுருதி யுடனும்; இதற்கடுத்த தம்பூர், பிடில் சுருதிகளுடனும்; இவைகளுக்கு அடுத்த ஆர்மோனிய சுருதியுடனும் இனிதொத்துலயிக்கின்றதென்றும்; இச்சுருதிகளுடனே யன்றி வாய்ப்பாட்டு - கூத்து - நாடகம் - கதை - கேளிக்கை - பஜனை முதலிய இசைகளுடனும் இனிதுறக்கலந்து அவ்விசைகளைப் பரிமளிக்கச்செய்யும் பான்மையுடைய தென்றும் முதற்பகுதியில் கூறியுள்ளேன்.

மற்றும் மும்மூர்த்திகளில் முதல்வரும்; "ஆடவல்ல பிரான், அம்பலத்தரசு, மன்றுளாடி, சிற்சபாநாதன்" என்று சிறப்பித்தோதப் பெற்றவருமான ஆனந்தக் கூத்தன், சிதாகாசமாக விளங்கும் சிதம்பரத்தின் பொன்னம்பலத்தும், ஆலங்காடு, நெல்வேலி, ஆலவாய்,

பேரூர், குற்றாலம் முதலிய மன்றங்களிலும், அடியார்கள் விருப்பத்தின் பொருட்டு ஆடிய அரும் பெருங் கூத்துக்களில் பிரமனும், திருமாலும், திருநந்தி தேவரும், சந்தர்ப்பத்திற்கேற்ப மத்தளங்கொட்டி இன் புறுத்தினர்களெனின், மத்தளத்தின் மாண்புக்கு வேறு சான்றும் கூறவேண்டுமோ?

இனி, இவ்விரண்டாம் பகுதியில் மத்தளம் கற்ப தற்கு மாணவர்க்குப் பயிற்சிக்குரிய நாளச்சொற்கள், ஜதிகள், டேக்கா, மீட்டு, சாப்பு, அரைச்சாப்பு, பரன், முதலிய விவரங்களும், அவற்றிற்குரிய பாடங்களும், ஏழுகவுத்துகம் (கவுத்துவம்) கோடரி, மலப்புக்களும்; வரிசை பெறக்கூறியும்; மத்தளத்தைப்பற்றி அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய செய்திகளையும்; கவனிக்க வேண்டியவைகளையும், கைக்கொள்ள வேண்டியவைகளை யும், மற்றும் சிலவற்றையும் விளக்கியும் விவரித்திருக் கிறேன்.

மத்தளம் கற்பதற்குரிய சொற்களும் — அவை தோன்றிய விதங்களும்.

மத்தளம் கற்கும் மாணவன் தொடக்கத்தில் தனது இஷ்ட தெய்வத்தையும், வழிபடு கடவுளையும் வணங்கியபின் குருவை வணங்கி அவர் ஆசீர்வதித்துக் கொடுக்கும் மத்தளத்தை இருகைகளிலும் ஏந்திப்பெற்று கிழக்குமுகமாக ஆசிரியன் எதிரே யமர்ந்து இருகைகளை யும் விறைப்பின்றித் தளர்த்தியாக வைத்து, அர்த்த சந் திர ஹஸ்தத்தில் அதாவது பாதியளவான விரல்களினால் மத்தளத்தின் இருபக்கத்திலும் ஆசிரியன் கூறும் - த - தி - தொம் - நம் என்ற சொற்களைச் சிரத்தையுடன்

பயிலுதல் வேண்டும். ஆனந்தக் கூத்தன் ஆதியில் அரு நடம் புரிகையில் அவரது **தத்புருஷம் - அகோரம் - சத்யோஜாதம் - வாமம் - ஈசானம்** என்னும் ஐந்து முகங்களிலும் முறையே த - தி - தொம் - நம் - ஜெம் என்ற இவ்வைந்து சொற்களும் தோன்றின வென்று பரதநூல்கள் பகருகின்றன. மற்றும், அவரது திருக்கரத்திலுள்ள தமருகத்தினின்றும், "**கிண, த்ருணு, கிடத்திரும், ஜெணு, ரிம், டிண்டிம், கிர்ர, திருங், மஹம்**" ஆகிய இவ்வொன்பது சொற்களும் பிறந்தனவென்றும், ஆக இவ்விருவகைகளிலும் அடங்கிய **பதினொன்கு சூத்திரங்களுள்** சமஸ்த்த தாள ஐதிகளுக்குரிய சொற்பகுதிகள் யாவும் அடங்கியுள்ளன வென்றும் நவில்வது "**நந்திமதம்.**"

கோகளாதி முனிவர்கள் — ஆதியில் ஆலங்காட்டுக் காளியுடன் தாண்டவம் ஆடிய ஆனந்தக் கூத்தன் காற் சதங்கை, மேலே கிளம்பி ஆகாயம் அளாவிக் கீழே இறங்கியபோது அவரது **தோள், தொடை, பாதம், பூமி** ஆகியவற்றின் மீது பட்டுவீழ, அவற்றினின்றும் "**த - தி - தொம் - நம்** என்ற சொற்கள் தோன்றின வென்றும்; அத்தாளச் சொற்களே மத்தள மாதிய வாத்தியங்களுக்கு முதன்மையாவன வென்றும்; சத்தியும் சிவமும் கூடிய இருகரங்களேயும், **அர்த்த சந்திர ஹஸ்தத்தில்** அதாவது உள்ளங்கையின் முன்பாகம் பாதியளவில் சமமாக மத்தளத்திலும் வைத்து "**தீம் தீம் திமிதாம் தாம்**" என்று ஓசை எழுமாறு முழக்கும்போது உண்டாகிய ஓசையே ஏழு சுரங்களின் நாதங்கள் என்றும் கூறுகின்றனர். இந்த நாதங்களிலுள்ள இரண்டு எழுத்துக்களுள் "**நகாரம் பிராணன்**" என்றும், **தகாரம்**

"அக்கினி" என்றும் இந்தப் பிராணுக்கினி சம்மேளனத்தால் ஸ்வரயுக்தமாகத் தோன்றுவதே நாதம் என்றும் கூறப்படும்.

மத்தளத்திற்குரிய பிராணன்கள் ஐந்து. அவை — 1. "நந்தகோஷம்" 2. "நாத கோஷம்" 3. "சுகோஷம்" 4. "தாள கோஷம்" 5. "கான கோஷம்" என்பன. இவைகளில், நந்தகோஷம் நாதகோஷம் என்னும் இரண்டினுள், "மந்தர மத்திம தாரம்" என்னும் ஸ்வரங்கள் தொனிக்கின்றன வென்றும், சுகோஷம் என்பது ஸ்வஸ்ரமாய்ப் பேசக்கூடியதென்றும்; தாளகோஷம் என்பது லயம் பிசகாமல் வாசிப்பதென்றும் கான கோஷம் என்பது சுருதி கலேயாமல் சப்திப்பதென்றும் கூறுவர்.

மத்தளக் கருவியில் முதலில் பயில்கின்ற தாளச்சொற்களும்— தாளபாடங்களும்.

முதலில் த – தி – தொம் – நம்.

(2) கிட தகிட; கிடதிகிட; கிடதொம்கிட; கிடநம்கிட.

(3) கிடதக தகிட; கிடதகதிக்கிட; கிடதக தொம் கிட, கிட தக நம்கிட.

(4) தளாங்கு – தகதளாங்கு.

கி - ட ஆகிய இவ்விரண்டு எழுத்துக்களின் முன்னர் ஓர் த சேர்த்து த – கி – ட என்று மூன்று எழுத்துக்களைக்கூட்டி —

த — கி — ட
தி — கி — ட

தொம் — கி — ட
நம் — கி — ட

என்று நான்கு முறை சேர்த்து அப்பியசித்தல் வேண்டும். இதனை திஸ்ரஜாதி ஏகதாளத்தில் பயில்வது பழக்கம். திஸ்ரம் – மூன்று எழுத்துக்களைக் கொண்டது – இவற்றைப் பயிலும்போது தக்கிட்டா; திக்கிட்டா; தொம் கிட்டா; நம்கிட்டா என்று அச்சொற்கள் திரியும். இந்த 'தக்கிட்டா' என்னும் சொல்லை, சதுர்ஸ்ர ஜாதியிலும் சொல்லலாம்; அப்படிச் சொல்லும் போது அது த - கிட்ட; தி - கிட்ட; தொம் – கிட்ட; நம் – கிட்ட என்று நான்களையில் அமைந்திருக்கும். இச்சொல்லே பின்னர் 'கிடதக' என்ற சொல்லைக்கூட்டி கிடதக – த கிட; கிடதக – திகிட; கிடதக – தொம்கிட; கிடதக - நம்கிட என்று பெருக்கம் பெறும்.

குறிப்பு.

மேலுள்ளவற்றில் 'தக' என்பதில், 'க' என்ற சொல், புதுமையாகத் தோன்றும். அதுபுதிதல்ல. 'கி' என்ற சொல்லை மத்தளத்தில் பயிலும்போது முன்னர்த் தட்டியது போல் மத்தளத்தில் தட்டினல் 'க' என்ற தொனியே உண்டாகும். ஆகையால் 'கி' 'க' என்ற இரு சொல்லும் ஒரு சொல்லேயாம். இவைபோலவே பிற சொற்களும் அதாவது த - தி - தொம் - நம் என்பவை உயிர், மெய்ச் சொற்களால் எங்ஙனம் வேறுபடினும், மத்தளத்தில் தாளச்சொல்லாகப் பயிலப்படும் இடம் மட்டும் எந்தக்காரணத்தைக் கொண்டும் மாறுபடாது. 'தொம்' என்ற சொல்லும்; 'தோம்' என்று மாறினும், 'நம்' என்ற சொல் 'ணம்' என்ருலும், இடம் ஒன்றே.

மத்தளம் கற்கும் மாணவர்கள் மத்தளத்தில் பயிலும் சில தாளச்சொற்களைத் தெளிவாக உணர்தற்குரிய விளக்கங்கள்.

தா — தீ — தொம், நம், கி, ட, என்ற சொற்களை மத்தளத்தில் தட்டும் விதத்தை விவரமாக முன்னரே கூறினேன். இங்கு, மத்தளத்தின் வலது பக்கத்தில் கரணைப் பக்கத்தில் தீ என்ற சொல்லைத்தட்டிப்பயின்ற இடத்திலேயே பெருவிரலையும், ஆள்காட்டி விரலையும் மத்தளத்தின்மீது படாமல் சிறிது உயர்த்தித் தூக்கி எஞ்சிய மூன்று விரல்களையும் சேர்த்துத் தட்டினால் கி என்ற சொல் தொனிக்கும் என்றும்; 'கி' தட்டிய மூன்று விரல்களையும் விடுத்துப் பெருவிரலோடு சேர்ந்த ஆள்காட்டி விரலால் கி, தொனிக்கும் இடத்தில் தட்ட ட, என்ற சொல் தொனிக்கும் என்றும்; கூறி இனிமேலே பயிலவேண்டிய 'தளாங்கு என்னும்' சொல்லைப்பற்றிய விளக்கத்தை விவரிக்கின்றேன்.

"தளாங்கு" என்ற சொல் த - ளாங், கு என்ற மூன்று சொற்கள் கொண்டதாயினும், த, க, என்று இரண்டு சொற்களின் அளவுடையது.

"தக — தளாங்கு" என்ற சொல்லில், த என்னும் எழுத்தை முன்போலவே மத்தளத்தின் இடது பக்கமும், "ளாங்" என்ற சொல்லை, மத்தளத்தின் வலது பக்கம் கரணையில் அரைச்சாப் கொடுக்கும் ஸ்தானத்தில் உள்ளங்கையின் சுட்டுவிரலின் அடிப்பக்கத்தில் தட்டியும்; 'கு' என்ற எழுத்தை கி இடத்திலும் பயிலுதல் வேண்டும்.

இனி, "ததிங்கிணதோம்" என்ற சொல்லைத் தொனிக்கச்செய்யும் முறையில் சிறிது மாறுதல் ஏற்படும். என்னெனில், ததிங்கிணதோம் என்ற சொல்லுக்குரிய ஸ்தானங்களில் கை வைத்துப் பயின்றால் அச்சொல் வேகமாகத்தொனிக்காது. அதாவது, திங் — கி, ண, என்ற இந்த மூன்று சொற்களும் ஒரே கையில் தொனிக்கச் செய்யவேண்டி ஏற்படுவதால் பயில்வது பிரயாசையானது. இச்சொற்களில் "தி" என்பது "திங்" என்றும்; நம் என்பது ண என்றும் உச்சரிப்பில் வேறுபடும். ஆயின், இவ்விரண்டு சொற்களும் அமைந்த இடம் அவைகளுக்கு முன்னர் குறித்த இடமேயாம். ஆனால், 'தி' என்ற இடத்திலேயே நுனி விரல் படியாமல் 'தி'ச் சொல்லைத்தட்டினால் திம் – திங் – அல்லது திம் என்ற தொனி எழும்.

'கி' என்பதை மத்தளத்தில் தட்டும்பொழுது தானத்தை மாற்றி 'த' இடத்தில் தட்டவேண்டும். தட்டுவது 'த' வாயிருந்தாலும 'ததிங்கிணதோம்' என்னும் சொல்லைக் கூட்டித் தட்டும்பொழுது நடுவில் 'கி' என்பதற்காகத் தட்டும் 'த' வானது 'கி' என்றுதான் கேட்கும். இவ்வித எண்ணத்துடன் அதாவது கரத்தை மாற்றி வாசித்தால்தான் விரைவாகச் சொல் இனங்களை வாசிக்கமுடியும்.

பரன் (Fern) என்னும் மத்தளச்சொல்லைப் பயிலும் விதம்.

மத்தளத்தில் கொலுசு பின்னியது போல் வாசிக்கும் நவீனப் புதுமாதிரிச் சொற்களுக்குப் 'பரன்' என்று பெயர். இதில், 'தர்ரி' என்னும் சொல்லிலுள்ள 'த' என்னும் சொல்லை 'ட' என்றும் 'க' என்னும்

சொல்லை, 'த' என்றும் 'த' என்னும் சொல்லை, அரைச் சாப்பிடத்தில் 'க' என்றும் 'கி' என்னும் சொல்லை 'த' என்றும் மத்தளத்தில் பயிலுதல் வேண்டும். "கிட தக" என்னும் சொல்லானது எப்பொழுது வரினும் கை மாருது 'தகதரிகிடதக' என்னும் சொல் 'டகதக கிட தக' என்னும் சொல் "டகதககிடதக" என மாறிப் பேசும். "கிடதக தகதரிகிடதக" முன்சொன்னவாறே பயிலுதல் வேண்டும்.

1—'தளாங்கு' என்ற சொல்லில் 'கு' என்பதை மட்டும் தொம் என்ற இடத்தில் தட்டவேண்டும்.

2—'தத்தீம்' என்பதை 'நம், தொம்' பயிலும் இடத்தில் பயிலுதல்வேண்டும்.

3—'தகதீம்' என்பதை திம் என்று தொம் இடத்தில் தட்டவும்.

4—'தரிகிட' என்பதை 'தரி' என்று தட்டிய இடத்தில் நம், த என்னும் இடத்தில் தட்டவேண்டும்.

5—'தகதிமி' என்பதை 'தகதக' என்று தட்ட வேண்டும்.

6—'தகஜெணு' என்பதை 'நம், தொம், கி' என்ற இடங்களில் தட்டவேண்டும்.

7—'தகதித்தாங்கிட' என்பதை நம், தொம், தித் (அரைச்சாப்) தாம் த, க, என்னும் இடத்தில் தட்ட வேண்டும்.

8—'தித்' என்பதை தொம், என்று சேர்த்துத்தட்ட வேண்டும், இதுவே ஜம் என்று கூடத்தொனிக்கும்.

மோரா அல்லது தீர்மானம் என்பதன் விளக்கம்.

"தகதரிகிடதகதொம் — தகதரிகிடதகதொம் —தக தரிகிடதகதொம்" என்று மும்முறை மத்தளத்தில் தொனிக்கச் செய்தவற்கு "**மோரா**" என்று பெயர். மேற்குறித்தது சிறிய மோரா. இதனைத் **தீர்மானம்** என்றும் செப்புவர்.

'தகதரிகிடதக - தகதரிகிடதக
தகதரிகிடதக தாம்தாம்
தகதரிகிடதக - தகதரிகிடதக
தகதரிகிடதக தாம்தாம்
தகதரிகிடதக - தகதரிகிடதக
தகதரிகிடதக தாம்.'

தகதரிகிடதகதாம் - தகதரிகிடதகதாம். தகதரிகிட தாம் என்று மூன்று முறை மத்தளத்தில் கொட்டுவதை மோரா அல்லது தீர்மானம் என்பர். இந்த மோரா அல்லது தீர்மானத்தில் தா என்று தட்டும் இடமெல்லாம் ஜம் என்றுகூட சொல்லலாம். ஜம் என்ற சொல்லுக்கு சாப்பையும்; 'தொம்' என்பதையும் கூட்டிக் கொட்டுதல் வேண்டும்.

'தத்தளாங்கு' என்ற தீர்மானத்தின் தொடக்கத்தில் 'த' வை, மீட்டிலிருந்து தட்டவும்; இறுதிச்சொல்லாகிய 'தா' வை, ஜம் என்ற தொனியிலேயே கொட்டவும்.

எந்த தீர்மானத்தையும் மத்தளத்தில் கொட்டினும் இறுதியில் உள்ள 'தா' சொல் 'சாப்புடன்' தொம் என்ற சொல்லையும் சேர்த்தே ஜம் என்றே வழக்கத்தில் பயிலுதல் வேண்டும்.

மேலே காட்டிய 'தகதரிகிடதகதாம்' என்ற 'பரன்' சொல்லே, மூன்றுதரம் கொட்டினல் அதே அளவில் வேறொரு தீர்மானம் உருப்பெறுகிறது. இது போலவே அநுபவங்காரணமாகத் தோன்றும் கற்பனைச் சொற்களைச்சேர்த்துப் புதுப்புது விதமான மோராக்களைத் திறமையைப் போல் மத்தளத்தில் முழக்கின் செவிக்கின்பத்தை விளைவிக்கலாம்.

"தத்தளாங்கு தொம் தா" என்ற சொல்லையும் மூன்று தடவை கொட்டினல் பரன் சொல் மோராவாம். "தகதரிகிடதக தா" என்ற சொல்லையும் மும்முறை மத்தளத்தில் தட்டினல் அதே அளவில் வேறொரு தீர்மானம் தோன்றும். இவைபோலவே பரனில் முற்பகுதி ஒவ்வொன்றையும் தனித்தனியே மூன்று தடவை முழக்குதல் வேண்டும்.

மத்தளத்தின் கரணைப்பக்கத்தில் வலதுகை விரல்களைச் சேர்த்துக் கரணையின்மீது பின்பக்கமாக ஓரத்தில் மேலே படத்தில் காட்டியபடி தட்டினல் சாப் என்பது தொனிக்கும்.

மத்தளத்தில் "டேகா" என்ற சொல்லை, உபயோகிக்கும் விதம்.

"டேகா" என்பது மத்தளத்தில் உபயோகிக்கும் தாளச்சொற்களில் ஓர்வகைச் சொல், இது "இந்துஸ்தானிச்சொல்" இது மத்தளத்திற்கு இன்றியமையாததும் நாத ஒலியை இனிமை பயக்கச் செய்யவல்லதுமாம். இசையைச் சுவைபடச் செய்வதிலும் முதன்மையுடையது.

இதன் தொடக்கம், "நந்தின் தின்ஞு – நகம் தின்ஞு – நாதின் தின்ஞு – தத்தின் தின்ஞு தின் தின்ஞு" என்று தொடங்கும் இயல்பையுடையது.

இவற்றில், 'தத்தின்' என்பதில், 'தி' என்னும் எழுத்தை 'நம்' பயின்ற இடத்திலும் 'தின்' என்னும் சொல்லை மீட்டுக்கும் கரணைக்கும் இடையிலுள்ள இடத்தில் 'நம்' என்னும் சொல்லைத் தட்டும் ஆள்காட்டி விரலால் அடியில் படத்தில் காட்டிய மாதிரிப்படி தொனிக்கச் செய்யவேண்டும்.

"தகதின்" என்பதில், 'த' என்னும் எழுத்தை 'நம்' இடத்திலும், 'க' என்னும் எழுத்தை "தி" என்ற இடத்திலும் நடுவிரலால் மட்டும் தட்டியும், 'தின்' சொல்லை முன் சொன்னவாறே தட்டுதல் வேண்டும்.

குறிப்பு விளக்கம்.

மேலே காட்டிய நால்வகைச் சொற்களையும் மத்தளத்தின் வலந்தரையிலே ஒன்றுமுதல் ஆறு காலங்களில் அதாவது ஷட்காலத்தில் மத்தளங்கற்கும் மாணவன் கவனத்துடன் பழகிப் பயிற்சி பெறுதல்வேண்டும். பின்னர் – இடதுகையில் தொப்பிப்பக்கம் தட்டும் "தொம்" சொல்லை, தத்தின் என்பதில் 'த' என்ற எழுத்துடனும், 'தின்' என்ற சொல்லோடும் கூட்டித் தொனி வேறுபாடின்றி, அதாவது 'தொம்' என்ற தொனி பேதம் மாறுபாடின்றிச் செவிக்குப் படும்படி தட்டவேண்டும்.

பயிற்சி.

டேகா என்ற சொல்லுடன் பிற சொற்களையும் கூட்டி விளம்ப காலத்தில் அதாவதுமு தற்காலத்தில் பயிற்சி செய்யும் விதமாவது :—

1 நம் தின் தின்ன - நகம்தின் தின்ன - தின் தின்ன - தத்தின் தின்ன
தத்தின் தின்ன - தின் தின் தின்ன - நம்தின் தின்ன தக்கிடகிடதகி

2 நம்தின் தின்ன ,, ,,
தத்தின் தின்ன ,, ,,
தத்திம் கிடதகி

3 நம்தின் தின்ன ,, ,,
தத்தின் தின்ன ,, ,,
தரிகிடகிடதகி

என்று மூன்றுதரம் தட்டியபின் - தகதரிகிடதகதா
தகதரிகிடதகதா
தததரிகிடதகதா
என்று சிறிய தீர்மானம் கொடுத்தல்வேண்டும்.

இவை போலவே பல்வகை 'பரன்' சொற்களையும் பயிற்சிக்கும் பழக்கத்திலும் கைதேர்ந்த வகையில், நவீன மாகவும், கற்பனையாகவும் பயிற்சி செய்தல் வேண்டும், இறுதியான டேகாச்சொல்லில் 'பரன்' சொல்லைத் தீர் மானமாக அடித்தல் வேண்டும்.

டேகா சொல் பின்னுமொருவிதம்.

தத்தின் தின்ணு கிடதகதின் தின்ணு
தீம்கிடதக தின்ணு கிடதகதின் தின்ணு
தத்தின் தின்ணு கிடதகதின் தின்ணு
தீம்கிடதக தின்ணு தக்கிடகிடதக தகரிகிடதக
தத்தின் தின்ணு கிடதகதின் தின்ணு
தீம்கிடதக தின்ணு தகதித்தாங்கிட தகதரிகிடதக
தகதித்தாங்கிட தகதரிகிடதகதா
தகதித்தாங்கிட தகதரிகிடதகதா
தகதித்தாங்கிட தகதரிகிடதகதா

என்று மோரா இறுதியாக முழக்குதல் வேண்டும்.

மேலே காட்டிய பாடத்தில் 'தின்ணு' என்பதிலுள்ள 'ணு' என்ற எழுத்து 'நம்' என்று பயின்றதைப் போலவே பயிலுதல் வேண்டும். 'தீம்கிடதக' என்ற சொல்லின்கண்ணுள்ள 'தீம்' என்பது "தத்திங் கிணதொம்" என்பதிலுள்ள 'திங்' என்ற சொல்லை முன்கூறியபடி பயின்றதைப்போலப் பயிலுதல்வேண்டும்.

மேலுமொருவகை.

தத்தின்தின் திமிததின் தின்ணு
தகதத்தின் திமிததின் தின்ணு
தத்தின் தகதின் திமிதின் கிடதகதின்

கிடதகதரிகிடதா - கிடதகதரிகிடதா - கிடதகதரிகிடதா
என்று மூன்று தரம் பயிலுதல் வேண்டும்.

மற்றுமொருவகை.

தகிதிமி திமித திம்மி - தகதிம்மி திமிததிமி

மோரா

தத்திமி தகதின்தின்தின்ணு - தின்ணு கிடதக தொம்
தின்ணு கிடதக தொம்
தின்ணு கிடதக தொம் } மோரா

இப்பாடத்திலுள்ள 'மித்த' என்ற சொல்லை 'கதின்' என்ற இடங்களில் தட்டிப் பயிலுதல் நலம். இதில் 'க' எழுத்தை நடு விரலால்மட்டும் தட்டவேண்டும். திம்மி என்ற சொல்லானது 'தின்' 'க' என்ற இடங்களில் தட்டும்பொழுது 'திம்மி' என்று தொனிக்கிறது,

இங்ஙனம் பலபாடங்கள் நாள்தோறும் மத்தளத்தில் பயின்றுகொண்டு வரும்பொழுது கைக்கும், தோலுக்கும் ஒருவித உணர்ச்சியுண்டாகிச் சொல்லுக்கு நயமும் நாதமும் தோன்றி, தோல் நாதம், மரநாதம் சுருதிநாதம் இவை முதலியன தெளிவுபெற்று மத்தளத்தை இசையுடன் ஒத்து வாசிக்கும் பழக்கமும் முதிர்ச்சிபெறும்.

இதன் பின்னரே கிருதிஹஸ்த பாடங்கள்; ஹஸ்த கிருத்திய வாத்திய பாடங்கள்; நாகபந்தாதி கிருதி ஹஸ்தபாடங்கள்; சப்பாணி பாடங்கள்; என்பவற்றை முறையே மத்தளத்தில் பயிலுதல்வேண்டும். இம்மத்தள பாடங்கள் வடமொழி "இரத்நாகரம்;" ஹிந்தி மொழி "சமயாகாரம்" தமிழ் "ஆதிபரதம்" முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளன. அவைகள் இதுவரையில் தமிழ் மொழியில் அச்சு வாகனத்தில் வெளிவரவேயில்லை. மத்தளம் பயிலுவோரின் உபயோகத்தின் பொருட்டு தேவைக்கேற்ற அளவில் இதன்கீழ் வரிசையாகக் கூறியுள்ளேன். அவை அடியில் வருமாறு:—

முதலாவது, நாகபந்தாதி கிருதிஹஸ்தபாடங்கள்.

சுலோகம்:—சிவவக்த்ரோக்த பாடஞும் –
த்பாப் ப்ரதிபாதயே –
தோஷா முத்வாகயன் பாண்ணி
லோகதோ லக்ஷியோத்பதிஹி"

பரம்பொருளாகிய சிவபெருமானது திருமுகங்களி னின்றும் தோன்றிய சொரூப பேதங்களைக் கூறுகின்றேன். அவை – பாண்ணி ; லோகிதம் முதலிய பாடங்கள் என்ப.

மத்தள பாடத்திற்குரிய தாளச் சொற்கள்.

1 "டக - கிண - ணகி" என்பது நாகபந்தம் எனப்படும்.
2 "நககிட - கிடதகி" என்பது பவனம் ,,
3 "கிடகிட - தத்தா" என்பது ஏகம் ,,
4 "கிடதத்தா" என்பது ஏகசாரம் ,,
5 "நகுநகு" என்பது துஷாம் ,,
6 "கிர்ர தகிட" என்பது சமச்சாரம் ,,
7 "தோங்கு தோம்தி" என்பது விக்ஷேபம் ,,

இவ்வேழு பாடங்களும் சிவபிரானது ஐந்து முகங் களில் முதலாவதாகிய சத்தியோஜாதம் என்னும் முகத் தினின்றும் தோன்றினவாம்.

II

1 "நக - கிடதகி" என்பது அலக்னம் ,,
2 "தத்தரிகிட - தத்தரிகிட" என்று இருமுறை வருவது உச்சாரம் எனப்படும்.
3 தக - திகிதிகி – தகதரிகிடதா" - என்பது விஸ்ராமம்
4 டகு நகு - டகுதித்த - தத்தரிகிடதா என்பது விஷமகல்லி
5 "கிர்ரகிட கிர்ரகிட - தத்தரிகிடதா" என்பது சரி
6 "கிரிகிரி, தத்தரி - தத்தரிகிடதா" என்பது ஸ்புரி
7 "நரகித்தாரிகி - தத்தரிகிடதா" என்பது ஸ்புரணம்

இவ்வேழு பாடங்களும் சிவபிரானது ஐம்முகங்களில் இரண்டாவதாகிய வாமதேவ முகத்தினின்றும் தோன் றினவாம்.

III

1 " தரிகிடகிடதகிதா " என்பது சுத்தம்

2 'டடகு - டடகு " என்று இருமுறை வருவதை ஸ்வபூர்ணம் என்ப.

3 " நகிகிண தரிகிரி " என்பது உத்ஸல்லம்

4 " தகேம் தகேம், கேகே டகுடகு தத்தரிகிடதாம் " என்பது வலம் அல்லது வதம்

5 " தோம் கிண கிண, தோம் கிண கிண - டடகு டடகு தத்தா " என்பது அவகடம்

6 " தத்தா " என்பது தகாரம்

7 " கித்தி கித்தி நம்நம் நந்நம் " என்பது மாணிக்கவல்லி

இவ்வேழு பாடங்களும் சிவபிரானது ஐம்முகங்களில் மூன்றுவதாகிய அகோர முகத்தினின்றும் தோன்றினவாம்.

IV

1 " ததகிடகி " என்பது சஸ்திகம்

2 " தோ ஹம், தா " என்பது வலிகோஹலம்

3 " தோம்கிண, தோம்கிண தோம்தோம்கிண " என்பது புல்ல விக்ஷேபம்

4 " தோம் தோம் - கோம் கோம் " என்பது குண்டலிவிக்ஷேபம்

5 " தோம்கிண - தத்தா " என்பது சம்சாரவிலகி

6 " கிடதோம் தோம் - கிணகேம் கேம் " என்பது கண்டநாகபந்தம்

7 "டகுடகு, டகுஜெம் டகுஜெம் " என்பது பூரகம்

இவ்வேழு பாடங்களும் சிவபிரானது ஐம்முகங்களில் நான்காவதாகிய தத்புருஷம் என்னும் முகத்தினின்றும் தோன்றினவாம்

V

1 "தஜெம் தஜெம் - தஜெம் தஜெம் என்பது
சமஸ்வலிதம் அல்லது சமன சமலிகிதம்
2 " திரிகிட - திரிகிட " என்பது விகடம்
3 " கணகண.கி, கணகண,கி " என்பது சத்ருஸம்
4 ,, தித்திக் கிடகி, கிடகி, கிடகி " என்பது
கலோஸ்வலிதம்
5 " திகிதிகி, நகிநகி - திகிநகி என்பது
உடுகரி அகுஸ்பலிதம்
6 " கரகட . கரகட " என்பது உத்ஸல்லம்
7 "தோம் நகட, தோம் நகட " என்பது குத்தம்

இவ்வேழு பாடங்களும் சிவபிரானது ஐம்முகங்களில் ஐந்தாவதாகிய ஈசானத்தினின்றும் தோன்றினவாம்.

மேலே காட்டப்பட்ட ஐவகைப் பகுதிகளில் குறிக்கப் பட்டுள்ள முப்பத்தைந்து விதத் தாளச் சொற்களும் மத்தளத்தில் பயிலுவதற்குரிய பயிற்சிக்குரியவென்று சங்கீத ரத்னகரத்தில் கூறப்பட்டுள்ளது.

இவையேயன்றி வேறு நான்கு வகையான மத்தளத் திற்குரிய தாளச்சொற்கள் அடியில் வருமாறு:—

1 "கும்கும்தரி - தாகிட" என்பது "கோணம்" எனப்பெயர்பெறும். இதனை அபிநயதர்ப்பணம் என்னும் நூலில் கூறியுள்ள "கோணம்" என்னும் ஹஸ்தத்தி னுல் பயிற்சி செய்தல் வேண்டும்.

2 "தரகிட தரகிட - தானகிட, டமடகு" என்பது "சம்பிராந்தம்" எனப் பெயர்பெறும். இதனையும் மேற் கூறியுள்ள நூலில் காணும் "சம்பிராந்தம்" என்கிற ஹஸ்தத்தினுல் பயிற்சி செய்தல் வேண்டும்.

3 "தஹ்ரேம் தஹ்ரேம், கும்கும்; தஹ்ரேம்கும்" என்பது விஷம் எனப் பெயர் பெறும். இதனையும் மேலே கூறிய ஹஸ்தத்தினுல் பயிற்சி செய்தல் வேண்டும்.

4 "ததகித கிகிரி - ததகித கிகிரி - ததகிதகிரி" என்பது அர்த்தசமம் எனப் பெயர் பெறும். இதனையும் மேலே கூறப்பட்ட ஹஸ்தத்தினுல் பயிற்சி செய்தல் வேண்டும். (சங்கீத இரத்னகரம்)

ஹஸ்தகிருத்திய பாடங்கள்

1 "தோம்கிட கிட, தகிடாம்" என்பது உத்புல்லம் எனப்படும். இப்பாடத்தை மத்தளத்தில் அடியிற்குறித்துள்ள சுலோகத்தில் விளக்கப்பட்டுள்ள அஸ்தங்களினுல் அப்யஸிக்கவேண்டும்.

சுலோகம் :— "யதாபிரஸ்தாரிதாங்குஷ்ட:
சுகதுண்டோவிதீயதே
விரலாங்குளிகாதேன
கிரமேண கலகஸ்ததா"

𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌃 𑌶𑍁𑌕𑌤𑍁𑌣𑍍𑌡𑍋 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌵𑌿𑌰𑌲𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌕𑌾𑌤𑍇𑌨 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌕𑌲𑌕𑌸𑍍𑌤𑌥𑌾 ॥

2 "கத்ரேம் கத்ரேம்" என்பது "கலகம்" எனப்படும். இப்பாடத்தையும் மத்தளத்தில் அடியிற்காணும் சுலோகத்தில் கூறப்பட்டுள்ள கைகளினுல் பயிற்சி செய்தல் வேண்டும்.

சுலோகம் :— "வாமேனதஸ்ய ஹஸ்தஸ்ய
தர்ஜன்யங் குஷ்டகாதக:
பரிஞ்ஜேயோ புதைர்ஹஸ்த:
பாண்யந்தரநிகூஹக:

பாதேந தஸ்ய ஹஸ்தஸ்ய தர்ஜந்யங்குஷ்ட பாதத: ।
பரிஜ்ஞேயோ பாஹ்யோஹஸ்த: பாண்யந்தர நிகூஹக: ॥

3 "தோம்கிட தக்கிட - தோம்கிட தக்கிடதா" என்பது "**பாணியாந்தர நிகூஹம்**" எனப்படும். இப்பாடத்தையும் மத்தளத்தில் அடியிற்காணும் சுலோகத்தில் கூறப்பட்ட ஹஸ்தங்களினுல் பயிற்சி செய்தல் வேண்டும்.

அச்சுலோகம்:—"பதாகார ஹஸ்தாய்யாம்
சமுச்சார்யமூர்த்துவதாடனம்
தண்டஸ்யாம் ஹஸ்தம் விபுதா:
வாத்திய விசாரத:" என்பது.

4 ர - ர - ர - ர. நான்கு ரகர எழுத்துக்கள் தொடர்ந்து வருவது தண்டஹஸ்தம் எனப்படும், இப்பாடத்தையும் மத்தளத்தில் இதற்கென விவரிக்கப்பட்ட சுலோகத்தில் கூறப்பட்ட கைகளினுல் பழக்கம் செய்தல் வேண்டும்.

5 "தக்தேம் தேஹடேம்" என்பது யுகம் எனப் பெயர் பெறும். இப்பாடத்தையும் மத்தளத்தில் சுலோகத்தில் கூறப்பட்ட கைகளினுல் பயிலுதல் வேண்டும்.

அச்சுலோகம்:—"ஊர்த்வ பாதத்வயம் கிருத்வா
தலகாதேன ஹன்யதே
படகஸ்ய பதத்வந்த்வம்
தார ஹஸ்தஸ்ததாபவேத்" என்பது.

ஊர்த்வ பாதத்வயம் க்ருத்வா தலகாதேந ஹந்யதே ।
படஹஸ்ய பதத்வந்த்வம் தாரஹஸ்தஸ்ததா பவேத் ।

6 "தரகிட தரகிட - தஜெம் தஜெம்" என்பது "ரகஸ்தம்" எனப்படும். இந்தப்பாடத்தையும் மத்தளத்தில், சுலோகத்தில் கூறப்பட்டுள்ள ஹஸ்தங்களினால் பயிலுதல்வேண்டும்.

சுலோகம் :—

𑌸𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌕𑍃𑌤𑍇 [illegible] 𑌹𑌸𑍍𑌤𑍇 [illegible] 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ।
𑌵𑌿𑌜𑍍𑌞 [illegible] 𑌹𑌸𑍍𑌤𑌃 𑌕𑌥𑌿𑌤𑍋 𑌵𑌾𑌦𑍍𑌯𑌵𑍇𑌦𑌿𑌭𑌿𑌃 ॥

7 "தர்தர்துயர் - துயர்துயர் - தர்துயர்துயர்துயர் தர்துயர்" என்பது பிண்டஹஸ்தம் எனப்பெயர்பெறும். இந்தப் பாடத்தையும் மத்தளத்தில் சுலோகத்தில் கூறப்பட்ட கைகளினால் அப்யசித்தல்வேண்டும்.

அச்சுலோகம் :—ப்ராஹாரே தலஹஸ்தேன
தக்ஷிணேனச பாணினு
த்ருடம் விரசிதம் வித்யான்
ஊர்த்வ ஹஸ்தம் விசக்ஷண ; என்பது.

𑌪𑍍𑌰𑌹𑌾𑌰𑍇 𑌤𑌲𑌹𑌸𑍍𑌤𑍇𑌨 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌨 𑌚 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 ।
𑌦𑍃𑌢𑌂 𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑌂 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌃 ।

8 "தத்கிரும்த - தத்கிரும்த" என்பது ஊர்த்துவம் எனப்படும். இந்தப்பாடத்தையும் மத்தளத்தில் சுலோகத்தில் கூறப்பட்ட ஹஸ்தங்களினால் அப்யசித்தல் வேண்டும்.

அச்சுலோகம் ;—விரலாங் குளித்ப்பவேத்
சிரதோ கீர்த்திமான்
சதுர ஹஸ்தேனவாமபாணினு
வித்வான் நிபிடியதே" என்பது.

𑌵𑌿𑌰𑌲𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌿 [illegible] 𑌯𑌥𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
[illegible] 𑌹𑌸𑍍𑌤𑌕𑌃 ॥

சமபாணிஹஸ்த பாடங்கள்.

1. "கிடகிட—தக்கிட தொம்" என்பது சமபாணி எனப் பொருள்பெறும்.

2. "தோம்தாம் தக்கிட தக்கிட கிடதகி—ததொம் தாம்" என்பது பாணி எனப் பொருள்பெறும்.

3. கிணகிர்ர—கிணகிர்ர—கிணநகி, கிணநகி வஜெம்—தஜெம்" என்பது சஸ்திகம் எனப் பொருள்பெறும்.

4. "கிடதகி - தரகிட, தகிதர கிடதக தஜெம் - தஜெம்" என்பது விஷம அந்தரி எனப் பொருள்பெறும்.

5. "நநகிடகிட, நநகிடகிட, நநகிட ஜெம்" "அவகாதம்" எனப் பொருள்பெறும்.

இவ்வைந்தும் சமபாணி பாடங்கள் எனப்படும்.

சுலோகம் :—" ததோ கபித்தலக்ஷண மாஹ—
தேவதா ஸ்துதிதா ஜம்ஜம் சப்த :
தெநகிடத் கித்யாகி அகாராதி
க்ஷாகாராந்த சாரங்கேண சூரிபிஹீ"
என்பது.

തഥൊ കപിത്ഥലക്ഷണമാഹ — ദെവതാസ്തുതിതാ ജം ജം ശബ്ദഃ — തെങ്ക കിടതകിദ്ധ്യാദി അകാരാദിക്ഷകാരാംത സാരംഗെണ സൂരിഭിഃ ।

(பொருள்)

கபித்தலக்ஷண ஹஸ்தத்தைக்கொண்டு "ஜம் ஜம்," "கிடதகி" முதலான தாளச் சொற்களைக் கடவுள் தோத்திரங்களுக்கு உபயோகிக்கலாமென்றும்; அச்சொற்களுள் அகரம் முதல் க்ஷாகாரம் ஈருகவுள்ள எழுத்துக்

களைச் சேர்க்கலாமென்றும் சங்கீத ரத்னுகரம் நூலாசிரியர் ஸ்ரீசாரங்க தேவர் தமது நூலில் கூறியிருக்கின்றனர் என்பது.

வசனம் :—"யத்ரயோக்த த்ருவதாளாதி சப்த தாள பட்டியம் வ்யாபகாக்ஷர மிஸ்ரதோ - தோம்தோம் ததீன் த்யக்ஷர :" எனப்படுவது வாக்யம் ஆம்.

𑌯𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤 𑌧𑍍𑌰𑍁𑌵𑌤𑌾𑌳𑌾𑌦𑌿𑌸𑌪𑍍𑌤𑌤𑌾𑌳𑌪𑌦𑍍𑌧𑌤𑌿𑌂—𑌵𑍍𑌯𑌾𑌪𑌕𑌾𑌕𑍍𑌷𑌰𑌮𑌿𑌶𑍍𑌰 𑌥𑍋 𑌥𑍋𑌂 𑌥𑍋𑌂 𑌤𑌥𑍀𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌃

என்பது சத்யம். சத்யம் = வசனம்.

மத்தளத்தில் பயிலுதற்குரிய இவ்வகைச் சொற்களேயன்றி மற்றும், தணம், கிணம், தரம், ததனதணம், தளாங்கு, தத்தளாங்கு, தகதளாங்கு, திமி, திமித, ஜெணு, ஜெணுத, ஜெணுததிமி, ஜெம்தரி, ஜெணுதக, ததிமி, ததிமித, தணுதஜெணு, ஜெணுததிமி, திமிததக முதலிய பல்வேறு தாளச் சொற்களும் மத்தளம் பயிலுவதற்கு இன்றியமையாத பாடங்களாக நமது தொன்மைத் தோற்கருவித் தொழிலாளர்கள் இயற்றி வைத்திருக்கின்றனர். இவை மட்டுமா? நமது செந்தமிழ்க் கடவுளாகிய திருமுருகன் திருவருள் நோக்கம் வாய்க்கப் பெற்று ஓதாமலே அவன் அறிவிக்க எல்லாக் கலைகளையும் இனிதுணர்ந்து ஞானத்தின் கருவூலமாகவும், திருப்புகழ்ப் பரமாசாரியனுகவும் விளங்கிப் பெருந்துறவு பூண்டு திருவருணையைப் பிறப்பகமாகக்கொண்ட ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் தாம் பாடிய திருப்புகழ்ப் பாடல்களில் தோற்கருவிகளில் கொட்டும் ஜதிச் சொற்களில் பலவகை இனங்களைப் பல்வேறு மாதிரிகளில் பரக்கக் கூறியிருக்கின்றனர். அச்சொற்கள் யாருங் கண்டு அதிசயித்து

மகிழும்படி அத்துணைச் சுவையுடையனவாய் இருக்கின்றன. அச் சதிச் சொற்களை நாம் ஊன்றிக் கவனிப்போமானால், அருணகிரிநாதர் அத்தொழிலில் மிக வல்லுநராகவும், அநுபவம் வாய்ந்த தொழிலாளராகவும் இருந்தனரோ என்று எண்ணக்கூடியதாய் இருக்கிறது.

திருப்புகழில் காணும் ஜதிச் சொற்கள்.

அவற்றுள் சில வருமாறு :—

" தனத்தன தன, தனதன, தன
திமித்திமி திமிதிமி, திமிதிமிதிமி
தகுத்தகு, தகு தகுதகு தகுதகு தகுதீதோ !
(1) தரித்தரி தரி, தரிரிரி, ரிரிரிரி
தடுட்டு டுடுட்டு டுடுடு டுடுடுடு
தமித்த மத்தள தமருக விருதொலி
கடல்போல"
(திருத்தணிகைத் திருப்புகழ் 14)

(2) " தரிகிட தந்தந் தரிகிட திந்தித்
தகுர்தி யெனுங் கொட்டு டனுடி.
(திரிசிரபுரம் திருப்புகழ் 5)

(3) தித்திமித தீதிமித தீதிமித திமிதத
தத்ததன தானதன தானனன தானனன
திக்குடுடு டுடுமட டாடமடு டுடுடுடு
—என தாளம்.
(இரத்தினகிரி திருப்புகழ் 2)

(4) " தததத தததத ததத தததத
திதிதிதி திதிதிதி திதிதி திதிதிதி
தத்ததத தநததத
தித்திதிதி திந்திதிதி

டகுடகு டிகுடிகு டகுகு டிகுடிகு
டிகுடிகு டகுடிகு டிகுகு டகுட்கு

தத்ததிமி டங்குகுகு
தித்திதிமி டிங்குகுகு

திமிதிமிதிமிதக தந்திமித
தித்திமி திந்திமித. யென'' (திருப்புகழ்)

(5) "செகுதகெண, கெணசெகுத செக்குச்
செகுச் செகுத
கிருதசெய செயகிருத தொக்குத் தொகுத்
தொகுத
டிமிட்டிமி டிமிடிமிட டிட்டிட்டி டிட்டிமிட
டிடிதீதோ.

திரிகடக கடகதிரி தித்திக்ர தித்ரிகட
திமிர்ததிமி திமிர்ததிமி தித்தித்தி, தித்திதிதி
செணுசெணுத, தணசெனுத தத்தித்திகுத்ரிகிட
—ததிதீதோ.

தகுடதிகு தகுடதிமி தத்தத்த தித்திகுட
குகுகுகுகு குகுகுகுகு குக்குக்கு குக்குகுத
தரரரர ரிரிரிரிரி றிற்றித்த றிற்றிரிரி
எனச் சதி முழவு பலவும்.''

(திருத்தணிகைத் திருப்புகழ் 60)

சதிமுழவு=மத்தளம்.

(6) "தகுகுதகு தகுதகுகு திகுததிகு திகுதிகுகு
தங்குத் தகுத்தகுகு திங்குத் திகுத்திகுகு
ஜகணசக சகசகண ஜெகணஜெக ஜெகஜெகண
சங்கச் சகச்சகண செங்கச் செகச் செகண

தனனதன தனதனன தெனனதென
தெனதெனன
திந்தத்த னத்தனன தெந்தத்தெ னத்தெனன"
(திருப்புகழ்)

இவையேயன்றி, மிகப் பழமையுடையதும், அச்சேறுததும் விஷயங்கள் மிக நிரம்பியதுமான "பஞ்சமரபு" என்ற இசை நூலில் மத்தளத்தில் பயிலுவதற்குரிய "கிர - துர, நர - நஃகி - கிட - கிடதகி - கிடகிட - கிட கிடதகி" முதலிய சொற்கள் காணப்படுகின்றன.

தாள முறை

I

தொம்—நம்தொம், கிணதொம், திங்கிணதொம் ததிங்கிணதொம், தததிங்கிணதொம், தகததிங்கிண தொம் கிணதொம் ததிங்கிணதொம்—தீங்கிணதொம் ததிங்கிணதொம்—தததிங்கிணதொம் ததிங்கிணதொம்.

II

தத், தித், தொம்நம், ஜெம், நம், கிடதக தரிகிண தரி கும்ஜம். ஹம்மில.

மகண—யகண — நகண — சகண — தகண, ஜகண, பகண, ககண.

III

த. தக, தகிட, தததகிட, தகதகிட, தகததகிட, தொம் நதொம், கிணதொம், திங்கிணதொம். ததிங்கிணதொம் தததிங்கிணதொம். தததிங்கிணதொம். தகததிங்கிண தொம், கிணதொம் ததிங்கிணதொம் திங்கிணதொம் ததிங்கிணதொம். ததிங்கிணதொம். ததிங்கிணதொம். ததிங்கிணதொம்.

IV

த. தக, தகிட, தை, திக். குரு, தொம், ஜெம், தரிகிட திரிகிட, தித்தரிகிட, தித்தாம், தித்தை, தஜெம் தணும் தொங்கிட, நங்கிட, தணும், ஜெணுதக, தாம், தகுந்தரி, தணுத, ஜெணுத, ஜெணு, ததிமித, கிடதக, தணு, தகுந்த, ஜெம்தரி, நம்தரி, தீணம், தானம், தாரி, தில் லாணு. தித்தாம்.

V

தாம்தணுததை, தணுதாணுதாணும், தணும், தணுத ஜெணு. என்று ஸ்வரங்களுக்கு இசைய ஜதி செய்துகொள்ளவேண்டும்.

ஜதி, இலக்ஷணம்.

(பல ஜாதி அங்க சேர்க்கை)

த. தக, தக்கிட, ததணு. தஜ்ஜெணு, தத்திமி, ததண தக, தஜ்ஜெணுதக, தத்திமிதக, தக்கிடதக, ததணுந் தகிட, தஜ்ஜெணுந்தகிட, ததிமிந்தகிட, தக்கிடகிடத.

(2) தக்கிடகிடதக, தகதரிகிடதக; தொங்கிடகிடதக —நங்
கிடகிடதக; ததகிடகிடதக, திகிகிடகிடதக,
தக்கிட கிடதக.

(3) தோங்கிடகிடதக, தொங்தோங்கிடதக; நம்நம்
கிடதக; தக்கிடகிடதக தரிகிடகிடதக.
திக்கிடகிடதக, திரிகிடகிடதக, தொங்கிடகிடதக
தொணகிடகிடதக, நங்கிடகிடதக, நநங்கிடகிடதக
தக்கிடகிடதக, தணம் தக்கிடதக, திக்கிடகிடதக
ஜெணும் தகிடதக, தொங்கிட கிடதக, திமிதக்
கிடதக, நங்கிட கிடதக, கிடாத்த கிடதக
தத அகிடததக, தகததணுந்தகிட, ததக்கிட
ததக, தகத ஜெணுந்தக, தஅத கிடதக்
தகததிமிதக, தஅதகிடததக, தகதகிடாதக.

(4) தத்தத்தா-தக்கிடகிட, தித்தித்தி- திக்கிட கிடதக
தொங்தொம்தொம் தொங்கிட கிடதக, நம்நம்நம்
நங்கிட கிடதக.

தத்தத்தா தக்கிடதக, தததத தக்கிடதக, தத்த தக்கிடதக; தத்த தரிகிட கிடதக, தகிடதிகிட, தகதி, திகிதி, திக்கிட கிடதக திதிதிதிதிக் கிடகிடதக, திதி திக்கிட கிடதக; திதிதிக் கிடதக, திகிடதிகிட தகதொம் தொம்தொம் தொங்கிட கிடதக தோம் தோம் தோம் தொங்கிட கிடதக தோம் தோம் தொங்கிட கிடதக, தொங்கிடதிக் கிடதக நம்நம்நம் கிட கிடதக, நம்நம்நம்.

சதுரஜ்ர ஜாதி பேதங்கள்.

(1) தாணுதணம் ததணம், ததணம், ததணம் தரிகிடதக; ததணதணம் ததணம் தரிகிடதக, தாணுத்த. தீணுத்த கிடதக, தீணுத்த ஜெம்த ததிடிங்கு தகதித்தா.

(2) ததிணுத, திமிதா, அதஜெம்தரி தீணுத ததி மிததா, அதஜம்தரி, தரிஜெம் ததிணுத்த, தரிகுரு, தீணுதகிடம் தகணம் தரிகிடதக, தகரும் தரிகிடதக ஜணுகு ஜெகிதரிதா.

(3) தத்தித்தா அதஜெம் தரிகிடதக, தகதிதா அத ஜெம் தரிகிடதகம் தத்தித்தா அதஜெம் தரிகிடதக, தகதாம்,

(4) தத்தணகஜெம். திதகணகஜெம். தகணகஜெம் தகஜெம் தீம்தக. ததிதகணகஜெம், கிடதக திகிதக,

(5) ததணத ணுத ஜெம், தஅதஜெம், ததஜெம், தஜெம், தரும்மகதி, தகததண, ததணதத ததணஜெணுத, ததண திமிதத, ததிமித கிடதக, ததணத, தஜெம்ணுத ததிமித.

(6) தத்தித்தாணத தத்தித்தாஜெணு, தத்தித்தா தண, தத்திதாஜெணு, தத்தித்தாதிமி, தத்தித்தாகிட, தத்தித்தா தித்தாகிடதகத.

(7) தத்தித்கிடதகஜெம், தஜெம்த கிடதக, ஜெம் ஜெம் ஜெம் தரிதா, திதிகிடதகஜெம், தஜெம் தகிடதக ஜெம்ஜெம்ஜெம் தரிதா, தக்குகு தொங்குகு, தகதரிகிடத, திக்குகு தொங்குகு, தகதரிகிடதெய், திக்குகு தொங்குகு தகதரிகிடதக, திக்குகு தொங்குகு தகதரிகிடதவ, தகத தகதிகித. தரிஜெம் தகஜெம், தரும், ரும், தரும்ஜெம்தரி, தகணம்தரி தகரும்தரி, தக, ததிதாதி, ததிதாதித ததிங் கிணதொம்.

தாம் தணுத ஜெணு, ததிமிதகிடதக தீனதாரி, தில் லாணு, ஜெம்தரி + தணும்தணுதஜெணு, திமிததிமிதகிட, தித்தித் தித்தாங் கிர்ததாம், தித்தாங் கிர்ததை தித்தாங் கிர்தஜெம்.

ரூபகதாளஜதி

தாகிடதக தகஜெம்தரி + தஜ்ஜெம்ஜெம்ஜெம் தரி கிட + தத்தளங்கு தகதளாங்கு + தீங்கிணதொம். ததிங் கிணதொம்.

திரிபுடதாளஜதி

தாஆம் தணுதஜெணு தத்தித்தித் தித்தித், திக்கிட ததணும்தரித, தணுததகஜெணு தகத்தளாங்கு ததிங் கிணதொம்.

தாளத்தொனி வகை

(திருப்புகழ்)

திதிதி, தததததந் திந்தித் தந்தட்
டிடிடி, டடடடண் டிண்டிட் டண்டத்
தெனனதனதனந் இதந்தத் தந்தத் தெனணை—
திகுர்தி, தகிர்ததிந் திந்தித் திந்தித்
திரிரி. தர்ரவென்று ஒன்றப் பின்றித்
திமிலை, பறையறைந்து எண்திக்கு
அண்டக் கவர் கோர. (81)

(திருச்செந்தூர்)

திமித, திமிதிமி மத்தளி இடக்கைகள் செகசேசே!
"டிமுட டிமுடிமு டிட்டி"
எனத் (தவில் எழும் ஓசை)

(விநாயகர் துதி)

"தொக்குத்தொகு, தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவுரிக்குத் தரிகடக"
என்று (அட்டப்பயிரவர்)

II

"டுடுடுண்டுடு டுண்டுடு, டுண்டென
அதிர்கின்ற பறை"
திருப்புகழ் திருப்பரங்குன்றம் (2)

"தித, தோதகர்ந் திததிந் தோதிதிமி
டுடு டூடுடுண் டுடுடுண் டூடூடு—டீரு டீருகம்"
போலவொண்பேரி—முரசங்கள் வீற. (83)

(திருச்செந்தூர்)

"சஞ்ச சஞ்சகணஞ் சகடுண்டுடு டுண்டு டிண்டிமி
டண்டம டுண்டுடு தந்தனந்தன திந்திமி" (86)

(Do)

"தகதித்திமி, தாகிணங்கிண" (110 பழநி)

"திந்தித் திமிதிமி திமிதா திமிதோ
தந்தித் திரிகிட கிடதா" (151 பழநி)

திகுடத் திக்குகுடட் டுட்டுட்
டம் டட்டட் மடடட் டிக்குட்
தொகு தொக்குத் தொகுதத் தொக்குச்
செகணக்கச் செகணச் செக்குத்

தகுடத்தத் தகுடத் தட்டுட் டிடிபேரி
திமிலைக்கைத் துடிதட் டேக்கைப்
பகடிட்டுப் பறையொத் தக்கட்" (பழநி 155)

III

(58)

ததத தததத் தந்தத்த தந்ததத்
திதிதி திதிதிதி திந்தித்தி திந்திதிதி
தகுகு, தகுதகுகு, தந்தத்த தந்தகுகு
திந்திதோதி—
சகக சகசெணக தந்தத்த குங்கெணக
டிடிடி டிடிடிடிடி டிண்டிட்டி டிண்டி டிடி.
தகக, தக தகக, தந் தத்த தந்தக
பதலை திமிலை துடி தம்பட்டமும் பெருக
(58 பழநி)

" தித்தா திரித்திகுட தத்தா தனத்தகுத
தாதத் தனந்ததன தானத் தனந்ததன
செச்சே செகுச்செகுகு தித்தா திமித்ததிகு
தாதத்த செந்திகுத தீதத்த செந்தரிக
தித்தா கிடக்கணக டக்கா குகுக்குகுகு
தோதக் கணங்கணக கூகுக் கிணங்கிணென "
(63 பழநி)

நட்டுவர் மத்தளம் முழக்காமென
மைக்குல மெத்தவும் முழக்கமேதரு
நற்பழநிப்பதி செழிக்கமேவிய பெருமாளே.
(பழநி 86)

IV

" தீதந் தித்திமி தீதக தோதிமி
டுடேண் டுட்டுடு டுடுடு டுடுடு
சேசெஞ் செக்கெண தோதக திகுட வெனபேரி—
(94 பழநி)

" தொந்தத் திகுகுட தகுகுட டிமிடிமி
தந்தத் தன்தன டுடுடு டமடம
துங்கத் திசைமலை யுவரியுமறுக சலரிபேரிதுன்ற.
(16 சுவாமிமலை)

" தத்தனத னத்தனத னத்தனவெ னத்திமிலை
யொத்த முரசத்துடி யிடக்கை முழவுப்
பறைகள் சத்தம் அறைய. (21 சுவாமிமலை)

தனன, தந்தன, தானனு தனதனன
தினன, திந்தன, தீததோ திகுததிகு
தகுதகுந்ததி தாகுதோ"

" முழவு வளை பேரி—
தவில்கணம்பறை காளமோ டிமிலை தொனி
யினமுழங்கெழு வேலைபோல் அதிர"
(4 கயிலைமலை)

" தனத்தன தனந்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந்—தன
தடுட்டுடு, டுடுட்டுண்"
"பேரி துடி" முழக்கம். (15 திருத்தணி)

V

" தனத்த னத்தன தனதன தனதன,
திமித்தி மித்திமி திமிதிமி திமிதிமி
தகுத்த குத்தகு தகுதகு தகுதகு தகுதிதோ

தரித்த ரித்தரி தரிரிரி, ரிரிரிரி
தடுட்டு டுட்டுடு டுடுடு டுடுடு
தமித்த மத்தள" தமருக விருதொலி கடல்போல
(திருத்தணிகை 14)

" தத்தனத னுத னத்தந், தத்தனத னுத னத்தந்
தத்தனத னுத னத்தந் தகுதிதோ—
தக் குகுகு. டுடு, டுட்டுண் டிக்குகுகு டுகுதத்தந்
தத்தனத னுத னுன" (27 திருத்தணிகை)

" தனத்தன தனன தனத்தன
விதமி திமித்திமி திமித திமித்திமி
விகிர்த டடுட் டுடு ரிரிரி யெனக் குகு"
(37 திருத்தணிகை)

" வீராணம் வெற்றிமுர சோடே தவிற்றிதலை
(40 திருத்தணிகை)

" வாச்சிய மத்தள பேரிகை" போல்மறை
வாழ்த்த"— (43 திருத்தணிகை)

" கொக்கரை சர்ச்சரி மத்தளி யொத்து
இடக்கை முழக்கொலி" (52 திருத்தணிகை)

" தரிகிட தந்தத் திரிகிட திந்தித்
தகுர்தியெனுங் கொட்டுடனுடி."
(5 திரிசிரபுரம்)

VI

" செகுதசெகண கெணசெகுத செக்குச்செகுச்செகுத
கிருதசெய செயகிருத தொக்குத் தொகுத்
தொகுத
டிமிடடிமி, டிமிடிமிட டிட்டிட்டி டிட்டிமிட
திரிகடக கடகதிரி தித்திக்ர தித்ரிகட தீதோ—
திமிர்ததிமி, திமிர்ததிமி, தித்தித்தி தித்திதிதி
செனு செனுத தண செனுத தத்தித்திகுத்ரி
குட, ததிதீதோ—

தகுடதிகு திகுடதிமி தத்தத்த தித்திகுட
குகுகுகுகு குகுகுகுகு குக்குக்கு குக்குகுத
தரரரர ரிரிரிரிரி றிற்றித்த றிற்றிரிரி"
சதிமுழவு மத்தளம் எனச் சதிமுழவு பலவும்"
(60 திருத்தணிகை)

தித்திமித தீதிமித தீதிமித தீமிதத
தத்ததன தானதன தானனன தானனன
திக்குடுடு டுடுமட டாடமட டுடுடுடு என தாளம்.
(2 ரத்னகிரி)

"தததத தததத ததத தததத
திதிதிதி திதிதிதி திதிதி திதிதிதி

தத்ததத தந்ததத
தித்திதிதி திந்திதிதி

டகுடகு டிகுடிகு டகுகு டிகுடிகு
டிகுடிகு டகுடகு டிகுகு டகுடகு

தத்ததிமி டங்குகுகு
தித்திதிமி டிங்குகுகு

தமிதமி தமிதக தந்திமித
தித்திமிதி திந்திமிதி" எனவேதான்.

VII

தபலேகு டமுழவு, திமிலே படகம
தபுதச விகைதவில் முரசு கரடிகை
மத்தளித வண்டையற
வைத்தகுணி துந்துமிகள்
மொகுமொகு மொகுவென் அலற" (5 விராலிமலை)

" தனதன தனத்த தான" எனமுர சொலிப்ப
வீணை, தமருகம் மறைக்குழாமும்"
(2 ஞானமலை)

"தோதிமி தித்தித் திமித்த டிங்குகு
டீகுகு டிக்குட் டிகுக்கு டிண்டிமி
தோதிமி தித்தித் தனத்த தந்த" (2 ஊதிமலை)

தகுகுதகு, தகுதகுகு, திகுகுதிகு திகுதிகுகு
தங்குத் தகுத்தககு திங்குத் திகுத்திகிகு
சகணசக சகசகண செகணசெக செகசெகெண
சங்கச் சகச்சகண செங்கச் செகச் செகண
தனனதன தனதனன தெனனதென தெனதெனன
தந்தத்த னத்தனன தெந்தத்தெ னத்தெனன
தனஞ்ஞ—

தகுததகு தகுதகுதி திகுதிதிகு திகுதிகுதி
தங்குத் தகுத்தகுகு, திங்குத் திகுத்திகுகு
டணணடண டணடணண டிணிணிடிணி
டிணிடிணிணீ
டண்டட் டடட்டடண டிண்டிட் டிடிட் டிடிணி
தரரதர, தரதரர, திரிரிதிரி திரிதிரிரி
தன்றத் தரத்தரர, தின்றித் திரித்திரிரி
என தாளம்.

VIII

தொகுதிவெகு முரசுகர டிகைடமரு முழவுதவில்
தம்பட்ட மத்தளமினும்பட் டடக்கைபறை
பதலைபல திமிலை "முதலதிரவுதிர் பெரியதலை
பண்டைத்திரட் பருகு" (2) (குன்றக்குடி)

"உடுட்டு டுடுடு டுடுட்டொ டோவென
திகுத்த தீதிகு திகுர்த்த தாவென
"உடுக்கை பேரிகை தவிற்குழாமும்"
(2) (கழுகுமலை)

மேலே இரண்டாம் பகுதி மூன்றும் பக்கத்தில் இரண்டாவது வரியில் கூறியபடி "ஏழு கவுத்துவங்கள்—கோடரி, மலப்புக்கள்" என்ற தலைப்புக்களின் கீழ்க் கூறப்படவேண்டிய விஷயங்கள் இக்கால நாகரிக மத்தளக்காரர்களும், இனி வருவோர்களும் அவைகளை விரும்பி வாசிக்க முந்தார்களென்றும், அவர்கட்கு அவை பிடிக்காதென்றும் நன்ருகத் தெரிந்ததனுல், அப்பகுதிகள் மிகையென்று இங்கு விடப்பட்டன.

ஆயின் மத்தளக்காரர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய அதிமுக்கியமான சில குறிப்புகளை இங்குக் கூறவேண்டியது அவசியமென்று தோன்றியதனுல், அவற்றை மட்டும் இதன்கீழ், சுருக்கமாகக் கூறி இப்பகுதியை முடித்து நூலையும் பூர்த்தி செய்கிறேன்.

மத்தள சம்பந்தமான பொது—சிறப்பு—காரணக் குறிப்புகள். தண்ணுமை (மத்தளம்) ஆசிரியன்.

"ஆடல், பாடல், இசையே! தமிழே!
பண்ணே! பாணி, தூக்கே! முடமே!
தேசிகம், என்று இவை ஆசின் உணர்ந்து,
கூடை நிலத்தைக் குறைவின்று மிகுத்து, ஆங்கு
வார நிலத்தை வாங்குபு வாங்கி
வாங்கிய வாரத்தி யாழும் குழலும்
ஏங்கிய மிடறும் இசைவன கேட்பக்,
கூர்உகிர்க் கரணம் குறியறிந்து சேர்த்தி,
ஆக்கலும் அடக்கலும் மீத்திறம் படாமைச்
சித்திரக் கரணம் சிதைவின்று செலுத்தும்
அத்தகு தண்ணுமை அருந்தொழில் முதல்வனும்"
(சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை)

பதவுரை.

ஆடல்பாடல்—எல்லா வகைக் கூத்துகளும், பாடல் இயல்புகளும் ; இசையே—இசை வேறுபாடுகளும் ; தமிழே—தமிழ் மொழிக்குத் தனிச்சிறப்பாக உள்ள "இயல் - இசை - நாடகம்" என்னும் முத்தமிழும் ; பண்ணே, பாணி, தூக்கே—பண்களும், தாளங்களும், தூக்குகளும் ; முடமே—இவற்றின் குற்றங்களும் ; தேசிகம்—அந்தந்த நாட்டிலுள்ள சொல்வழக்கம் ; இவை ஆசின் உணர்ந்து-இவைகளையெல்லாம் இலக்கண வழியே நுண்ணிதாகத் தெரிந்து ;

கூடை நிலத்தைக் குறைவின்று மிகுத்து-ஓர் உருவை இரட்டிக்கு இரட்டி சேர்க்கும்போது நெகிழாதபடி நிரம்ப நிறுத்தவும் ; ஆங்குவார நிலத்தை வாங்குபு வாங்கி—அந்த இடத்தில் பெறும் இரட்டியைப் பாக உருவான வழி நிற்கும்படி நிறுத்தி ; கழியுமானங் கழிக்கவும் வல்லமை உடையவனாய் ;

வாங்கிய வாரத்து—இப்படி நிகழ்ந்த உருக்களில் ; யாழும் குழலும்—யாழ்ப்பாடலும் குழலின் பாடலும் ; ஏங்கியமிடறும்—ஒலி பொருந்திய கண்டப் பாடலும், இசைவன கேட்ப—கேட்போர் செவிக்கு இன்பமாயிருக்க; கூர்உகிர்க்கரணம்—கூரிய நகத்தையுடைய விரலின் செய்கையால் ; குறியறிந்து சேர்த்தி-குறியறிந்து சேர வாசிக்க வல்லவனாய் ;

ஆக்கலும் அடக்கலும்-மற்றக் கருவிகளின் குறையை ரப்புதலும், மிகுதியை அடக்குதலும் ; மீத்திறம் படாமை—இவ்விதம் செய்யும்போது இசையில் இரந்திரம் தோன்றாமல் செய்தலும் ;

சித்திரக்கரணம் சிதைவின்று செலுத்தும்—இவைகளையெல்லாம் செய்யும்பொழுது கைத்தொழில் அழகு பெறச் செய்து காட்டலும் வல்லவனுய்; அத்தகு—அத்தன்மையுடைய; தண்ணுமை அருந்தொழில் முதல்வனும்—தண்ணுமை (மத்தளம்) கருவியின் அரிய தொழிலை உடைய ஆசிரியனும் என்பது.

(முடம் = குற்றம்; கூர்உகிர் = கூரிய நகம்;
கரணம் = செய்கை)

மத்தளக்காரன் கற்றிருக்கவேண்டுவதும், கைக்கொள்ள வேண்டுவதுமான சில கடமைகள்.

மத்தளத்தை நன்ருக வாசிக்கத் தகுதியுடையவன் தாளத்திற்குரிய காலம், மார்க்கம், ஆகிய பத்துப் பிராணங்களின் விவரங்களையும்; “மார்க்கம்”—“தேசியம்” என்னும் இருவகைத் தாளங்களையும்; இசையை அநுசரித்து மத்தளத்தை இயக்கும் திறமையையும் நன்ருகவுணர்ந்து, மத்தளத்திற்குரிய பற்பல ஜதிச் சொற்களையும், மோராதஸ்துக்களையும் முறையறிந்து கற்றும், தெளிந்தும் இனிமைபெற முழக்கும் வகையறிந்தும்; பாடகன் பாடும்போதும்; புல்லாங்குழல் ஊதுங்காலத்தும், வீணை, பிடில் முதலிய தந்தி வாத்தியங்களை அவற்றின்வல்லார் அரங்கில் வாசிக்கும்போதும்; அவற்றிற்குப் பொருந்த ஊடும் பாவும்போலப் பொருந்தியிருக்கும்படி மத்தளத்தை நாதமும் சுருதியும் பிறழாமல் இனிமைபெற முழக்கியும்; கச்சேரி கெடாமல் கவனத்துடன் ஞானரசிகனுய், லயசீலனுய் அமரிக்கையுடனும் இருத்தல் இன்றியமையாததாகும். மேற்கூறியவற்றைக் கவனியா

மல், தான் என்ற இறுமாப்புடன் அகந்தை கதிக்க எங்கேயோ வைத்திருக்கும் நினைவில் மத்தளத்தை அரங்கில் வாசித்தால், இசை கெடுவதோடு, லயமும் குன்றிக் கேட்போர் வெறுப்பும் அடைவர்; அதனால் பாடகன், பிடில்காரர்களுக்கு அதிருப்தியும், வெறுப்பும் ஏற்பட்டு மத்தளக்காரனுக்குக் கெட்ட பெயரும் உண்டாகும். ஆனதால், மத்தளக்காரர்கள், ஒவ்வொருவரும் மேற்கூறிய அமிசங்கள் அனைத்தையும் நன்ருய்க் கவனிப்பதோடு, மிருதங்கத்தை இயக்குவதற்கு அரங்கில் சுருதி சேர்க்கும்போது பாடகர், பிடில்காரர், அல்லது வீணை வாசிப்போர், **புல்லாங்குழல் ஊதுவோர்** ஆகியவர்கள் தமது கருவிகட்கென அளவுகண்ட சுருதியுடன் பொருந்துமாறு கவனித்தும், அமைதியாகவும், நிதானமாகவும் மத்தளத்தில் விரல்களை ஓட்டிச் செவிக்கினிமையாகவும், இனிய நாதம் எழவும் வாசித்தலும் இன்றியமையாதது. அன்றியும், தான் தலைமை வாத்தியக்காரன் அல்ல; பக்க வாத்தியகாரன் என்ற நினைவை நெஞ்சிற்கொண்டு பாடகர், பிடில், புல்லாங்குழல், வீணை முதலிய தலைமை வாத்தியக்காரர்களுக்கு அடங்கியவன் என்று எண்ணித் தன் தொழிலைச் செய்தல்வேண்டும்.

பாட்டு, வீணை, பிடில், புல்லாங்குழல் ஆகியவைகளுடன் தானும் ஒருவனுகவிருந்து பக்கவாத்தியமாகிய மத்தளத்தை இயக்கும்போது சங்கீத வரம்புக்கு அடங்கியும்; பழக்கவழக்க சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்பட்டும், நடந்தும், தனக்கெனத் தனி ஆவர்த்தம் வாசிக்க விடும்போது அதிக நேரத்தை வளர்த்தாமலும்; நல்ல கற்பனை கூடிய மனோதர்மங்களைச் சுவை பயக்கும் முறையில் அழகு பெறுமாறு சுருக்கமாகவும்; பத்துப்பதினைந்து நிமிஷங்கட்கு அதிகப்படாமலும் இனிமையாக வாசித்தல்

வேண்டும். அப்பொழுதுதான் கேட்பவர் சிந்தை களிப்பர். அதிக நேரம் தாளச்சொற்களை வளர்த்தியும், வாசித்த சொற்களையே மீண்டும் மீண்டும் உபயோகித்தும், மோராக்களை அளவுக்குமேல் நீட்டியும் ததிங்கிணதொம்களை வரன்முறையின்றி, தோன்றியவாறெல்லாம் கொட்டியும் விரக்தியையும் அவலட்சணத்தையும் உண்டுபண்ணுவது முறை விரோதம் ஆம். மத்தளக்காரர்கள் இவற்றைக் கவனிப்பார்களாக.

மத்தளத்தின் சிறப்பைச் சங்கீத மகரந்தம் என்னும் வடமொழி நூல் விரிவாக எடுத்துரைக்கின்றது.

மத்தளத் தியான சுலோகம்,

மூர்த்தித்ரயஸ்வரூபாய—மிருதங்காய நமோநம :

(மத்தளமானது பிர்மன், விண்டு, மகேசுரன் ஆகிய மும்மூர்த்திகள் வடிவத்தை யுடையதனுல் அம்மத்தளத்தை வணங்குகிறேன் என்பது திரண்ட பொருள்.)

மத்தளமானது தூய்மையான நாதத்தைப் பயப்பதால் மிருதங்கம் எனப்பட்டதென்றும் ;

மிருதுவான தொனியையும், சுத்தமான நாதத்தையும் மிருதங்கம் உடைத்தாயிருப்பதனுல், “ மிருது அங்கம் ” எனப்பட்டதென்றும் வடமொழி இசைநூல்கள் இயம்புகின்றன. இவற்றிற்கேற்ப, சிலப்பதிகார உரையாசிரியர், மத்தளம் ஓர் வகைத் தோற்கருவி என்றும், மத்து—என்பது ஓசைப்பெயர் என்றும், இசையிடனுகிய கருவிகட்கெல்லாம் தளம் ஆதலின், “ மத்தளம் ” என்று பெயராயிற்றென்றும் கூறியிருப்பது எவ்வளவு அழகும், பொருத்தமுமாகவிருக்கிறது.

மத்தளக்காரனின் குண லட்சணங்கள்.

உயர்குடிப் பிறந்தவனாகவும், அழகுடையவனாகவும், தந்திரம் அறிந்தவனாகவும், இசையிலும், வாத்தியத்திலும் வல்லவனாகவும், அஸ்த லாகவ நிதானமுடையவனாகவும், தாளலயத்தையும், தாளங்களையும், தாள தசப்பிராணன்களையும், தாளங்களின் லட்சண லட்சியங்களையும் நன்கறிந்து அவற்றைப் பிறருக்குப் போதிக்கக் கூடிய சமர்த்தனாகவும் இருப்பவனே "மத்தளக்காரன்" என்று கூறுவதற்குத் தகுதியுடையவன் என்று "சங்கீத ரத்னாகரம்" கூறுகின்றது.

ஜம்ஜம் கிடதகி முதலான தாளச்சொற்களை, தேவதா தோத்திரத்திற்குரிய 'அ' கரம் முதல், 'க்ஷ' கரம் வரையுமுள்ள வடமொழி எழுத்துக்களுடன் சேர்த்துக் கூறவேண்டுமென்று "சாரங்கதேவர்" செப்புகின்றனர்.

மத்தளத்தின் சிறப்பைப்பற்றி ஸ்ரீதியாகராஜசுவாமிகள் கூறியது.

உலகம் புகழும் கீர்த்தனாசாரியர் தியாக பிரும்ம ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் தாம் பாடிய ஸ்ரீரஞ்சனி ராகம், ரூபகதாளக் கீர்த்தனத்தில் மத்தளத்தின் மேலான உயர் வைப்பற்றிக் கூறியிருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது.

"சொகசுகா மிருதங்க தாளமுஜதகூர்ச்சி நின்று சொக்கஜேசே தீருடெவ்வடோ" என்பது கீர்த்தனத்துள் ஓரடி.

சிவாலயங்களில் அர்த்தசாம காலத்தில் இன்ன மேளத்தில் மத்தளம் வாசிக்கும் வழக்கம் உண்டென்பது "ம்ருதங்கச் சானு" என்று தொடங்கும் பரத சமுத்திர சுலோகத்தினற் புலனாகின்றது.

மத்தளம், தாளம், புல்லாங்குழல், இசை, சுருதி, வீணை, சதங்கை, பிரசித்தஞன இசைவாணன், ஆகிய இசைக்கருவியாளர்கள், நாட்டிய மாதுக்குப் பிராணன் போன்றவர்கள், ஆனதால், புல்லாங்குழல் நாட்டியத் திற்குப் பக்கவாத்தியமாகவிருந்தது புலனுகின்றது. சிவால யங்களில் அர்த்தசாமப் பூசை முடிந்து சுவாமி இரவில் பல்லக்கில் எழுந்தருளிப் பள்ளியறைக்குச் செல்லும் போது பல்லக்குக்கு முன்னே ஆடலாசிரியன், நடிகை, சுருதிகாரன், புல்லாங்குழல் ஊதுவோன், மத்தளம் முழக்குகின்றவன் ஆகியவர்கள் இறைவனின் புகழ்ப் பாடல்களை அகத்துறையில் பாடிக்கொண்டு பள்ளியறை சேர்ப்பது பண்டுதொட் டிருந்து வரும் பழக்கம். இது தென்னுட்டுச் சிவாலயங்கள் எங்கும் இன்றும் பழக்கத் தில் இருந்துவருகின்றது.

சங்கீத ஷடாங்கத்திலும் மத்தளம் ஓர் அங்கமென்பது.

பிரமதேவர் மக்களைப் படைத்துக் காக்கும் பொருட் டும், அவர்களுக்கு ஏற்படும் துன்பங்களைப் போக்கும் பொருட்டும் இசைக்குரிய சங்கீத வாத்தியங்களைச் சிருஷ் டித்து அவற்றிற்கு மதங்காதி முனிவர்களாலே அரசன், அமைச்சன், அவையினர், பாடகன், வாத்தியகாரர், நடிகை, என்னும் இந்த அறுவர்களையும் ஆறு அங்கங்க ளாக அமைத்தனர் என்று "தாண்டவ வரலாறு" கூறு கிறது.

சுத்த மத்தளம் சிவாலயங்களில் சந்தியா காலங்களில் பூஜா காலத்தில் வாசிக்கும் வழக்கம் உண்டென்பது.

தமிழிசை அரங்குகளில் தற்காலம் வாசிக்கப்படும் மத்தளத்தைவிட சுத்த மத்தளம் மும்மடங்கு அளவில் பெரியது. அதற்குரிய அங்க லட்சணங்கள் பாத

நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அச்சுத்த மத்தளத்தை ஓர் தாளக்காரன் லயம் பிசகாமல் தட்டிக்கொண்டிருக்க, சுத்த மத்தளக்காரன் சுருதிவைத்து சிவாலயங்களில் சந்திய கால வேளையில் பூசை சமயத்தில் சுவை மிக்க தாளச்சொற்களை அமைதியான லயத்துடன் யாவரும் கேட்டு அதிசயித்து இன்பமுறக் கொட்டி முழக்குகின்றனன். இங்ஙனம்கொட்டுவதைத் தஞ்சைப் பெரிய கோயில் **இராஜராஜேசுரத்திலும்; கொங்கணீசுரத்திலும்;** (கொங்கணீசுரர் கோயிலிலும்) சப்தவிடங்கத் தலமாகிய **கமலாலயத் திருவாரூரிலும்;** பஞ்சபூதஸ்தலங்களில் ஆகாயலிங்கம் விளங்கும் **சிதம்பரத்திலும்** இன்றைக்கும் காணலாம். நாத மயமான இவ்விசைத் தொண்டை இத்தென்னாட்டுச் சிவாலயங்களிலேயன்றி, வடநாடுகளில் "**பூரி ஜகந்நாதம், பண்டரிபுரம்,** முதலான தலங்களிலும் செய்வதை நான் நேரில் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். **பூனா கந்தருவ வித்தியாலயத்தில்,** பெயர் சிறந்து புகழுடன் விளங்கிக் காலஞ்சென்ற மகா வித்துவான் "**விஷ்ணு திகம்பரர்**" என்பவர், தஞ்சைக்கு விஜயம் செய்தபோது ஓர் கான சபையில் யாவரும் கேட்டின்புறுமாறு சுத்த மத்தளத்தைச் சுருதி கூட்டி இன்பலயம் இனிது ஒலிக்கும்படி அற்புதமாய் வாசித்து அனைவரையும் ஆனந்தக்கடலுள் ஆழ்த்தினர். தென்னாட்டில் சுத்த மத்தளத்தைத் திறமையுடன் இன்பச்சுவை இனிது விளங்க ஆனந்தமாய் வாசிப்பதில் அதிசமர்த்தராகப் பெயர் சிறந்து விளங்கியவர், காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ முத்துச்சாமி தீக்ஷிதரின் மாணவர், "**வித்துவான் தம்பியப்பன்**" என்னும் பெயரினர் ஆவர்.

கேளிக்கைகளில் மத்தளம் வாசிப்பவர்களை "**முட்டுக்காரர்கள்**" என்று அழைப்பது சோழநாட்டின் வழக்கம். அவ்வழக்கம், பரதநாட்டியம் தமிழ் நாட்டில் நிறுத்தப்பட்டதிலிருந்து நன்றாக மத்தளம் வாசிப்பவர் தொகை,

மிகவும் குறைந்து, "தடியெடுத்தவன் எல்லாம் தண்டக்காரன்" என்பதுபோல் மத்தளத்தை மீட்டவோ, சாப்புக் கொடுக்கவோ தெரியாத பேதைகள்கூடத் தற்காலம் தென்னாட்டில் "மத்தளக்காரர்" என்று பெயர் வைத்துக் கொண்டு, படாடோபமாகத் தன்னை அளவுக்கும், தகுதிக்கும் மீறி அலங்காரஞ் செய்துகொண்டு இசையரங்குகளின் நடுவில் அச்சமில்லாமல் வந்தமர்ந்து தனது அவலயத்தையும், ஞானசூன்யத்தையும் அறிஞர் எள்ளி நகையாடும்படி வெளிப்படுத்திக்கொள்ளுகின்றனர். இவர்கள் அறியாமைக்குப் பெரிதும் வருந்துகின்றேன்.

மத்தளக்காரர்கள் கைக்கொள்ளவேண்டிய கட்டாய விதிகளும் விலக்குகளும்

மத்தளத்தை ஆசிரியனிடத்து முறையாகப் பயின்று இசையரங்குகளில் அநுபவம் அடைந்து பெயர் சிறந்த சில மத்தளக்காரர்கள்கூட தோற்கருவிகளுள் தலை சிறந்ததும், உத்தம தேவ வாத்தியம் என்று உயர்ந்தோரால் வியந்தோதப்பெற்றதும், நந்தி தேவரும், திருமாலும் தில்லையம்பலத்து விளங்கும் ஆடவல்லபிரான் அருட்கூத்துக்கு இயக்கியதுமாகிய மத்தளத்தின் மகிமை உணராமல், உணர்ந்தவர்போல் நடித்து அக்கருவியினிடத்து மரியாதை வையாமலும், இன்னவிதமாகத்தான் மத்தளத்தை எடுப்பது? இன்னவிதமாகத்தான் வைப்பது? இன்னதுணியினால்தான் உறை தைத்து மூடுவது? என்பவற்றை உணராமலும், தாம் இச்சைப்பட்ட ஓர் துணியில் உறை தைத்து ஏதோ ஓர் வஸ்துவை மூடுவது போல் மூடியும், அவ்வுறையின் மேல்பாகத்தில் நாடாக் கோத்துச் சுருக்கிக் கட்டி உச்சியில் குடுமியைப்போல் முடியிட்டு ஓர் சிறுவனைக் குடிமியைப்பற்றித் தூக்கு

வதைப்போல் தூக்கிவந்து இசையரங்கில் கனமான மூட்டையை இறக்குவதுபோல் இறக்கித் திட்டென்று வைப்பதைக் கௌரவமுறையாகக் கைக்கொண்டிருப்பது பெரிதும் வருந்துதற்குரியது. இம்முரட்டுப் பழக்கம் நாளடைவில் வழக்கத்திலும் வேரூன்றி நிலைத்துவிட்டது. இங்ஙனம் நேர்ந்ததற்குக் காரணம், மத்தளம் வாசிக்கும் பெரும்பான்மையோர், கற்றுக்குட்டிகளும், கண்டு பாவனையில் பழகியவர்களும் மிகுதியாக இருப்பதனுலென்க. நன்ருக ஆராய்ந்து கணக்கிட்டால், நமது தமிழ் நாட்டில் மத்தளம் வாசிப்போ நூற்றுக்குத் தொண்ணூறு பெயர்கள் கற்றுக்குட்டிகளும்; குருமுகமாய்க் கற்றுத் தேறியவர்கள் நூற்றுக்குப் பத்துப்பேர்களும் என்ற முடிவைக் காணலாம்.

அன்றியும், ஞான சூன்யர்களும், மத்தளத்தைத் தீண்டவும், பயிலவும், வாசிக்கவும் தகாதவர்களுமான சில பேதைமாக்கள், தான்தோன்றித் தம்பிரான்களாகவிருந்து மத்தளத்தை, இசையை அநுசரிக்காமலும், தாளஹீனமாயும்; முரட்டுவழியாகவும்; கேட்போர் அருவருக்கத்தக்க வகையிலும் பயின்று, சிவபஜனை, விஷ்ணு பஜனைகளில் கலந்துகொண்டு அச்சமும் நாணமுமின்றி முன்வந்துவிடுகின்றனர். இங்ஙனி பேதைகள் நாட்டினின்றும் நீங்கினுலன்றி மத்தள உலகுக்கு நன்மையில்லை. அந்நற்காலம் நாட்டுக்கு விரைவில் வருமாறு திருவருளை மனம் - மொழி - மெய்களால் சிந்தித்து வந்திக்கின்றேன்.

மத்தளத்துக்கு வெண்மையான துணியைக்கொண்டு காவி நனைத்து உறையிட்டு மூடுவதுதான் மேலானது. இவ்விதக் காவி உறையைத்தான் தென்னுட்டு மத்தளக்காரர் தொன்றுதொட்டு உபயோகித்து வந்தனர். இவ்

வுறை, சிவச்சின்னத்தை அறிவுறுத்தும் தூய்மையுடையது. ஆதியில் மத்தள வாத்தியத்தை இசையுலகுக்குக் கொணர்ந்து காட்டி நிலைநிறுத்திய நந்திகேசுரர் சிவத்தொண்டராய் விளங்கியிருந்ததனால், காவி உறையை மத்தளத்துக்குப் போர்த்திவைத்தனர்.

"இசையும்; லயமும்," இவ்வுலகத்தில் வெகு காலத்திற்குமுன் இலைமறை காய்போல் இருந்துவந்தன. அவற்றைச் சிறிதுசிறிதாக வுணர்ந்த இசையறி புலவர்கள், தாங்கள் கற்ற கல்வியை லோகோபகாரமாக உலகில் பரவச் செய்யும் நன்னோக்கத்துடன் பரப்பினர். அறிஞர்கள், இசைக்கு, லயம் இன்றியமையாத சாதனம் என்பதை இனிதறிந்து மத்தளத்தை லய வாத்தியமாகப் பண்படுத்தி இசையுடன் சேர்த்து இலங்குமாறு சிறிது சிறிதாக உயர்த்தினர். அது உலகில் ஆங்காங்கு பரவ அதில் தெய்வாம்சமும், மன உற்சாகமும், செவிச்சுவையும் கூடியிருப்பதை அறிந்து அவ்விசையை விசேட காலங்களிலும், விழாச் சமயங்களிலும், சுப காரியங்களிலும் உபயோகித்தனர். அப்பழக்கம் நாளடைவில் பழகிப் பெருகி யாவரும் கைக்கொள்ள முந்தினர். அவ்விசையை மேலும் பண்படுத்தி உயரச்செய்ய வேண்டுமென்று கருதிய அறிஞர்களும் சங்கீத வித்துவான்களும் அவ்விஷயத்தில் முயன்றும், தாங்கள் குருமுகமாகக் கற்றுத்தேர்ந்த இசையையும், லயத்தையும் சிறிது சிறிதாகத் தங்களிடத்துக் கற்க விரும்பிய மாணவர்களுக்குப் போதித்தனர். அவ்விரு கலைகளும் இசையுலகில் நாளும் பெருகி நன்மைகளை மிகுதியாகத் தந்தன. மத்தள வாத்தியம் நாத மயமும், ஜதி மயமும், தெய்வாமிசமும் நிரம்பியதென உள்ளபடியே உணர்ந்த அறிஞர்கள், அத்தொழில் முன்னேற்றம் பெறுவதற்கான உபாயங்களைக் கைக்கொண்டனர். அதனால் அத்தொழில் இசையுலகில் ஏற்றம்பெற்று யாவரும் கொண்டாடுமாறு இலங்குவதற்

காயிற்று. அதன் பின்னரே அவ்வாத்தியத்திற்கு மேலும் அமைந்து சிறக்கவேண்டிய தாளச்சொற்களும், ஜதிமுறைகளும், தாளக்கோவைகளும், மற்றும் பிறவும் விசேடமாக மேம்படுவதற்காயின. அத்தொழிலில் அதிக புத்திமான்கள் ஆங்காங்குத் தோன்றிப் பிரசித்திபெற்றனர். தொழிலும் உயர்ந்து சிறந்தது. அத்தொழில் வல்லார் அதிகப்பட்டதனுல் முன்னினும் மத்தள வாத்தியம் பல்வகையினும் உயர்ந்து புது முறைகளும், நவீனங்களும் நாகரிக வகையில் அமைந்து கேட்போரை இன்புறுத்தின.

இவ்வகையில் மேம்பட்டுயர்ந்த மத்தளத்தின் சிறப்பியல்புகளை உணர்வதற்கு இயலாத கற்றுக்குட்டிகளும். கண்டு பாவனையாட்களும் தாங்களும் மத்தள வித்துவான்களைப்போல் நடித்து மத்தளத்தை எடுப்பது இப்படி அதற்கு இவ்வகையில் இன்ன துணியில் உறையிடுவது? வைக்கும் இடம் இன்னது? வைத்தவிடத்தில் அஜாக்கிரதையால் தவறி உருண்டுவிட்டால் அதற்கு வருந்தி நமஸ்காரஞ்செய்து அபராதக்ஷாபணம் பண்ணுமலும் அலட்சியமாய், வாரும், தோலும், மரமுமுடையதோர் சாமான்யக் கருவியென்று கருதி மத்தளத்தை இழிவாகவும், தகாத முறையிலும் அப்பேதைகள் எண்ணி உபயோகிப்பதற்குப் பெரிதும் துக்கிக்கின்றேன்.

மத்தளத்திற்கு உறையிடும் முறையும், தியானம் முதலியவைகளும்,

மத்தளத்தைக் கைகளில் எடுக்கும் முறையையும், காவியுறையில் வைத்துக்கட்டும் வகையையும், வணங்கும் முறையையும் விவரமாக வடமொழியிலுள்ள "உமாபரத்தில்" சுலோக ரூபத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்

கிறது எனினும், அதனைத் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினலன்றி வாசகர்களுக்குப் பயன்படாதென்றெண்ணி, அதனை என் அறிவுக்கு எட்டியவரையில் தமிழில் மொழி பெயர்த்து இங்கு வசனத்தில் தந்துள்ளேன். அது அடியில் வருமாறு :—

"மத்தளத்தின் வலது பாகத்தில் அதாவது மேல் கரணையுள்ள பகுதியில் கயிலைக்கு இறைவராகிய பரம சிவனும், இடது பக்கத்தில் அதாவது மாவு வைக்கும் தொப்பிப் பாகத்தில் வைகுண்டவாசகனாகிய மகாவிஷ்ணுவும், நடுப்பாகத்தில் படைப்புக் கடவுளாகிய பிரமதேவனும் ஒருங்குகூடி திரிமூர்த்திகள் சொரூபமாக அமர்ந்திருக்கின்றனரென்றும் அம்மத்தள வாத்தியம் பரமேசுரன் பக்த சமுகத்திலிருந்து உற்பத்தியானதென்றும், தேவர்களால் முதலில் முழக்கப்பெற்றதென்றும், ஓம் என்னும் பிரணவ நாதத்தை அது தன்னுள்ளிருந்து ஒலிக்கச்செய்யும் உயர்வுடையதென்றும்; அத்தகைய உயர்வுடைத்தான மத்தளத்தை வாசிக்கப் பழகியவன் அக்கருவியை அரங்கில் அறிஞர்கள் முன்னிலையில் பாடகர் முதலியவர்களுடன் கூடி வாசிப்பதற்குச் சுருதி கூட்டுவதற்கு இடது கையில் அலட்சியமாய் எடுத்தால் பிரமஹத்தி தோஷமும்; வலது கையில் அலட்சியமாய் எடுத்தால் ஹத்தியத்தியாதி தோஷமும்; இரண்டு கைகளிலும் அலட்சியமாய் எடுத்தால் *ப்ரூணஹத்தி தோஷமும் உண்டாகுமென்று கூறியதோடு, 'மத்தளத்தை அரங்கில் வாசிக்கத் தொடங்கும் மத்தளக்காரன் மத்தளத்தைத் தொடுமுன்னரே அம்மத்தளத்தைத் தனது மனத்

---

*ப்ரூணஹத்தி = குழந்தையைக் கொன்ற தோஷம்.

துன் மெதுவாக "மும்மூர்த்தி சொரூபமான ஹே! மிருதங்கமே! என்னைக் காப்பாற்றும் தெய்வமே! நாதப் பிரம்மமே! உன்னை நான் மிகவும் அன்புடனும், பயபக்தியுடனும் வணங்குகின்றேன்" என்று வணங்கிப் பின், அம்மத்தளத்தை அன்புடனும், பற்றுடனும் இருகைகளிலும் எடுத்து உறையவிழ்த்து, சுருதி சேர்த்து மடியின் மீது வைத்துப் பாடகர், பிடிலர், புல்லாங்குழல் இசைப்பவர்க்கு வணக்கங்கூறி, சபைக்கு இருகரங்களையும் கூப்பி நமஸ்காரஞ்செய்து, பின் தனது ஆசிரியனை மனதில் தியானித்துத் தான் செய்யப்புகும் தொழில் இடையூறின்றி இனிது முடிய அருள்புரிய வேண்டுமென வழிபடு கடவுளை வணங்கி வாசிக்கத் தொடங்கவேண்டும். அப்பொழுது அவனுக்கு அத்தொழிலுயர்ந்து மதிப்பேறி சம்பத்தெய்திப்புகழ் வளரும். இம்முறையை இது கண்ட பின்னரேனும் இசைத்தொழில் வல்லாரெவரும் செய்வாராயின் நல்ல பயனுண்டாகுமென்று அடியேன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மத்தளஞ்செய்யும் மரத்தின் வயது உயர்ந்ததாயின் உத்தமம் என்பதற்கு நந்திமதம் கூறுவது.

மத்தளம் செய்யும் மரங்களில் பலா உயர்ந்தது. அதன் வயது நாற்பத்திரண்டாயிருப்பின் உத்தமம். நாற்பத்திரண்டுக்குக் குறைந்தால் மத்திமம். மரத்திற்கு உத்தம வயது நாற்பத்திரண்டு என்பதை அறியவேண்டுமாயின், மத்தளக்கட்டையின் மேல்பாகத்தை சிறிதளவு கத்தியினல் சீவி எடுத்து அந்தச் செராயை விளக்கில் காட்டிக் கொளுத்தினல் அது தீபம்போல் கொழுந்துவிட்டுச் சுடராக எறிந்தால் அப்படி எறிவதே அவ்வயதுடைய மரம் என்று கணித்தறிக.

மத்தளத்தை உத்தமக் கருவிகளில் பயின்ருல் கீர்த்தியும், சம்பத்தும், இஷ்ட சித்தியும் உண்டாம். அதமக் கருவிகளில் பயின்ருல் நித்திய தரித்திரமும், துக்கமும் ஏற்படும். மத்தளம் பயில்வோர் கவனிக்கவும்.

(நந்திமதம்)

ஏழு கவுத்துவங்கள்.

தந்தீதிதெய்—தந்திதெய் ஜெகஜெக—தத்தஜுதத்தத் தாம்தத்தா—தகிட கிணங்தோங்க—டகுதாம் தொங்க—தங்குகு தங்குகு தீம்தாம் குதகிட கிணங்தொங்க டகுதாம் தொங்க—தாதங்கித் தங்கிக் கிடதக திக்கித் தாம்தத்தா.

(1) கணபதி கவுத்துவம்.

தத்தகிட தரிகிடு திரிகிடு—திக்கிடு திக்கிடு திக்குத் தொங்க, திக்குத் திக்குத் தடங்கிண்ண—கஜமுகநாதனை தத்தி—தித்திக் கிடதக—தத்தரி கிடதக—தகதிரி கிடதக—தொம் தரிகிடதக தொங்குத்தக்க—தொழும்விநாயகல கிடததாம் தாம் தத்தா—திருவாரூர் மைந்தா! தியாக விநோதன் திருமைந்தன், திருமாளிகை வாசன், திருமதிற் கெதிரா! கிடதக தத்தோம் தத்தோம் தெய் தத்தா—தித்தி—தொம்தொம் நம்நம்—தத்தித்தொம்நம் தரிகிடு திரிகிடு, தக்குதிக்கு தக்கிட்ட தொங்கிட கிடதகி டண் கிண்ணம்—ததிக்க துதிக்க தாம் தத்தா.

(2) திருமுருகன் கவுத்துவம்—சர்வலகுரு சதுரசிரம்.

ணங்குத்தாரி கிண்ண ஜெக்க ணக்கணக்க
ஜெக்குத்தாம்.

கானம் மயிலேறிக் கைலாசம்
தன்னைச் சுழலவரும் இளையவனைத்

தொழுவார் தாளவிதம்பா முடையவரே,
ஜெக்குடு ஜென்னகிட்ட, ஜெக்கு ஜென்னகிட்ட
ஜென்னகிட்ட
ஜெனகுடு ஜெனகிட கிடதகி ஜெனகுடு ஜெனகிட
கிடதகி ஜெனகிட கிடதகி.
கடல்கிழிய மலைமுறிய வருமுருகன்
அருள் பெற்றுக் கதியது பெறலாம்.
தக்கிடதகி தக்கிட தகிதக்குடு தத்தக்கிடதகி
தக்கிடகிடதகி
தக்குதிக்குத் தக்கிட்டத் தொங்கிட கிடதகி டன்,
தங்கி கிடதக திக்கித் தாம் தத்த.

(3) சீர்காழி சம்பந்தர் கவுத்துவம்—சருவலகு சதுரசிரம்

ததிக்க தொம் தா தா
தகுடு தொங்குடு தகதரிகிடதக திருக்கழுமலம்
வாழ்திரு மதகரி தொங்குடு தக்கிட கிடததி,
தொங்குடு
தக்கிட கிடதகி தக்கிட கிடதகி நான்முகனும்
பூமகளும், காவிரியுங் கதிரவனும்
தவங்கள் செய்ய, தவங்கள் செய்திட
உகந்த நாயகர் உகந்த நாயகி
*திருமைந்தன் கிடதக தத்தோம் தத்தோம்
சிறந்த நெற்றியில் நீறுபரப்பிய
தகணம் தகணம் தகதரிகிடதக தகணம்
தகதரிகிடதக
தகத்தகத் தொக, தக தொக, திகி தொக
எதிர்த்த சமணரை வதைத்து கழுவினில்

* திருமகனே என்றும் பாடம்.

வகுத்த சம்பந்தர் கவுத்துமே கிடதக
தக்குதக்கு தக்கிட கிடதகி தக்கு தக்கிட கிடதகி
தக்கிட கிடதகி, தக்கிட கிடதகி
தக்குதிக்குத் தக்கிட்ட தொங்கிட கிடதகி டன்,
தங்கி கிடதகி திக்கித் தாம் தத்தா.

(4) சிதம்பரம் நடேசர் கவுத்துவம்—(சருவலகு)

திம்திம் தக்திமி திமிததி மிததக
திருகுடுத் திருகுடுத் திருகுடு ததிமித தரிதரிகிடதக
ததிம்த திம்திம்த நடவன முனிஜன
சகல சுராசுர சந்நுத பாதா
கிண்கிணி ஜெம்ஜெம் ஜணஜண ஜணஜண
நூபுர லயகதி கணகண கணகண
விதிஹரி சேவித தக்குடு திக்குடு தகதரி தகிகட
தாம் தத்தா.
தக்கிட கிடதகி தரிகிட கிடதகி தாண்டவிதம்பர
திக்கிட கிடதகி தரிகிட கிடதகி, வியாக்கிரமசங்கர!
தொங்கிட கிடதகி தொனே கிடகிடதகி திரிசூலதர!
நங்கிட கிடதக நனெ கிடகிடதகி நந்திவாகன!
நாதயோகப்பிரிய! ஜெகனங் கிடதகி
ஜெகனங் கிடதகி
துகதக தத்தக, தை, ஜெக்கஜெக்க ஜெயஜெய
சசிரவிபூஷண ரூபபயங்கர
டமருக ஹஸ்தம் த்ரீதிய சகஸ்திர
தீக்ஷித நாதநடேச கவுத்துவம்
தகதகதாம், திகிதிகிதிம்
தக்குத்திக்குத் தக்கிட தொங்கிட கிடதகி டன், தங்கி
கிடததி திக்கித் தாம் தத்த.

(5) திருவாலங்காடு காளி கவுத்துவம்.

தாளம் தீப்ரஜாதி லகு.

தக்குதிக் கிடதக தரிகிடதக தொம் தொம்
திக்குதிக் கிடதக திந்தீங்கு நன்னம்
தகிர்தகிட திகிர்தகிட தொங்கிட தொனகிட
தோதோகு தோகிட தொல்லை ஆலங்காடு
தோலாத காளியுடன் தகணேகு திகணேகு
தொங்கிட க்ருதகிட விரும்பிய பதஞ்சலி
வியாக்கிரமர் வேண்டவே நந்திதா தோமெனு
நாரதர்கள் பாடவே சந்திரர்கள் சூரியர்கள்
பந்தம் பகிர்ந்திடப் பரதவகை நாற்றெட்டுத்
தாளவகையாகவே துரிதமுட னிலகுகுரு
புலுதமுடன் காகபதம் திந்திமித திமிதிமித
திமிதிமித தாதா! சேஷனுடன் தண்டாட
வானவர்கள் கொண்டாட தில்லை மன்ருடிய
திருநிலைக் கவுத்துவம் தகிர்தகிட திகிர்தகிட
தொங்க்ருதகிட நாங்க்ருதகிட தரிகுடு திரிகுடு
தக்குதிக்கு தக்கிட்ட தொங்கிட கிடதகி டன்,
தங்கிக் கிடதக திந்தித் தாம் தத்த.

(6) திருச்செங்கோடு விஷ்ணு கவுத்துவம்.

தாளம் சருவலகு

தத்தித் தொன்னம் என்றொரு தாளம்
தாளக் கிருபை ஞானத் தொழுவது
கவுத்துவமே ஒத்தித ஆரம்
உடையவராட இறுதியாய் வானவர்
ஏத்திடவே குந்த குகுத
குகுதக ணகஜெக குந்த ததிகுரு

முத்துமாரிப் பிள்ளையார் எழுபத்து நாலு
சதுர்யுகமும் எங்கு முழங்கிய
தங்கபதஞ் சதுரங்கள் தொடுத்திடும்
சக்கர ராயன் தரணி யளந்த
சதுர்வேதன், இலங்கை ராவணன்
துளங்க மடியவே மலக்க மதுசெய்த
மதுசூதன், மச்சக்கூர்ம வராகவதாரன்
மண்ணை அளந்தவன் மாமாயன்
அச்சந் தவிர்த்த சவுரி ராயன்
அரிகரி நாராயண கவுத்துவமே
கிடதகதத ஜெணு ஜேகுகு
ஜெணுஜெ குகுதக ஜெணுஜே குகுஜெணு
ஜெகுகு ஜேகுகு
தக்குதிக்கு தக்கிட்ட தொங்கிட கடதகி டன்
தங்கிக் கிடதக திக்கி தாம் தத்த.

(7) வில்லிபுத்தூர் நாச்சியார் கவுத்துவம்.

தாளம் சருவலகு.

தத்தத ணம்திகி தகதக ணம்தக
தகதத கததிமி திமிததிமித ஜெணு
வில்லிநகர்திகழ் விண்டுசித்தர் மகளாக
வந்து திருவாடிப் பூரநாள்
தித்தா தித்தா தித்தாகிடதகி துளசிவனந்தனிலே
ஜெம்ஜெம் ததணத ணம்தரி தை,
திக்கித்தக்க தொங்கிடதகி தொங்கிடதகி தொங்கிடு
தொங்தொங் கிடதகி தொணகிட கிடதகி
சுக்கிரவார மவதார மாகியே ஜெக்க கிணணக்க
ஜெக்க

தக்கிட தகிதிரி கிடதகி தரிகிடு சங்கமேந்திய
திக்கிட தகிதரி கிடதகி திரிகிடு திகிரியணிந்தவர்
தொங்கிடதகி தொனகிடதகி தொங்குடு
ஜோதிஞானமருன்
நங்கிடதகி னனெகிடதகி னங்கிடு நாமமாயிர
வடபத்ர சயனர்க்கு சூடிக்கொடுத்த
தாரித கிணணக கிணணக, ஜெம்ஜெம்
பூமகளாகிய கோதை கவுத்துவம்
தத்தாரித்தா ரித்தாரித்தா ரித்தாரித்தா ரிக்குந்தாரி
தத்தாரித்தா ரிக்குந்தாரி, கிணகிண தாம்
கிணகிணதை
தக்குதிக்கு தக்கிட்ட தொங்கிட கிடதகி டன்,
தங்கி கிடதக திக்கித் தாம் தத்தா.

மதுராபுரிச் சொக்கர் கவுத்துவம்.

தாளம் திசிர ஜாதி திரிபுடை சாப்பு.

தக்கிடதக தத்திக்கிடதக குகுந்த கிண்ண ஜெக்கணக்கு
தகதிகி செக்குணக்கி—
ணக்கு ணந்திகி தக்கு தரிகிட தாம் தகஜெக, ஈச ரதிவித
நடன தங்குகு டிங்கு தென்கயிலாச, தக்கிட
தக்கிடதகி திக்கிட கிடதகி
தொங்கிடதகி னங்கிடதகி தகுந்த தகுதகு தகுந்ததா
சிரித்து முப்புரம் எரித்து மதகரி யுரித்து புரிசடை விரித்து
வைகையில் மண்சுமந்தவர், தகணங்கி தகதரிகிடதக
தக்கத்தொங்கா தகிணங்க தொதிக்கத்தக்க
ணங்கத் தொங்கா
ஐயர் கலியுக மெய்யரடியவர் தங்கமேனியர் துங்க
சங்கரர், தங்கு தத்தக டிங்கு ஜெம்தக தக்குடுதக ணம்திக்

குடு தொங்குடுதக ணம்ணங்குடு, ணங்கிட்ட ணங்கிட
கிடதகி, இலகு பலகல்வி ஞான வசனம் விறகு விலை
கூறி வேங்கை புலியுரி நரியாம் பரியதின் மீதிலேறிய
தெக்ஷிணர் உமைலக்ஷணர், தங்கு டிங்குகு டிங்குதா
குகுதிமித திமிதிமி திமிததித்தக வளையல் விற்றெருகு ஞான
சம்பந்தர் ஏடதே யெதிரேறவே நீறிலாதவர் வீறுபே
சியநிபுணர் சமணரைக் கழுவிலேற்றிய நீதிநாயகனுர்
தத்த நதியை மதியை முடித்த வேணியர், மதனை யெரித்து
விழித்த பார்வையர் மதுரை அழகிய சொக்க நாயகர்,
நடனமிடு துங்க கவுத்துவமே கற்று நித்தமும் உட்களிப்
பவர் முத்திபெற்றிடுவர், தத்த தொம் தகதக தொம்
தகதகதக
தொம் தகணம் தகததிகிண தொம்.

அடியில் வருகிற மிருதங்க கோடரியை மத்தளம், தவில் முதலியவற்றிலே பயிலும்பொழுது, பழகுவோர்கள் மத்திம காலத்திலே, வாக்கினுலும், கைவிரல்களினுலும், அப்பியசித்தலும், விளம்பகாலத்திலே தாளம் தட்டுதலும் முறையாம்.

வேறு.

மிருதங்கம் கோடரி என்ற சொற்கட்டு.

தாளம் சருவலகு.

1. கிடதகதாரி தக்குத்தாரி தத்தகிடதக தித்திகிடதக
கிடதகிடத கிடதகதரிகுடு தோகிணத்தோ கிடத
தித்தக, ணக்குண டன் தத்த,
ணந்திகிடதக தித்திகிடதக ணங்குடு திக்குடு தக
தரிகிடதக, தாருதாரி குண்டத்தாரி குண்டகிடத

கிடதகதரிகுடு, தக்குடு தரிகுடு, திரிகுடு தரிகுடு
தரிதிரி
கிடதகி தரிகிட கிடதக, தரிகிட தகிதரி, கிட
தகிதரிகுடு தரிதிரி கிடதகி தரிகிட கிடதகி.

2. திக்குடு தரிகுடு திரிகுடு தரிகுடு திரிதிரிகிட தகிதிரி
கிடகிடதகி, திரிகிட தகிதரி கிடதகி திரிகுடு திரி
தரிகிடதகி திரிகிட கிடதகி.

3. தொங்குடு தரிகுடு திரிகுடு தரிகுடு தொங்தொங்கி
டதகி தொனெகிட கிடதகி,
தொங்கிடதகி, தொனெகிடதகி தொங்கிடு தொங்
தோங்கிடதகி, தொனெகிட கிடதகி.

4. நங்குடுதரிகுடு திரிகுடுதரிகிடு நங்நங்கிடதகி நானெக்
கிடகிடதகி, நங்கிடதகி, நநகிடதகி நங்குடு நங்நங்
கிடதகி, நநெக் கிடதகி.

வேறு.

தக்குடுதரிகுடு திரிகுடுதரிகுடு தரிகிடகிடதகி
தரிகிடகிடதகி
திக்குடுதரிகுடு, திரிகுடுதரிகுடு, திரிதரிகிடதகி
திரிகிடகிடதகி
தொங்குடுதரிகுடு, திரிகுடுதரிகுடு தொங்தொங்
கிடதகி தொனெகிடகிடதகி
நங்குடுதரிகுடு, திரிகுடுததிகுடு நநநங்கிடதகி
நநகிடகிடதகி.

தககிடு தரிகிடு திரிகுடு தரிகிடு
திக்குடு தரிகுடு திரிகுடு தரிகுடு
தொங்குடு தரிகுடு திரிகுடு தரிகுடு
நங்குடு தரிகுடு திரிகுடு தரிகுடு.

தக்குடுதரிகுடு—திக்குடுதரிகுடு, தொங்குடுதரிகுடு—
நங்குதரிகுடு.
தத்தக்கிடதகி, தித்திக்கிடதகி, தொங்தொங்கிடதகி
நங்நங்கிடதகி
தக்கிடதகி—திக்கிடதகி, தொங்கிடதகி நங்கிடதகி
தரிகுடு, திரிகுடு,
தக்குதிக்கு தக்கிட்ட தொங்கிட கிடதகி டன்,
தங்கிக் கிடதக திக்கித்தாம் தத்த.

சப்ததாள சூளாதியென்னும் சொற்கட்டு.

விளம்ப காலம் தாளம் இரண்டு ஆவர்த்தமாகவும், மத்திமகாலம் தாளம் ஒரு ஆவர்த்தமாகவும் அப்பியசிக்க வேண்டும்.

(1)

துருவதாளம் 14, மாத்திரை மூன்றரை, அங்கம் 10 ‖

ஜதி

தத்தி தொம் நம் தா தகணகதா. ஜெகணகதா
தத்திமி தகதிமிதா, கிடதகதா, தகண திகிண தொம்

(2)

மட்டயம் அ—10 மாத்திரை இரண்டரை.

தக்குகு தகுகுதா, குகுதத்தி குகுதா
குகுத குகுத குகுததா தகததி கிணதொம்

(3)

ரூபகம் 6, மாத்திரை ஒன்றரை.

ஜேகித்தாம் ஜேகி,
ஜெணகி தகததிகிண தொம்,

(4)

ஜம்பை 7, மாத்திரை இரண்டரை.

தடீம் தத்தடீம் தகத தோத்த
டீம் தகதடீம் தகததி கிணதொம்.

(5)

திரிபுடை அக்ஷரம் 7, மாத்திரை ஒன்றேமுக்கால்.

தீந்தளங்கு தீந்தீந்தளங்கு
தீந்தளங்கு தகததிகிணதொம்

(6)

அடதாளம் 14—மாத்திரை மூன்றரை.

ஜெம்ஜெம் கிர்ரடாகு கிணஜெக்க கிர்ரடாகு
ஜெம்ஜெம் குகுதத்தி தகததிகிண தொம்
கிணஜெகிர்ரடாகு
ஜெம்ஜெம் குகு தத்தி

(7)

ஏகதாளம்—அக்ஷரம் 4—மாத்திரை ஒன்று.

தா திகி திகி திக தகததிகிணதொம்

இவற்றை, நடனனும், பாடகனும், தாளகிரியும் சர்ம வாத்தியக்காரர்களும் இவ்வாறே அப்பியசித்து வருகின்றனர்.

(நடனவாத்தியரஞ்சனம்)

உ

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து இசைத்தமிழ் வெளியீடுகள்.

இசையறிவுடையோர் யாவரும், எளிதிற் பயின்று கொள்ளத் தக்க முறையில் விளக்கமான சுரதாளக் குறிப்புகள் அமைந்தவை.

உயர்ந்த பதிப்பு. இனிய தமிழ் இசைப்பாடல்கள்.

குறைந்த விலை.

தோகுதி **1.** பரிசுபெற்ற பாடல்கள் 46.

திருவாளர்கள் டி. இலக்குமணப் பிள்ளை **B. A.**, கீழ்வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, விசுவநாத சாஸ்திரியார், கிருஷ்ணமாச்சாரியார், பாபநாசம் சிவன் என்னும் இவர்கள் இயற்றிய கீர்த்தனங்களும், கா. சுப்பிரமணிய பிள்ளை **M. A., M. L.** அவர்கள் எழுதிய ஆராய்ச்சி முகவுரையும் அடங்கியுள்ளன. (கைவசமில்லை)

விலை ரூ. 2 0 0

தோகுதி **2.** கீதவர்ண முதலியன 104.

திருவாளர்கள் டைகர் வரதாச்சாரியார், திருப்பாம்புரம் சாமிநாத பிள்ளை முதலிய இசைவல்லுநர் பதினொருவரால் இயற்றப்பட்ட சஞ்சாரி கீதம், இலக்கணகீதம், சுரசதி, சதிசுரம், பிரபந்தம், ஆதிதாள வர்ணம், அடதாள வர்ணம் என்பனவும் சுரவரிசை, இரட்டைச்சுர வரிசை, அலங்காரம் என்பனவும் அடங்கியுள்ளன.

(கைவசமில்லை) விலை ரூ. 3 0 0

தோகுதி **3.** பாடல்கள் 75.

நீலகண்ட சிவன், திரு. டி. இலக்குமணப் பிள்ளை **B. A.**, கோபாலகிருஷ்ண பாரதியார், அச்சுத தாசர், வேதநாயகம் பிள்ளை, அருணாசலக் கவிராயர் என்னும் இவர்களியற்றிய கீர்த்தனங்கள் அடங்கியுள்ளன.

(கைவசமில்லை) விலை ரூ. 2 0 0

தோகுதி **4.** பாடல்கள் 60.

முத்துத்தாண்டவர் இயற்றிய கீர்த்தனங்களும், திருப்பாம்புரம் திரு. டி. என். சாமிநாதபிள்ளை அவர்கள் அமைத்த சுரதாளக் குறிப்புக்களும் அடங்கியுள்ளன.

(கைவசமில்லை) விலை ரூ. 2 0 0

தொகுதி 5-ல் முதற்பகுதி இசையியல். இரண்டாம் பதிப்பு.

இசைக்கலையின் இலக்கண நுட்பங்களை விளக்குவது. சங்கீத கலாநிதி க. பொன்னையா பிள்ளையவர்களால் எளிய நடையில் தெளிவாக எழுதப்பெற்றது. 750 ரூபாய் பரிசுபெற்ற நூல். இசையாசிரியர்கள், மாணவர்கள் இசைப் பற்றுடையார் யாவர்க்கும் பயன் தருவது.

விலை ரூ. 1 8 0

தொகுதி 5ல் இரண்டாம் பகுதி. தமிழர் இசைக் கருவிகள்.

புதுச்சேரி அரவிந்த ஆசிரமத்திலுள்ள திரு. பி. கோதண்டராமன் M. A., அவர்களால் பலநூற் கருத்துக்களைத்தழுவி எழுதப்பட்டது. பண்டைத் தமிழர்கள் பயன்படுத்திய தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி முதலியவற்றின் அமைப்புக்களையும், இக்காலத்து வழங்கும் இசைக்கருவிகளின் இயல்புகளையும், உருவப்படங்களுடன் விளக்கிக்காட்டுவது. எளிய உரைநடை நூல்.

விலை ரூ. 1 4 0

தொகுதி 5ல் மூன்றும் பகுதி. சுரமேளகலாநிதி மொழி பெயர்ப்பு.

இது வடமொழியில் இராமாமாத்தியர் என்பவரால் எழுதப்பட்ட சுரமேள கலாநிதியின் மொழி பெயர்ப்பு. மொழி பெயர்த்தவர், சிரோமணி திரு. என். எஸ். தேசிகன் அவர்கள்.

விலை ரூ. 1 0 0.

தொகுதி 6. பாடல்கள் 90.

நந்தன் சரித்திரம் இயற்றிய கோபாலகிருஷ்ண பாரதியாரால் பாடப்பெற்ற தனிக் கீர்த்தனங்கள். ஷை பாரதியாரிடம் நேரிற் பயின்ற மாணவர் பரம்பரையிற் கிடைத்த பழைய இசையமைப்புகளுடன் கூடியவை.

விலை ரூ. 3 0 0

தொகுதி 7. பாடல்கள் 75.

திரு. எம். பி. பெரியசாமித்தூரன் B. A., L. T.. அவர்கள் இயற்றிய கீர்த்தனங்களும், திரு. என். சிவராமகிருஷ்ண பாகவதர் அவர்கள் வகுத்த இசையமைப்புக்களும் அடங்கியுள்ளன.

(கைவசமில்லை) விலை ரூ. 2 0 0

தொகுதி **8.** பாடல்கள் 50.

சீகாழி அருணாசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகக் கீர்த்தனங்கள். இசையரங்குகளிற் பாடுதற்கு ஏற்றவை. பனங்காட்டூர் திரு. சிவராம பாகவதர் அவர்களாற் கிடைத்த பழைய இசையமைப்புக்களுடன் கூடியவை. ஒவ்வொரு பாட்டிற்கும் வரலாற்றுக் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன.

விலை ரூ. 3 0 0

தொகுதி **9.** பாடல்கள் 54.

திருப்பாம்புரம் திரு. டி. என். சாமிநாதபிள்ளையவர்களால் இசைவகுக்கப்பட்ட தில்லைவிடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை பாடல்கள் 25ம், செவற்குளம் கந்தசாமிப் புலவர் பாடல்கள் 13ம், சுரசதி 4ம், நகரம் முத்துவீரப்பக் கவிராயர் பாடல்கள் 12ம் அடங்கியுள்ளன. விலை ரூ. 3 0 0

தொகுதி **10.** பாடல்கள் 66.

நகரம் முத்துசாமிக் கவிராயர் அவர்கள் இயற்றிய கீர்த்தனங்கள் 35ம், பதங்கள் 31ம் அடங்கியுள்ளன. நகரம் முத்துவீரப்பக் கவிராயர் பாடிக்காட்டிய முறையைத் தழுவிச் சுரதாளக் குறிப்புகள் எழுதப்பட்டவை. விலை ரூ. 3 0 0

தொகுதி **11.** பாடல்கள் 75.

திரு. சுத்தானந்த பாரதியாரவர்களால் இயற்றப்பெற்றவை. திருவாளர்கள் டைகர் வரதாச்சாரியார், சங்கீத கலாநிதி க. பொன்னையா பிள்ளை, இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் முதலிய இசைவல்லுநர்களால் இசையமைப்புக்கள் வகுக்கப் பெற்றவை.

விலை ரூ. 3 0 0

தொகுதி **12**-ல் முதற்பகுதி. **மிருதங்க பாடப் புத்தகம்.**

மிருதங்க ஆசிரியர் மைலாட்டூர் திரு. வி. சாமிஐயரவர்களால் எழுதப்பெற்றது. முற்காலத்து மிருதங்க வித்துவான்கள் வாசித்த முறைகளையும், இக்காலத்தார் வாசிக்கும் முறைகளையும் தழுவியிருப்பது. மிருதங்கம் பயில்வோர் தெரியவேண்டிய அளவில் இசையிலக்கணங்களும் குறிக்கப்பெற்றுள்ளன. மாணவர்க்கு மிகவும் பயன்படுவது. விலை ரூ. 3 8 0

தொகுதி **13.** பாடல்கள் 75.

தருமையாதீன வித்துவான் தேவகோட்டை பாலகவி வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றுத் திருப்பாம்புரம் திரு. டி. என். சாமிநாத பிள்ளை அவர்களால் இசையமைக்கப் பெற்றவை. விலை ரூ. 3 0 0

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 10125[illegible]
EGMORE MADRAS
41598

தொகுதி 14. மாணிக்கப்பாட்டு. பாடல்கள் 152.
(இசை வகுக்கப்பெற்றவை 111. இசை வகுக்கப் பெறாதவை 41.)

யோகி திரு. சுத்தானந்த பாரதியார் அவர்களால் இயற்றப் பெற்று, வீணை ஆசிரியர் திரு. வி. எஸ். கோமதி சங்கர ஐயரவர்களால் இசை வகுக்கப்பெற்றவை. விலை ரூ. 3 8 0

தொகுதி 15. பாடல்கள் 75.

திரு. எம். பி. பெரியசாமித்தூரன் **B. A., L. T.,** அவர்கள் இயற்றிய கீர்த்தனங்களும், திரு. என். சிவராமகிருஷ்ண பாகவதர் அவர்கள் வகுத்த இசையமைப்புக்களும் அடங்கியுள்ளன. விலை ரூ. 3 0 0

தொகுதி 16. பாடல்கள் 65.

வையைச்சேரி இராமசாமி சிவன் அவர்களால் இயற்றப்பெற்ற கந்தபுராணச் சுருக்கக் கீர்த்தனை 40ம், மாணிக்கவாசக சுவாமிகளின் சரித்திரக் கீர்த்தனை 25ம் அடங்கியுள்ளன. காளிதாஸ் திரு. என். நீலகண்ட ஐயரவர்களால் இசையமைக்கப் பெற்றவை. ஒவ்வொரு பாட்டிற்கும் வரலாற்றுக் குறிப்புகள் எழுதப் பட்டுள்ளன. விலை ரூ. 3 0 0

தொகுதி 17. பாடல்கள் 50.

கவிகுஞ்சரபாரதியார், வேதநாயகம் பிள்ளை, அச்சுததாசர், திரிகூட ராசப்பக் கவிராயர், இராகவராமானுஜ தாசர், யோகி திரு. சுத்தானந்தபாரதியார், வித்துவான் திரு. மு. அருணசலம் பிள்ளை, வித்துவான் திரு. ஔவை துரைசாமிப் பிள்ளை, திரு. பாரதிதாசன், திரு. ராம. சுப்பிரமணியன் செட்டியார், திரு. ம. ப. பெரியசாமித்தூரன் **B. A., L. T.,** திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி, உடுமலை திரு. நாராயணக்கவிராயர், இசையரசு திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் ஆகியோர் பாடல்கள் 50 அடங்கியுள்ளன. இசையரசு திரு. தண்டபாணி தேசிகர் அவர்களால் இசை வகுக்கப்பெற்றவை. விலை ரூ. 3 0 0

இன்னும் பல தமிழிசைப் பாடற்றொகுதிகள் வெளிவரவுள்ளன.

இவை கிடைக்குமிடங்கள் :-

1. ரிஜிஸ்ட்ரார், அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.
2. தமிழிசைச்சங்கம் 8/9.சிங்கண்ணநாய்க்தெரு, ஜி.டி.சென்னை.
3. தமிழ்நாட்டிலுள்ள பல புத்தகசாலைகள்.